சுதேசமித்திரன்

20—6—48

விலை 4 அணா

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY



தாய்மார்கள் அறிவர்.

:: உட்வார்ட்ஸ் க்ரைப் வாட்டரின் ::
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

WOODWARD'S
GRIPE WATER
keeps baby well

I-WW108-111 W. WOODWARD LTD. LONDON. ENGLAND

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகாற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

கல்யாணத்திற்கு வேண்டிய பட்டு ஜவுளி

தினுசுகள் ஏராளமான டிஸைன்களில்

சரஸமான விலைகளில் கிடைக்குமிடம்

R. S. E.

ராதா ஸில்க் எம்போரியம்

(போன் : 84188.)

ஸன்னதி தெரு — மயிலாப்பூர் — மதராஸ்.

R. K. ராதாகிருஷ்ண செட்டியார்,
R. K. சாரநாத செட்டியார்,
புரொப்ரைட்டர்ஸ்.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?

இதோ லக்ஷ்மி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமுர்தம்.

40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ்: வால்டேர், ஆர். எஸ். | லக்ஷ்மி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.



எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்

M. R. பார்த்தசாரதி ஐயங்கார்,

28, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு,

திருவல்லிக்கேணி, மதராஸ்.

உங்கள் எதிர்காலம்

பணமில்லை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,

Astrologer & Journalist, MADRAS 5.

பரிசு! பரிசு!!

போலி பாக்குத் தூள்களை வாங்கி ஏமாறுகீர்கள். பரிமள பாக்குத் தூள்களுக்கெல்லாம் அரசனான ஆர். கிருஷ்ணா பரிமள பாக்குத் தூளையே உபயோகியுங்கள்.

144—50 பொட்டலம் கொண்ட கேஸ் 1க்கு ரூ. 85. 50—0-0-3 பொட்டலம் 0-10-0. N. B. 25 காலி உரை அனுப்பினால் 50—0-0-3 பொட்டலம் இனாம்.

S. M. கிருஷ்ணா அண்டு கோ.,

2-137, ஆதியப்ப நாய்க்கன் தெருவு, மதராஸ் 1.

மாதம் ரூ. 150 சம்பாதிக்க வேண்டுமானால் ரியல் அசோகா அண்டு கோ. வில் வியாபார துடர்ச்சி வைத்துக் கொள்ளுங்கள்.

எல்லா வகை செண்டுகளும், ஏர் ஆயில்களும், வாஸலின், தலைவலி பாம், நீலகிரி தைலம், சிரங்கு மருந்து, பாக்கு தூள், மூக்கு பொடி புகையிலை, பர்பியூமும், அரை சேர் பர்பியூம் பாக்கு தூள் டின்களும் தயாரிக்கப்படுகிறது. விற்பனையாளர் தேவை. ரூ. 25 M. O. அனுப்பி சாம்பிள் செட் பெறுக.

N B. ஒரு கேஸ் பாக்குதூள் தயாரிப்பதற்கான ரியல் அசோகா பர்பியூம் அரை சேர் பர்பியூம். கொப்பரை சீவல் கால் சேருடன் ரூ. 10. முந்துங்கள்.

ரியல் அசோகா அண்டு கோ.,

40, கிடங்கு தெரு, மதராஸ் 1.

ஜீவ வசிய பரம ரஹஸ்யம்

இவ்வுலகவாழ்க்கையில் வெற்றி பெற விரும்புவோருக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமாகும். மெஸ்மெரிஸம், ஹிப்னாடிஸம், மானிட வசியம் முதலிய சாஸ்திரங்களின் இரகசியத்தை அனுபவ சாத்தியமாக விளக்கிக்கூறும் அருமையான இரகசிய நூல். இந்நூலைப்படித்த பின் இதன் அருமையை நீங்கள் நன்குணர்வீர்கள். கண் கவரும் வனப்பு வாய்ந்த சிறந்த நூல். இதன் முன் பதிப்புக்களில் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் செலவாயிருப்பதே இதன் மேன்மையைக் குறிக்கும். இன்றே உங்கள் பிரதிக்கெழுதுங்கள்.

விலை ரூ. 4—8—0

தபாற் செலவு அணா 10.

எஸ். ஜே. புக் டெப்போ

30, சாந்தோம் : சென்னை 4.

கொழும்பில் கெய்ஸர் வீதி, 166 K. மதார் சாஹிப் இடமும் கிடைக்கும்.

விக்டரி பாம்



சக்தி வாய்ந்த அற்புதமான மருந்து, முடக்கு வாதம், கீல் வாதம், பிடிப்பு பல்வலி, பலவித சரும நோய்கள் அனைத்தும் குணமாகும். நன்றுக நீர் இறங்காமல் அவஸ்தைப்படுவோருக்கு தொப்புளைச் சுற்றி ஒத்தடம் கொடுத்தால் சரிப்படும். விலை புட்டி ரூ. 1—8—0.

தேசபந்து ஹர்பல்ஹோம்

Deshbandhu Herbal Home

7, Ganga Prasad Mukerji Road,

Bhowanipore Calcutta 25.

தொண்டைப் புண், ஜலதோஷம் இன்புளுயன்ஸாவுக்கு

சமனமூட்டி வியாதி பரவுதலை தடுக்கும் பெப்ஸ் உதவி தேவையாகவிருக்கும்

நல்ல ருசியுள்ள பெப்ஸ் வில்லையில் மருந்து சத்துக்கள் இருப்பதால் அது தொண்டைக்கும் சுவாசப்பைக்கும் சமனமூட்டும். பெப்ஸின் சமனமூட்டும், குணமாக்கும் கிருமிநாச ஆவிகள் தொண்டை, மார்பு, சுவாசப்பை இவற்றுக்கு சுவாசத்துடன் கலந்து பலனளிக்கக்கூடியவை. புண், கரைச்சல் வீக்கம் இவற்றை குணமாக்கி, கிருமிகளை நாசம் செய்து அடைப்பை நீக்கும்.

ஏஜண்டுகள்:— மெஸர்ஸ். தாதா & கம்பெனி பி. டி. மதராஸ்

பெப்ஸ் மருந்து சத்துக்கள் ஒவ்வொரு சுவாச உறுப்புக்கும் போவதைக் குறிக்கும் படம்.



PEPS

கிருமி நாச

தொண்டை & மார்பு வில்லைகள்

தொண்டை, மார்பு சுவாசப்பை தகராறுகளுக்கு சிறந்த பலனளிக்கவல்ல நிவாரணி

Lovely long hair

100% மருந்து பூர்வமானது; வாசனையுள்ளது, மூலிகைச் சத்துக்கள் நிறைந்த கேச மருந்து. மூளைக்குக் குளிர்ச்சியளித்து கேசம் வளர உதவும்

VIJAYA CHEMICAL & TOILET WORKS
21 & 22 Suriyanarayana Chetty St,
Royapuram, Madras.

குகன் சோப்புகள்



சலவைக்கு சிறந்தவை

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

முதல் பாகம் கைவசமில்லை

இரண்டாம் பாகம்	,,	ரூ. 2.
மூன்றாம் பாகம்	,,	ரூ. 2.

தபால் செலவு அணா 10.

முன்பணம் அனுப்பவேண்டும்.

V. P. P. அனுப்புவது கிடையாது.

மானேஜர்:
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட்ரோட், மதராஸ்.

டாக்டர் பால்ஸ் லோடஸ் ஹனி மிக அற்புதமான மூலிகை—கண்ணில் பூ விழுதல், கிளாகோமா, மற்றும் கண் உபாதைகளை மாயமாக குணமாக்கி பார்வையை அதிகரிக்கச்செய்யும். விலை புட்டி 1—க்கு ரூ. 2—8—0.

டாக்டர் பால்ஸ் நயம் கஸ்தூரி : பரிசுத்தத்திற்கு உத்தரவாதம். தோலா விலை ரூ. 80. அரைக்கால் தோலாவிற்குக் குறைந்து சப்ளை செய்ய முடியாது.

வீட்டிலேயே வாசனை தைலங்கள் தயாரித்தால் பணம் மிச்சமாகும்: கீழ்க்கண்ட மோஹினி பியூர் செண்டுகளில் ஏதேனும் ஒன்றை தேங்காய் எண்ணெய், மணிலா, ஆமணக்கு அல்லது நல்லெண்ணை யில் சேர்த்தால், மலிவான விலையில் சிறந்த வாசனைத் தைலம் கிடைக்கின்றது. இலவசமாக எண்ணெயை சிவப்பாக்கும் ஆல்கானட் வேர்கள் அனுப்புவோம்.

மோஹினி பியூர் செண்ட் ரகங்கள்.

1.	சம்பக் செண்ட்	ரூ. 2—0.	8.	ரோஜா செண்ட்	ரூ. 1—8.
2.	கியோரா	,, 2—0.	9.	சுரங்கி	,, 1—8.
3.	காஸ	,, 2—0.	10.	லில்லி	,, 1—0.
4.	போகுல்	,, 1—8.	11.	லோடஸ்	,, 1—0.
5.	ஜாஸ்மின்	,, 1—8.	12.	ஆரஞ்சு	,, 1—0.
6.	கதம்பம்	,, 1—8.	13.	மோதியா	,, 1—0.
7.	ஹேனா	,, 1—8.	14.	கோலோன்	,, 1—0.

அரை அவுன்ஸ் புட்டிகளில். பாக்கிங், போஸ்டேஜ் வி. பி. பி. தனி.

S. PAUL & Co., Perfumers (Dept. S W.) 4, Hospital St., **Calcutta 13.**

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே !

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக் கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில தேவையுள்ளோர் தபால் சிலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெறறுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனம்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM

189 வக்கீல் புதுதெரு- P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர். 179 SEA ST., COLOMBO.

ஸாயி கவசம்

(உத்தரவாதம் பெற்றது)

பரீக்ஷை, தொழில், வழக்கு, வியாபாரம், காதல் இவை வெற்றிக்கும், புத்திரன், தனம், அதிகாரம், ஞானம் இவை விருத்திக்கும், ஆரோக்யம், சுகம், சம்பத்து கைகூடுவதற்கும் இன்றியமையாதது. பூஜை செய்தனுப்புவதால் ஜன்ம நக்ஷத்திரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை. பலனில்லையேல் பணம் வாபீசு. விலை ரூ. 3—8.

ஸ்பெஷல் ரூ. 10. தபால் செலவு உள்பட. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

ஸாயி ஜோதிடர் ஸாயி ஆஸ்டிரல் ஸ்டுடியோஸ், உறையூர் - திருச்சி.

டெலிபோன்: 2246. தந்தி : கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா

ஸோல் புரொப்ரைட்டர்,

ஸ்பேட் கிளாவர் & ஆர்டீன் பீடிகள்

37, மண்ணடி, மதராஸ்.

தந்தி விலாசம்: "சுகந்தம்."

சுக வாழ்விற்கு சுகந்தம் நிறைந்த
"3001" ஜவ்வாது பத்திகள்
இன்பம் தரும் இனிய மணம் நிறைந்த
"301" ஜவ்வாது பத்திகள்
நறுமணத்திற்கு நற்கியாதி வாய்ந்த
"31" ஜவ்வாது பத்திகள்
ஆரோக்கிய வாழ்விற்கு
"ஆசாத்" பாக்கட் பத்திகள் &
"ஆசாத் ஹிந்த்" குழாய்பத்திகள்

S. V. முருகேசன் & பிரதர்ஸ்,
நெ. 39 லெக்ஷிமிபுரம் 6-வது தெரு, மதுரை.
பிராஞ்சு: நெ. 4 அப்பாஜிராவ் தெரு, பெங்களூர் சிடி.
டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

வாரியர்
பிருங்காமலகாதி
தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால் செலவு வேறு.)
ஆர்ய வைத்தியர்
கே. எஸ். வாரியரின்
அஷ்டாங்க ஆயுர்வேதசாலா
தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம்: 1936.)

ஸ்தாபிதம் 1924.
பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷை பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோநிதி" தியாகராயநகர், மதராஸ் 17.

"**பீம-வீர்**" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்திசெய்து விருத்தியாக்கி, சரீரபுஷ்டியை உண்டாக்கி நிரந்தர வலுவைக் கொடுப்பதில் நிகரற்ற அவுஷதம்.
40-நாள் மருந்து ரூ. 3-12-0.
பாக்கிங், தபால்சார்ஜ் கிடையாது.
ஜமதக்னி ஔஷதாலயா,
26, வடக்கு மாட வீதி,
மயிலாப்பூர் — மதராஸ்.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"
(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—	திருச்சி கிளை:—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி	15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசிகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285 Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

கண்ணில் பூவிழுதல்

டிகான்ஸ் ஐக்யூர் (ரிஜிஸ்) ஒரு உத்தரவாதமான நிவாரணி. கண் வியாதிகள் எதற்கும் சிறந்தது. அபாயமற்றது. 1000-க்கணக்கானபேர் ஆபரேஷனில்லாமல் சொஸ்தமாயுள்ளனர். உலகப் பிரசித்திபெற்றது. வெற்றிக்கு உத்தரவாதம். விவரம் இலவசம். விலை ரூ. 3. தபால் செலவு அணா 12.

செவிடு

முழுச்செவிடு அல்லது அரைச்செவிடு காதில் இரைச்சல் மற்றும் எக்காரணத்தினாலும் எவ்வித நோயானாலும் நாலே வாரத்தில் சொஸ்தப்படுத்துவதற்கு உத்தரவாதம். ஹானியற்றதும் உடனே பலனளிப்பதுமான மருந்து. கியாதி பெற்ற மூலிகை மருந்து. விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

குஷ்டம், வெண்குஷ்டம்

தீராத நோயும் தீரும். உடம்பு முழுவதுமோ அல்லது பாகத்தில் மட்டுமோ இருந்தாலும் சரி, எமது கியாதிபெற்ற ஹானியற்ற மூலிகைகளினால் நாலே வாரத்தில் பூரண குணம் காண்பீர்கள். விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

KAMALA WORKS,
6, Panchpota, BENGAL.

ஸ்ரீ சாயிநாதய நம :

அனுபவத்துடனும், ஆராய்ச்சியுடனும் பலன்கள் சொல்லப்படும்.

ஒரு வருஷ பலன்	ரூ. 5.
விவரமான ஒரு கேள்விக்கு பலன் எழுத	,, 1.
விவாக பொருத்தம்பார்க்க	,, 3.
ஆயுள் பலன் எழுத	ரூ. 100.

THE SOUTH INDIAN ASTROLOGICAL BUREAU,
229, Walltax Road, Madras 3.

45 வருஷமாகப் புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்:

தாளக பஸ்பம்

காசம், சளி, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு 7 விதமும் அஸ்திசுரம், எலும்புருக்கி (T. B.) க்ஷயரோகமும் திருகிறது. ½ மண்டல பஸ்பம், தாளிசபத்திரி சூரணமும் ரூ. 10.

அப்ரேக் செந்தூரம்

அடிக்கடி போகும் நீர், தாகம், வரட்சி, எலும்புறுக்கி, பவுத்திரம், நீரில்உள்ள சர்க்கரைசத்து பூரண சுகமாகிறது. ½ மண்டலம் அனுபானத்துடன் ரூ. 15.

எவ்வித மருந்துகள் சாப்பிட்டும் தீராத கொடிய வியாதிகளுக்கு வியாதி விவரம் தெளிவாக எழுதினால் தகுந்த உயர்ந்த மருந்துகள் கொடுத்து குணப்படுத்துகிறோம்.

வைத்தியபதி
R.M. நாராயணசாமி பிள்ளை
தன்வந்திரி வைத்தியசாலை,
பழனி. (S. I.)

சுதா மோகன ரஞ்சிதம்

3-பாகங்கள் விலை ரூ. 2-8-0
தபால் செலவு பிரத்யேகம்
மானேஜர்: "சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை

வாழிய செந்தமிழ்! சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்!
வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ ஆனி௴ 7௳ ★ 1918-௵ ஜூன்௴ 20௳ No. 21

உதகை மகாநாடு முடிவு

உதகை மகாநாட்டின் மூலம் உடனடியாக ஆசிய-தூரக்கிழக்கு நாடுகள் மறுமலர்ச்சி பெற்றுவிடுமென்று யாரும் கனவு கண்டதில்லை. எனினும் கூடியவரை துரிதமாக இத்தேசங்கள் புனருத்தாரணமடைய இம் மகாநாடு அடிகோலுமென்றே பலரும் எதிர்பார்த்தனர். குறிப்பாக இப்பிராந்தியத்தில் வறுமையொழிந்து வாழ்க்கைத்தரம் உயரத் தேவையான குறுகிய கால, நீண்டகாலத்திட்டங்கள் உருவாவதற்கு இம்மகாநாட்டின் நடவடிக்கைகள் விசேஷமாக உதவக்கூடுமென்றே இங்குள்ள மக்கள் எண்ணியிருந்தார்கள். எனினும் விவாதத்தின்போக்கு எங்கும் கொடிய ஏமாற்றம் விளைத்திருப்பது திண்ணம். புனருத்தாரணத்தைப்பற்றிய இனங்களைப்பற்றி ஆராய பல கமிட்டிகள் ஏற்பட்டிருப்பது உண்மைதான். சாரமான விஷயங்களில் துரிதமான பலன் எதுவும் ஏற்படுவதற்கு அம்மகாநாட்டில் மெஜாரிட்டி பலமுள்ளவர்கள் சிறிதும் இடந்தர மறுத்துவிட்டனர்: பொதுவாக சர்வதேச மகாநாடுகள் பெரிதும் ஆங்கிலோ-அமெரிக்க கோஷ்டியின் கைப்பாவைகள்தான் என்பது ஏற்கெனவே நாம் உணர்ந்ததுதான். இவ்வுண்மையை நமக்கு இன்னும் அருகிலேயே அக்கோஷ்டி நிரூபித்துக்காட்டியதுதான் உதகை மகாநாட்டின் மூலம் நாம் கண்ட பலன்.

ஆசிய-தூரக்கிழக்குப் பிராந்தியத்தில் பொருளாதாரப் புனருத்தாரணத்துக்கு வழி காண்பதற்காகக் கூடிய மகாநாடு இது. இதற்கு அனுகுணமான முறைகளில் கவனம் செலுத்தி இந்நோக்கம் கூடியவரை விரைவில் ஈடேறுவதற்கான திட்டங்களை வகுப்பதொன்றே இதில் கலந்துகொண்டவர்களது கருத்தாயிருக்கவேண்டுமல்லவா? எனினும் மெஜாரிட்டி பலமுள்ளவர்களது உள்ளப்போக்கு அதுவன்று. இப்பிராந்தியத்தின் பொருளாதாரத்தைப்பற்றி அவர்களுக்கு அவ்வளவாகக் கவலையில்லை. தங்கள் சுயநலத்தைப்பொறுத்த அரசியல் நோக்கங்கள்தான் தங்களுக்குப் பிரதானமென்று அவர்கள் காட்டிக்கொண்டுவிட்டனர். முக்கியமாக இந்தோனேஷியாவைப்பற்றி இம்மகாநாட்டில் ஏற்பட்ட முடிவு நமக்கு உணர்த்துவது இதைத்தான்.

இப்பிராந்தியப் புனருத்தாரணத்துக்கு இந்தோனேஷியாவின் ஒத்துழைப்பு எவ்வளவு அத்தியாவசியமென்று சொல்லத் தேவையில்லை அத்தகைய ஒத்துழைப்பை அளிக்கக்கூடியது அங்குள்ள குடியரசு சர்க்கார் தான் என்பதிலும் சந்தேகத்துக்கிடமில்லை. எனினும் அவர்களுக்கு இம்மகாநாட்டில் ஸ்தானம் கொடுக்க மறுக்கப்பட்டுவிட்டது. தற்போதைய மறுப்புக்கும் இப்பிரச்னையை ஒத்திவைப்பதென்ற முடிவுக்கும் உண்மையில் வித்தியாசமில்லை ஐரோப்பாவிலிருந்து இந்தோனேஷியாவுக்குச் சென்று அங்கு அக்கிரமமாகத தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயன்றுவரும் டச்சு ஏகாதிபத்திய வெறியர்களுக்கு இப்பிராந்திய மகாநாட்டில் அங்கம் வகிக்க உரிமையுண்டு. ஆனால் ஆசிய-தூரக்கிழக்கு பிராந்தியங்களில் ஒரு பகுதியினரான இந்தோனேஷியருக்கு இதில் இடம்பெற உரிமை கிடையாது! டச்சுக்காரர் எழுப்பிய அபத்தமான ஆட்சேபனைக்கு ஆங்கிலோ—அமெரிக்க கோஷ்டி ஆதரவு காட்டச் சிறிதும் கூசவில்லை.

ஆனால் இதற்கான காரணம் வெட்ட வெளிச்சமானதுதான். ஆங்கிலோ அமெரிக்கத் தலைமையில் உருவாகியுள்ள மேற்கு ஐரோப்பிய யூனியனில் ஹாலந்தும் ஒன்று. நிற அபிமானமும் இன்னொரு காரணமாயிருக்கக்கூடும். இவைகளோடு இந்தோனேஷியா டச்சு பிடிப்பிலேயே இருந்து வரச்செய்வதன் மூலம், அவர்கள் நடத்தும் சுரண்டலில் தங்களுக்கும் விசேஷப் பங்கு கிடைக்கக்கூடுமென்பது அமெரிக்க-பிரிட்டிஷ் கோஷ்டியின் நினைப்பாயிருக்க வேண்டும். ஆசிய நாடுகளில் பல இந்தோனேஷியாவை இம்மகாநாட்டில் சேர்த்துக்கொள்ள



புதிய டில்லியில் நடந்த அகில இந்திய சித்திரக் காட்சிக்கு வந்த லேடி மவுண்ட்பேட்டனும், பண்டித நேருவும் ஸ்ரீ ஆர். என். சக்ரவர்த்தி எழுதிய மகாத்மா காந்தி படத்தைப் பார்த்தனர். இடது கோடியில் நிற்பவர் சித்திரக்காட்சிச் சங்கக் காரியதரிசி ஸ்ரீ அனில் ராய் செளத்ரி.

விரும்பியும், மேனாடுகள் ஒன்று சேர்ந்து அவ்விருப்பத்தில் மண்ணள்ளிப் போட்டுவிட்டன. இந்த விபரீதத்துக்கு இரு ஆசிய நாடுகளும் உடந்தையாயிருந்தது கண்டு சிலர் ஆச்சரியமடையலாம். ஆனால் சீனாவில் தற்போதுள்ள சர்க்கார் தங்கள் வாழ்வுக்கு தங்கள் சொந்த மக்களின் ஆதரவை விட அமெரிக்க- தயவை நம்பி இருப்பவர்கள். ஸயாமோ அமெரிக்க-பிரிட்டிஷ் கோஷ்டியைப் பகைத்துக் கொண்டால் தனக்கு என்ன தீங்கு நேருமோ என்று அஞ்சியே எத்தரப்பிலும் வாக்களிக்காதிருந்திருக்க வேண்டும்.

முக்கியமாக தொழில் வளர்ச்சி ஏற்படுவதன் மூலமே இப்பிராந்தியத்தில் வாழ்க்கைத் தரம் துரிதமாக உயர முடியும். இதற்கு வேண்டிய சாதனங்களை உடனடியாக நமக்கு அனுப்பி உதவக்கூடியது அமெரிக்கா ஒன்றே. ஆனால் அது ஏற்கெனவே கையை விரித்துவிட்டது. வெளியேயிருந்து நமக்கு உதவி கிடைக்காமல்போனாலும், இப்பிராந்தியத்துக்குள்ளிருக்கும் நாடுகளாவது பரஸ்பரம் உதவி செய்துகொள்ள அமெரிக்கா போன்ற தேசங்கள் வழிவிடலாமல்லவா? ஆனால் அதை அதற்கும் இடந்தர மறுக்கின்றன. தொழில் துறையில் ஜப்பானியருக்குள்ள திறமை அனைவரும் கண்டதுதான். தக்க வசதியிருக்குமாயின் மீண்டும் அவர்கள் உற்பத்தியை விசேஷமாகப் பெருக்கி, குறிப்பாக இயந்திர சாதனங்கள்போன்ற இனங்களில் ஆசிய-தூரக்கிழக்கு நாடுகளின் தேவையை விசேஷமாகப் பூர்த்திசெய்யக் கூடும். எனினும் இக்கருத்தடங்கிய தீர்மானமொன்று இம்மகாநாட்டில் பிரேரிக்கப்பட்டபோது அதை ஆங்கிலோ-அமெரிக்க கோஷ்டியும் அதற்கு வால் பிடிப்பவர்களும் பலமாக எதிர்க்கக் கிளம்பிவிட்டனர். ஜப்பான் விஷயத்தில் எத்தகைய முடிவும் செய்யும் அதிகாரம் தூரக்கிழக்குக் கமிஷன் ஒன்றுக்குத்தானும் எனவே இந்தத் தீர்மானத்தை அங்கீகரிப்பது அக்கமிஷனின் அதிகாரத்தில் குறுக்கிடுவதாகுமாம். அக்கமிஷனில் அமெரிக்கா வைத்ததுதான் சட்டமென்பது பகிரங்க ரகசியம். எனவே ஜப்பான் விஷயத்தில் அமெரிக்கா நடத்தும் யதேச்சாதிகாரத்துக்கு எவ்விதத்திலும் பாதகமேற்படக்கூடாதென்பதே இத்தீர்மானத்தை எதிர்த்தவர்களின் கருத்து. இந்நிலையில் இப்பிராந்தியப் புனருத்தாரணத்துக்கு எவ்விதத்திலும் உதவாததுடன், முட்டுக்கட்டை போடுவதும் அமெரிக்க, பிரிட்டிஷ் கோஷ்டியின் திட்டமோ என்று யாரும் சந்தேகிப்பது இயற்கை.

அது எவ்வாறாயினும், ஆசிய-தூரக் கிழக்கு நாடுகள் வெளியுதவியை எதிர்பாராமல் தங்கள் சொந்த முயற்சியின் மூலமே தங்கள் இன்னல்களைக் களைய வழிதேடியாக வேண்டுமென்பது தெளிவாகி விட்டது. நாம் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் இதற்காக நாம் மனமொடியத்தேவையில்லை. சுயமுயற்சியாலேயே தொழில் துறையில் முன்னேற சிறிது அதிகமான காலமாகலாம். ஆனால் யுத்த சமயத்தில் முனைந்ததுபோல நாம் ஒருமுகமாக தீவிரமாக முயற்சி செய்வோமாயின் அந்தக்காலத்தை விசேஷமாக மட்டுப்படுத்தக்கூடும். ஆசிய-தூரக் கிழக்கு நாடுகள் இத்துறையில் உடனடியாகக் கவனம் செலுத்துமென்று நம்புகிறோம்.

★

இரவல் பிழைப்பு



டி. எஸ். ஜயராமன் பி. ஏ.

மகா வீரர்களாகிய கௌரவர்கள் நூற்றுவரையும் பிள்ளைகளாகப்பெற்ற காந்தாரிதேவி ஒரு சமயம் "கஜ பூஜை" என்ற ஒரு பெரிய விரதத்தை அனுஷ்டிக்க விரும்பினாள். யானையை வைத்து சாஸ்திரோக்தமாகச் செய்யப்படும் பூஜை அது. கௌரவர்கள் தங்கள் பட்டத்து யானையை வைத்து. அந்தப் பூஜையை சிறப்பாகச் செய்ய ஏற்பாடுகள் செய்துவிட்டார்கள். பூஜையன்று முதல் நாள் அஸ்தினாபுரமே அமளி, துமளிப்பட்டது. பாண்டவர்களின் தாயாகிய குந்திதேவி இந்த விஷயம் கேள்விப்பட்டுத்தானும் அந்த பூஜையைச் செய்ய முடியவில்லையே என்று ஏங்கினாள் இது பாண்டு புத்திரர்கள் காதில் அதுவும் பீமார்ச்சுனர்கள் காதில் விழுந்தால் கேட்கவா வேண்டும்! அவர்களும் தங்கள் தாய் அந்த கஜபூஜையைச் செய்ய வேண்டுமென்று விரும்பினார்கள். இவர்களுக்குப் பட்டத்து யானை ஏது! முதலில் பட்டமே இல்லையே! அர்ச்சுனன் சரக்கூடு கட்டி பீமனைத் தேவலோகத்திற்கு அனுப்பினான். அவ்விடம் இந்திரனிடமிருந்து பீமன் ஐராவதத்தை இரவலாக வாங்கி வந்தான் காந்தாரி வெறும் பட்டத்து யானையை (கறுப்பு யானையை) வைத்துப் பூஜை செய்த அதே சமயத்தில் குந்திதேவி யானைகளுக்குள் சிரேஷ்டமான வெள்ளை யானையை வைத்துப்பூஜை செய்தாள். பூஜை முடிந்ததும், பீமன் ஐராவதத்தைச்சரக்கூட்டின் மூலம் அதன் இருப்பிடம் சேர்த்துவிட்டுத்திரும்பினான். இந்தப்பிரகாரம் மகாபாரதத்தில் ஒருகதை இருப்பதாகப் பௌராணிகர்கள் கூறுகிறார்கள்.

மேற்கண்ட வரலாறிலிருந்து இரவல் வாங்கும் பழக்கம் புராண காலத்திலேயே இருந்திருக்கிறது என்று நினைக்க இடமுண்டு. அரசர்கள் ஒருவருக்கொருவர் சைன்யங்களை இரவலாகக் கொடுத்தும், வாங்கியும் வந்திருப்பதாகப் புராணங்களிலும், சரித்திரத்திலும் காணலாம்.

ஆனால் இரவல் என்ற பழக்கம் மிகப்பெரிய காரியங்கள் சம்பந்தப்பட்டவரையில் இருந்ததேயன்றி அல்பமான விஷயங்களுக்கு வெகு சகஜமாகக் கையாளப்படவில்லை என்று தெரிகிறது. இந்த "இரவல்" பழக்கமானது பிற்காலத்தில் வெகு ஊக்கமாக விருத்தி செய்யப்பட்டு இன்று நாம் நம் கண்முன் காண்கின்ற உன்னத ஸ்திதியை அடைந்திருக்கிறது.

இந்த இரவல் வாங்கும் பழக்கத்தைக் கையாளுபவர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். வெகு அவசரமான காரியங்களுக்கு வேறு வகையின்றி எப்பொழுதாவது ஒரு பொருளை இரவல் வாங்குபவர்கள் ஒரு சாரார். இவர்களுக்கு இரவல் தாராளமாகக் கொடுக்கலாம். கொடுத்த பொருள் பழுதடைந்தாலும் வேறு புதிதாகக் கொடுத்துவிடக் கூடிய மனோபாவம் உள்ளவர்கள் இவர்கள். அப்படி அவர்கள் வேறு புதுப்பொருளை வாங்கிக் கொடுத்தாலும் அதைப் பெற்றுக் கொள்ள நமக்கு மனம் துணியாது. மற்றொரு சாரார் இந்த இரவல் பழக்கத்தை ஏதோ பால்யத்தில் தொடங்கி, பிற்பாடு அது ஒரு சாசுவதமான வியாதியாக முற்ற விட்டுவிட்ட பேர்வழிகள். இவர்கள் இரவல் பழக்கத்தைப் பள்ளியில் 2-வது 3-வது வகுப்பில் "டிராயிங்" கிளாஸில் ரப்பர் இரவல் வாங்குவதிலிருந்து தொடங்கி மேல் வகுப்புகளில் பள்ளித் தோழர்களிடம் மைக்கின் இரவல் வாங்குவதில் தேர்ச்சி பெற்று, பவுண்டன் பேனா இரவல் ரிஸ்ட்வாச்சு இரவல், இவைகளில் பழகிப் படிப்படியாக இந்த வித்தையை அபார ஸாதகம் செய்பவர்கள் என்று தோன்றுகிறது.

இத்தகையவர்கள் ஒரு பொருளைப் பார்த்த உடனேயே அதை இரவல் கேட்கவேண்டுமென்று அவர்கள் மனதில் தோன்றிவிடும். "ஏன் ஸார், இது உங்கள் கிராமபோனா? எனக்குத் தெரியவே தெரியாதே. இந்த மெஷினையும் நல்ல பிளேட்டாக ஒரு 10 பிளேட்டும் கொடுங்கள் ஸார், நாளை 'மார்னிங்' கொண்டுவந்து கொடுத்து விடுகிறேன்" என்பார் ஒருவர். உடனே எடுத்துக் கொடுத்தால் "ஊசி டப்பா இதற்குள்ளேயே இருக்கிறதோ இல்லையா?" என்பார் ஊசி இல்லை என்றால் நம் பிளேட்டுக்குத்தான் ஆபத்து. பழைய ஊசியை வைத்துச் சக்கை போடு போட்டு விடுவார்! ஆகையால் அவர் கேட்கு முன் நாம் ஊசி டப்பாவைக் கொடுத்துவிட வேண்டும். மெஷினையும் பிளேட்டுகளையும் நாம் இரண்டு முறை ஆளனுப்பித்தான் திருப்பி எடுத்து வர வேண்டும். அவராகக் கொண்டு வந்து கொடுக்கமாட்டார் சில சமயம் ஒன்றிரண்டு பிளேட்டுகள் உடைந்தும் திரும்பி வருவதுண்டு. மெயின் ஸ்பிரிங் உடைவதும் உண்டு. இதில் ஒரு ஆச்சர்யமான

கிராமபோனை இரவல்கேட்டு...

'...அதிகப்படி காணுமா?...'

விஷயம் என்னவென்றால் எந்தப் பிளேட்டில் நமக்குப் பிரேமை அதிகமோ அதுதான் உடைந்து திரும்பி வரும். இந்தப் பிளேட்டில் பாடகர் பெயரும், பாட்டின் பெயரும் அச்சடிக்கிறார்களே, இதைத் தங்க எழுத்துக்களில் அமைக்கிறார்களே இதில் என்ன லாபம்? ஒரு குறிப்பிட்ட கோணத்தில் வைத்துப் படித்தால்தான் இதில் உள்ள எழுத்துக்கள் தெரியும். இதற்காகக் காகித உறையின் மேல் இந்த விவரங்களைப் பேனாவால் எழுதிவைத்திருந்தால் இரவலுக்குப் போய்வந்த பிளேட்டுப் பெட்டியில் ஒரு பிளேட்டாவது தவறிப்போய் அதற்கு ஏற்பட்ட உறையில் இருக்காது. இந்த சங்கடம் கிராமபோன் வைத்திருப்பவர்கள் தவிர்க்கமுடியாத ஒரு தொல்லை.

வெகு ஸகஜமாகக் கொஞ்சம் கூட ஸங்கோஜமில்லாமல் இரவல் கேட்கக்கூடிய பொருள் எது வென்றால் குடைதான். செய்திப் பத்திரிகையை இதற்குச் சமானமாகச் சொல்லலாம். குடை வேண்டுபவர்கள் அதன் சொந்தக்காரரைக் கேட்டுத்தான் எடுக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு கிடையாது. மழை பெய்து கொண்டிருந்தால் எந்தக் குடையையும் எடுக்க எவருக்கும் உரிமையுண்டு என்பது ஸம்பிரதாயத்தால் நிலை நாட்டப்பெற்ற உண்மை. இந்தப் பொருளைச் சில சமயம் நாமாகவே வலிய இரவல் கொடுக்கும்படி நேரிடுவதும் உண்டு. மாலை வேளைகளில் வீட்டிற்கு வந்து நண்பரொருவர் ஸ்வாரஸ்யமில்லாமல் பேசிக்கொண்டிருக்கும் பொழுது விடாதமழைபெய்து அவரும் மழைவிட்டுத்தான் போவது என்று தீர்மானம்செய்து விட்டாரானால் நீங்கள் மெதுவாகச் சமையல் அறைப்பக்கம் வந்து சாப்பாடு ஒருவருக்கு அதிகப் படியாகக்காணுமா என்று பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் குடையை எடுத்துக் கொண்டுவந்து கொடுத்து வந்தவரை அனுப்ப வேண்டும். இந்தக் குடை விஷயத்தில் என்ன விசேஷமென்றால் கிராமபோன் மாதிரி இதை ஆளனுப்பி எளிதில் வாங்க முடியாது. ஏனென்றால் உங்கள் நண்பர் அதைவேறு ஒருவருக்கு இரவல் கொடுத்திருப்பார் அல்லது எங்கேயேனும் வைத்து மறந்திருப்பார்.

இரவல் கொடுக்கும் பொருள்களில் வெகு சீக்கிரமாக நொடிப் பொழுதில் நஷ்டத்தை விளைவிக்கக்கூடிய பொருள் எது வென்றால் பௌண்டன் பேனாதான். ஒரு ஸமயம் ஒரு நண்பருடன் பேசிக்கொண்டு தெருவில் நின்ற பொழுது, அவருக்கு மணியார்டர் ஒன்று வந்தது. "ஸார், ஒன் மினிட், பேனாவைக்கொடுங்கள்" என்று என் விலை உயர்ந்த பேனாவை வாங்கிக் கையெழுத்துப் போட்டுவிட்டுத் "தாங்ஸ்" என்று சொல்லிப் பேனாவை மூடி என்னிடம் கொடுத்தார். மறுபடியும் நான் பேனாவைத்திறந்தபொழுது அதன் முற்கள் ஒன்றன்மேல் ஒன்று ஏறிக்கொண்டிருந்தன.

கார் வைத்திருப்பவர்களுக்கு இந்த இரவல் பேர்வழிகளால் ஏற்படும் தொல்லை இப்பொது கொஞ்சம் குறைவு. ஏனென்றால் காரை தாராளமாக அனுப்புகிறேன், என் பெட்ரோல் கூபான் தீர்ந்துவிட்டது, கொஞ்சம் பெட்ரோல் மாத்திரம் சம்பாதித்துக் கொள்ளுங்கள், அப்படி வாங்கும் பொழுது எனக்கும் 2-காலன் சேர்த்து வாங்குங்கள்" என்று சொல்லிவிட்டால் ஆசாமி மெல்ல நழுவிவிடுவார்.

மேற்கண்டவையெல்லாம் நம் சொந்த வியவகாரங்கள். இதில் அந்தப்புற வியவகாரங்கள் வேறு இருக்கின்றன. அவர்களுக்குள் இரவல் கொடுத்து வாங்கப்படும் சாமான்கள் மாச்சல்லடை, தேன்குழல் நாழி, தேங்காய் துருவி, 'நிட்டிங்' ஊசி, கத்திரிக்கோல். இத்யாதி நான் ஒரு சமயம் பேப்பர் கத்தரிப்பதற்காகக் கத்தரிக்கோலைத் தேடிக் கண்டுபிடித்து எடுத்தும் அதில் இரண்டு அலகுகளில் ஒன்றைவிட மற்றொன்று 1½ அங்குலம் குறைவாக இருந்தது. விசாரித்துப் பார்த்தால் என் ஸகதர்மிணி அதைப் பக்கத்துவீட்டிற்கு இரவல் கொடுத்ததாகவும், அவர்கள் அதை உபயோகித்து 'ஓவல்டின்' டப்பாவின் மூடியைத் திறக்க முயன்றதாகவும் அதன் விளைவாகக் கத்தரிக்கோலுக்கு இந்தப் பின்னம் சம்பவித்ததாகவும் தெரிந்தது.

வீடுகளில் சிறு தேனீர் விருந்துகள் நடத்தப்பட்டால், தெரிந்த நண்பர்கள் பலரிடம் நாற்காலிகள் இரவல் வாங்குவது வெகு சகஜம். இதில் ஒரு உபத்ரவம் என்னவென்றால் நாற்காலிகள் விரைவில் திரும்பிக் கிடைக்க மாட்டா. எடுத்துப்போகும் பொழுது கூலியாட்கள் எடுத்துப் போய்விடுவார்கள். பிறகு இரவல் வாங்கினவருக்கு எந்த நாற்காலியை யார் வீட்டில் கொடுப்பது என்று புரியாது. நாற்காலிகள் மாறி வந்துவிடக்கூடும்.

கலியாண காலங்களில் பெட்ரோமாக்ஸ் லைட், பெரும் பித்தளைப் பாத்திரங்கள், பிரப்பம்பாய், விரிப்புகள் இவைகள் இரவல் கேட்பதும், கொடுப்பதும் ஸகஜம். பாத்திரங்கள் காது வளையம் இல்லாமலும், ஈயம் அழிந்தும், விரிப்புகள் சந்தனம் முதலியவற்றால் நனைந்தும்தான் திரும்பி வரும்.

'...பேனாவை திறந்தபோது...'

இன்னம் சில்லரை வியாபாரங்களில் நாவல் இரவல், கூலிங் கிளாஸ் இரவல் அங்கவஸ்திரம், ஸைக்கிள் பம்ப் இரவல் என்பதாகப் பல துறைகளிலும் இந்த இரவல் மனப்பான்மை அபிவிருத்தியடைந்து வருகிறது. எந்த வித்தையையும் விருத்தி செய்ய வேண்டியதுதானே நியாயம்! நடப்பது நடக்கட்டும்!

—



சிவஷண்முகப் பண்டாரம் தோள் மீது தாங்கி வந்த காவடியை கீழே இறக்கி வைத்து விட்டு, ஆசுவாசப்படுத்திக்கொண்டான். நெருப்பு முன் குளிர் காய்ந்துகொண்டிருந்த சேந்தம்மா காவடியையும், பண்டாரத்தையும் வெறுப்புடன் நோக்கி விட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"சேந்தம்மா...!" என்று மனம் குழயக் கூப்பிட்டுக்கொண்டே, பண்டாரம் அவளை நெருங்கினன்.

"நீயும் ஒரு மனுசன்தானு! இந்தக் காவடியை என் கண்முன்னே கொண்டாராதேன்னு எத்தினி வாட்டிச் சொல்றது?" என்று சீறினள் சேந்தம்மா.

"எனக்கு அன்னமளிக்கும் அட்சயபாத்திரத்தை இப்படி அலட்சியமாய் பேசலாமா? உனக்கு ஏன் அதும்பேரிலே இவ்வளவு கோபம்?"

"பண்டாரச்சாமி, உனக்கு நான் வேணுமா, இல்லே அந்தக் காவடி வேணுமா?"

"இரண்டுந்தான் வேணும்!" என்று சிரித்துக்கொண்டே பதிலளித்தான்.

"சிரிச்சு மழுப்பவேணும். இன்னக்கி ரெண்டுலே ஒண்ணு தீர்த்துக்கிடறதுன்னு தீர்மானிச்சுட்டேன் ஒங்கூட நான் வாழணும்னு நீ இந்தப் பிச்சைத் தொழிலை விட்டுவிட்டு, எதினச்சியும் வேலை தேடணும். இல்லேன்னு நமக்கு உறவே வாணும். பிச்சைக்காரன் பெஞ்சாதியா நான் வாழ முடியாது." என்ருள் உறுதியாக.

பண்டாரம் அவளை ஆத்திரத்துடன் நோக்கினன். ஆனல் அவன் கோபாவேசம் சேந்தம்மாவின் முன் தவிடு பொடியாகியது.

"தெருத்தெருவா நடந்து பிச்சை வாங்கியாறது ரொம்ப சுலபமுன்னு உனக்குத் தோணுதா, சேந்தம்மா?"

"சுலபமில்லே. கேவலம். மானங்கெட்ட பிழைப்பு. உன் தேகத்துலே என்ன குறைவு? நீ நொண்டியா, முடமா? உன்னைப் பார்த்தவுங்க யாரும் உடனே வேலை கொடுக்க மாட்டாங்களா? சரி, ஏன் வெட்டிப் பேச்சு? என் முடிவைச் சொல்லிப்பிட்டேன். நாளைக்குள்ளே நீ உன் தீர்மானத்தைச் சொல்லிடணும்" என்று கூறிவிட்டு 'விர்'ரென்று குடிசைக்குள் போய்விட்டாள்.

இந்தச் சம்பாஷணையைப் படித்துவிட்டு சேந்தம்மாவும், பண்டாரமும் தம்பதிகள் என்று எண்ணிவிடவேண்டாம். தம்பதிகளாக ஆவதற்கான நிபந்தனையைத்தான் சேந்தம்மா விதித்துக் கொண்டிருந்தாள்.

உலகத்தில் தமக்காகப் பிறர் உழைத்துச் சாப்பாடு போட வேண்டுமென்ற கோஷ்டி ஒன்று ஜீவித்து வருகிறதல்லவா? அந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவன் அன்னக்காவடி சிவஷண்முகப்பண்டாரம். அவனது பெற்றோர்கள் அவனை உலகத்துக்கு ஸ்வீகாரமாகக் கொடுத்துவிட்டு மறைந்துவிட்டார்கள். ஆதிமுதல் பிச்சையெடுப்பதையே ஜீவியத் தொழிலாகக்கொண்ட சிவஷண்முகம், பிற்காலத்தில் அன்னக் காவடி தாங்கும் சிவஷண்முகப் பண்டாரம் ஆனன். மணிகள் ஒலிக்கும் காவடி தாங்கி "அன்னக்காவடி தருமம் தாயே!" என்று கௌரவமாகப் பிச்சை எடுத்துவந்தான். காவடி தாங்கிய தினத்திலிருந்து அவன் வயிறு வாடியதில்லை. எவனே தருமப்பிரபு மலை அடிவாரத்தில் ஒதுக்குப்புறமாக ஒரு மடம் கட்டிப்போட்டிருந்தான். அதுதான் பண்டாரத்தின் வாசஸ்தலம்.

அன்னக்கவலையும், இடக்கவலையுமில்லாது நிச்சிந்தையாக வாழ்ந்து வந்த பண்டாரத்தின் வாழ்க்கையில் சேந்தம்மா பிரவேசித்தது எதிர்பாராத நிகழ்ச்சி.

சேந்தம்மா ஒரு அனுதை. ஆனல் மானம், அவமானம், கௌரவம் இதையெல்லாம் அவள் முக்கியமாகக் கருதுபவள். துணையற்ற சேந்தம்மா பிறரை அண்டி வாழ்வதை அடியோடு வெறுத்தாள். சுதந்திரமாக தன் தேகத்தால் பாடுபட்டுச் சாப்பிட வேண்டுமென்ற கொள்கையில் தீவிரப் பற்றுடையவள். மலைக்காட்டில் சுள்ளி பொறுக்கி அதை விற்று, கிடைக்கும் வருவாயில் தான் அவள் ஜீவனம். மலை அடிவாரத்தில் ஹரிஜனங்களின் குடிசைகளும், குறவர் குடிசைகளும் வரிசையாக இருந்தன. அக்குடிசைகளுக்கெல்லாம் அப்பால், ஆண்டி மடத்துக்கு அருகில் சேந்தம்மாவின் குடிசை இருந்தது.

சேந்தம்மாவை வீர வனிதை என்றுதான் சொல்லவேண்டும். அவள் யாருக்கும் பயப்படமாட்டாள். யாராவது அவளிடம் நெருங்கினல் அவமானப்பட்டுத் தான் வரவேண்டும். சோம்பேறி வாழ்வைக் கண்டால் அவளுக்கு விஷமாக இருக்கும். தன் குடிசைக்கருகில் இருக்கும் மடத்துக்கு வரும் சோம்பேறிகள்மீது அவளுக்கு இருந்த வெறுப்புச் சொல்லி முடியாது.

சுள்ளிகளை விற்றுவிட்டு, ஒரு நாள் கடைத்தெரு வழியாய் வந்துகொண்டிருந்தபோதுதான் சிவஷண்முகப் பண்டாரத்தைச் சந்தித்தாள். அவனைப்பார்த்த மாத்திரத்தில் அவனிடம் தனது

மனதைப்பறிகொடுத்துவிட்டாள். பண்டாரத்தின் முகத்தின் தேஜஸைக்கண்டு அவள் மயங்கிப் போய்விட்டாள். அதே சமயம் பண்டாரமும் சேந்தம்மாவின் இளமை கொழிக்கும் தேக அமைப்பிலும், அவள் அழகிலும் வசப்பட்டுப் போனான்.

அதிகாலையில் சேந்தம்மா சுள்ளிப் பொறுக்கப் போய் விடுவாள். ஆதலால் பண்டாரமும், சேந்தம்மாவும் சந்திக்கும் சந்தர்ப்பமே அதுவரை ஏற்படவில்லை. அன்று அகஸ்மாத்தாக ஏற்பட்ட சந்திப்புக்குப்பிறகு இருவரும் அருகிலேயே இருக்கும் விஷயம் புலனாயிற்று.

தாம்பத்திய வாழ்க்கை என்பதையே சிந்தியாத பண்டாரத்துக்கு இல்லறம் நடத்த ஆசை ஏற்பட்டது. சேந்தம்மாவை அவன் மணந்துகொள்ள ஆவல் கொண்டான். சேந்தம்மாவுக்கும் இதில் பரிபூர்ண சம்மதம். ஆனால் பிச்சைக்காரப் பண்டாரத்துக்கு அவள் மாலையிட விரும்பவில்லை. அவன் அன்னக்காவடி தொழிலை விட்டு விட்டு ஏதாவது கௌரவமாக வேலை செய்து சம்பாதிக்க வேண்டுமென்று அவள் நிபந்தனை விதித்தாள்.

சரீர சிரமமில்லாமல் வயிறு நிறைய சாப்பாடு கிடைக்கும் பிழைப்பை விடுவதற்கு மனமில்லை. அதில் இருக்கும் சௌகரியங்களை எல்லாம் எடுத்துச் சொல்லி, தன் கட்சியை ஸ்திரப் படுத்திப்பார்த்தான். ஆனால் அவனுடைய ஜம்பம் சேந்தம்மாவிடம் சாயவில்லை. வேறு தொழில் செய்தால்தான், மனைவியாக முடியும் என்று கூறி தவணையும் கொடுத்துவிட்டாள்.

2

சேந்தம்மா குடிசைக்குள் போனபிறகு பண்டாரம் அங்கேயே அசந்து உட்கார்ந்துவிட்டான். சேந்தம்மாவின் குணங்களை அவன் நன்கு அறிந்திருந்தான். அவள் சொன்னது எதையும் அவள் மாற்றிக்கொள்ளமாட்டாள் என்பது தெரியும். தான் வாங்கிவந்த சாப்பாட்டை கண்ணெடுத்துக்கூட பார்க்க அவள் மறுத்து வந்ததிலிருந்து அவளுடைய பிடிவாதம் எத்தகையது என்று உணர்ந்திருந்தான். சேந்தம்மாவை மணம் செய்துகொள்ளாவிட்டால் தன் வாழ்க்கையே அஸ்தமித்துப் போய்விடும் என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டிருந்தது. அவளை அடையவேண்டுமானால், உழைத்துப் பாடுபட்டாகவேண்டும். அதற்குச் சரீரம் வணங்குமா?

எவ்வளவு யோசித்தும் பண்டாரத்தால் முடிவுக்கு வரமுடியவில்லை. கொண்டுவந்த சாப்பாட்டைக்கூடச் சாப்பிடாமல் மடத்திலே போய் படுத்துவிட்டான்.

இரவு பன்னிரண்டு மணியிருக்கும். சாப்பிடாமல் படுத்ததால் பண்டாரம் அசந்து தூங்கிக் கொண்டிருந்தான். அப்போது நாலைந்து போலீஸ்காரர்கள் தடதடவென்று மடத்துக்குள் பிரவேசித்தார்கள். பண்டாரத்தைக் கண்டதும் "இதோ அகப்பட்டுக்கிட்டான்!" என்று ஒரு போலீஸ்காரன் கூச்சலிட்டான்.

"திருட்டுப்பயல், திருடுவதையும் திருடிவிட்டு தூங்குவதுபோல் பாசாங்கு செய்வதைப்பார்" என்று ஒரு போலீஸ்காரன் தன் பூட்ஸ் காலால் 'விண்'ணென்று ஒரு உதை விட்டான்.

பண்டாரம் "ஐயோ!" என்று அலறிக்கொண்டு எழுந்தான். தன்னைச் சுற்றிலும் ராட்சதர்கள் போல் நாலைந்து போலீஸ்காரர்களைக்காணவே பண்டாரத்துக்கு சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது.

"என்ன பண்டாரம், நல்ல தூக்கமோ?" என்றான் ஒரு போலீஸ்காரன்.

"நான் ஏழை பிச்சைக்காரனுங்க. என்னை ஏன் வந்து சுத்திக்கிட்டு இருக்கிங்க." என்று அழமாட்டாக்குறையாகக் கெஞ்சினான்.

"உனக்கு எவனடா பிச்சை போடுவான்? பிச்சைக்காரன்னு சொன்னா விட்டுடுவாங்கன்னு நினைச்சாயா? மேலத்தெரு வீட்டிலே திருடினதை மரியாதையாகக் கொடுத்தாயோ பிழைத்தாய்" என்று ஹெட்கான்ஸ்டபிள் உறுமினான்.

"நான் ஒரு பாவமும் அறியேனுங்க. நான் ஒரு அன்னக்காவடிங்க. இதோ என் காவடியே அதுக்குச் சாட்சிங்க"

"அன்னக்காவடியா? சரிதான். அப்ப நிச்சயமாய் நீதான் எடுத்திருக்கணும், சந்தேகமே இல்லை. அன்னக்காவடி ஒருத்தன் கிட்ட சந்தேகம்னு அவுங்க சொன்னது நிஜமாகவே போச்சு. சரி, பண்டாரம் நட. உன்னை நடத்தறபடி நடத்தினா எல்லாம் தன்னால் வெளியாகும்" என்று பண்டாரத்தின் கைகளுக்கு இரும்புக் காப்புகளை பூட்டினர் போலீஸார்.

சேந்தம்மாவை சாட்சியத்துக்கு கூப்பிடலாமா என்று ஒரு விநாடி யோசித்தான் பண்டாரம். ஆனால் அவளையும் திருட்டுக்கேஸில் சம்பந்தப்படுத்திவிட்டால் என்ன செய்வது என்ற பயம் ஏற்பட்டது. அதுவும் தவிர அவளெதிரில் விலங்குகளுடன் காட்சி அளிக்க அவன் விரும்பவில்லை.

தலைவிதியை நொந்துகொண்டு நடந்தான். சேந்தம்மாவின் மொழிகள் அவன் நினைவுக்கு வந்தன. "பிச்சைக்காரனாக இருந்தால் திருட்டுப்பட்டம்கூடவா கிடைக்கும்? இத்தனை நாள் காலங் கடத்தாமல் அன்றே இந்தத் தொழிலைவிட்டிருந்தால், எனக்கு இந்த கதி வந்திருக்குமா? சேந்தம்மாவைக் கல்யாணம் செய்துகொண்டு கௌரவமாக வாழ்ந்திருக்கலாமே!" என்றெல்லாம் பலவாறு எண்ணினான். பிச்சைத் தொழிலில் இருக்கும் அகௌரவத்தையும், ஈனத்தையும் எவ்வளவோ சேந்தம்மா எடுத்துக்காட்டியும் புத்திவரவில்லையே என்று மண்டையில் அடித்துக்கொண்டான்.

3

மறுநாள் மாலை வெகுநேரம் சென்ற பிறகும் பண்டாரத்தைக் காணாதது சேந்தம்மாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. இரவு நடந்தது அவளுக்கு ஒன்றும் தெரியாது. காலையிலும் வழக்கம்போல் சுள்ளிபொறுக்கப்போய்விட்டாள்.

பண்டாரம் தன் வழிக்கு வந்துவிடுவான் என்று அவள் மனதில் ஒரு நம்பிக்கை இருந்தது. தன் மீது அவன்கொண்டிருந்த அளவு கடந்த ஆசையை அவள் நன்கு உணர்ந்திருந்தாள். ஆதலால் முடிவாக கண்டிப்பாக கெடு பிறப்பித்தால்தான் அவனுடைய அன்னக்காவடி வாழ்க்கை முற்றுப் பெறும் என்று நினைத்தே அவனுடன் அவ்விதம் முதல் நாள் பேசினாள்.

இரவு வெகுநேரம் காத்திருந்து பார்த்தாள். பண்டாரம் வருகிற வழியாகக் காணோம். அவள் மனதில் சந்தேகம் உதயமாயிற்று. மடத்துக்குப் போய்ப்பார்த்தாள். காவடிமட்டும் எப்போதும் இருக்கிற இடத்தில் அனாதையாகக் கிடந்தது. "பண்டாரம் பிச்சை எடுக்கப்போகவில்லை!" என்று நிச்சயமாகத் தெரிந்தது.

"ஆனால் அவன் எங்கே போயிருப்பான்? ஒருவேளை வேலை தேடப் போயிருப்பானோ? அப்படியிருந்தால் என்னிடம் சொல்லாமல் போயிருக்கமாட்டானே!"

சேந்தம்மா மனதில் கவலையும் பயமும் ஏற்பட்டன. அவனைக் காணோம் என்றவுடன்தான், தன் மனமும் எவ்வளவு தூரம் அவன்பாலீடுபட்டிருக்கிறது என்பது தெரிந்தது. உள்ளம் நிலைகொள்ளாமல் தவிக்க ஆரம்பித்தது. இரவு முழுவதும் கண் விழித்துப் பார்த்தாள். பண்டாரத்தை அவள் பார்க்கவில்லை. எங்கெங்கோ விசாரித்தும் பார்த்தாள், புலன் தெரியவில்லை.

பாவம், பண்டாரம் தன்னுடன் கோபித்துக்கொண்டுதான் போய்விட்டதாக அவள் நினைத்தாள். பண்டாரத்துக்கு மூன்று மாதம் கடுங்காவல் விதித்தது அவளுக்கு எப்படித் தெரியும்? பிச்சைக்காரன்தானே? அவனுக்கு வக்கீல் வைத்து வழக்காடச் சக்தி ஏது?

4

பண்டாரத்தின் பிரிவு சேந்தம்மாவை வெகுவாகப் பாதித்தது. அனாதை வாழ்க்கையில் கிடைத்த



இந்தியாவின் கவர்னர் ஜெனரல் ராஜாஜியால் சமீபத்தில் புதிய டில்லியில் திறந்து வைக்கப்பட்ட டில்லி கலா மந்திரத்துக்கு ஸங்கீத கலாநிதி ஸ்ரீ மகாராஜபுரம் விச்வநாதய்யர் விஜயம் செய்தார். குமாரி லீலாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் அவரது முன்னிலையில் நடைபெற்றபோது எடுத்தபடம்.

ஒரு பற்றுக்கோலைக்கூட கை நழுவ விட்டுவிட்டோமே என்று வருந்தினாள். பண்டாரம் தனது காவடியை விட்டுப் போனதை நினைத்தபொழுது அவனுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்குமோ என்றுகூட திகிலடைந்தாள்.

மாதங்கள் மூன்று கடந்துவிட்டன. சிவஷண்முகம் விடுதலை செய்யப்பட்டான். அவன் அடியோடு மாறிவிட்டான். சோம்பேறி வாழ்க்கையினால் சதை போட்டிருந்த அவன் உடம்பு, ஜெயிலில் அனுபவித்த கடின வாழ்க்கையினால் மெலிந்து விட்டது. அந்த மூன்றுமாத காலமும் அவனுக்குச் சேந்தம்மாவின் ஸ்மரணைதான்.

விடுதலை அடைந்தவுடன் அவன் சேந்தம்மாவின் குடிசைக்குத் தான் ஓடினான்.

மனக்கவலையினால் சேந்தம்மா படுத்த படுக்கையாக இருக்கும்படி நேரிட்டது. இரண்டு மூன்று நாட்களாக லஜபானத்தோடு சரி. வேலைக்குப் போனால்தானே சாப்பாடு?

"சேந்தம்மா!" என்ற குரல் கேட்டது.

சேந்தம்மாவின் காதுகளில் அந்த நாதம் கானாமிர்தமாக ஒலித்தது. தன் பலஹீனத்தையும் லட்சியம் செய்யாமல் எழுந்திருக்க முயற்சித்தாள்.

அதற்குள் பண்டாரமே உள்ளே வந்து விட்டான். சேந்தம்மா அவனை உச்சி முதல் உள்ளங்கால் வரை பிரமை பிடித்தவள்போல் நோக்கினாள்.

பண்டாரம் தனது சோகக் கதையைச் சொல்லிவிட்டு "சேந்தம்மா. நான் இனிமேல் அன்னக் காவடி சிவஷண்முகப் பண்டாரம் இல்லை. கௌரவமாக வேலை தேடி உழைக்கப் போகிறேன். நீ என்னை கல்யாணம் செய்து கொள்கிறாயா?" என்றான்.

சேந்தம்மா ஆனந்தக் கண்ணீருடன் அவனைப் பார்த்துப் பெருமூச்சு விட்டாள்.

"இன்னும் நாலுநாள் கழிச்சு வந்திருந்தன்னா என் உசிர் இருந்திருக்காது. இனிமேல் நான் பிழைச்சுக்குவேன்" என்று ஆர்வமும் ஆசையும் பொங்க பண்டாரத்தின் கைகளை எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

கறுப்பாயி கல்யாணம்

வை. ராமநாதன்

கிழவன் பொன்னம்பலம் தன் பேத்தி கறுப்பாயியுடன் அந்தக் குடிசையில் வசித்து வந்தான். அவன் நடத்தி வந்த வாழ்க்கை அவனுக்கும் கறுப்பாயியுக்கும் மன நிம்மதியைக் கொடுத்துக்கொண்டிருந்தது.

கிழவனுக்குச் சொந்தத்தில் ஒரு சிறிய தோட்டம் இருந்தது. அதில் நிறைய காய்கறிகளைப் பயிரிட்டிருந்தனர் பாட்டனும்,பேத்தியும். வயது சென்ற கிழவன் என்றாலும் உரம்பெற்றிருந்த உடம்பாதலால் பொன்னம்பலம் 'தோட்டத்தில் உழைத்துப் பாடுபட்டான். கறுப்பாயியும் பாட்டனுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்துகொண்டு வந்தாள். பொன்னம்பலம் வாழ்க்கையை சமாளித்து நடத்த விரும்பியதெல்லாம் தன் பேத்தி ஒருத்தியை உத்தேசித்துத்தான்.

தோட்டத்தில் காய்க்கும் காய்கறிகளை கறுப்பாயி முதல் தினம் சாயந்திரமே பறித்து வைத்துவிடுவாள். மறுநாள் அதிகாலையில் எழுந்து பொன்னம்பலம் அவற்றைக் கொண்டுபோய் பட்டணத்தில் விற்றுக்கொண்டு வருவான். நியாயமான விலைக்குத் தான் கறிகாய் விற்பான். எனவே போதுமான வருமானம் கிடைக்கத்தான் செய்தது. அதை வைத்துக்கொண்டு பொன்னம்பலமும், கறுப்பாயியும் சுகஜீவனம் செய்துகொண்டிருந்தனர்.

மாலையில் வீடுதிரும்பும் கிழவனுக்குத் தயாராக சமயல்-செய்து வைத்திருப்பாள் கறுப்பாயி. ஆனந்தமாகப் பேத்தியின் கையால் ஆன உணவைப் புசிப்பான் கிழவன். பிறகு வெகு நேரம் வரை ஆனந்தமாகப் பேசிக்கொண்டே இருவரும் நேரத்தைப் போக்குவர். இந்த ரீதியில் உற்சாகமாக அவர்கள் வாழ்க்கைப் படகு சென்றுகொண்டிருந்தது.

* * * * *

கறுப்பாயிக்கு பதினைந்து வயது நடந்துகொண்டிருந்தது. அந்தப் பருவத்தில் அவள் நிரம்ப அழகுள்ளவளாக இருந்தாள். பெயர் தான் கறுப்பாயி; நிறமல்ல: கவர்ச்சிகரமான நிறமுள்ளவள். இதைப்பற்றி எத்தனையோபெருமைகொண்டிருந்தான் பொன்னம்பலம். அவளுடைய அழகை எத்தனையோ சந்தர்ப்பங்களில் நேருக்கு நேராக அவளிடமேயே புகழ்ந்திருக்கிறான் அவன். அப்போதெல்லாம் அவள் உள்ளூர மகிழ்ச்சிகொண்டிருந்தாள் எனினும் மேலுக்குத் தாத்தாவை இலேசாகக் கடிந்துகொள்வாள். "போ தாத்தா. உங்களுக்குப் போது போகாட்டி என்னைப் புடிச்சு பரியாசம் பண்ணக் கிளம்பிடறே. நான் அழகாயிருந்தா யாருக்கு என்ன லாபம்? அழகா இல்லாட்டி யாருக்கு என்ன நஷ்டமாம்?'' என்றாள் ஒரு தடவை. பொன்னம்பலம், "சேச்சே அப்படிச்சொல்லாதேயம்மா செல்லா. நெசம்மா நீ நல்ல அழகுள்ள பொண்ணுதான். நல்ல அழகாயிருந்தா நல்ல புருஷன் உனக்கு ஏத்தவனா கிடைப்பான். அதுக்கு தான் சொல்றேன்.'' என்றான் சிரித்தபடி.

கறுப்பாயிக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. "சரி. போதும் எனக்கு வேலை கெடக்கு.'' என்று சொல்லி விட்டு உள்ளே ஓடி விட்டாள்.

பேத்தி போனவுடன் கிழவன் வெகு நேரம் எதை எதையோ பற்றி யோசனை செய்து கொண்டே உட்கார்ந்திருந்தான். இந்த மாதிரி எத்தனையோ தடவைகள் அவளைக் கூப்பிட்டு வைத்துக் கொண்டு பரிகாசம் செய்வான். அதைத் தொடர்ந்து அவன் மனம் ஏதோ வெகு நேரம் சிந்தனையில் ஆழ்ந்து கிடக்கும். பிறகு அவன் நிலைமையே மாறி விடும். தாங்க மாட்டாத துக்கத்தை உள்ளூர அனுபவிப்பதை முகக்குறி காட்டும். பொன்னம்பலம் மட்டுமல்ல: கறுப்பாயியும் தனியே உட்கார்ந்து சிந்திக்கும் சமயங்களில் இந்த நிலையில்தான் இருப்பாள். அதன் காரணம்தான் என்ன?

ஒரு தினம்: கறிகாய் விற்கச் சென்றிருந்த பொன்னம்பலம் மாலை வீடு திரும்பினான். வழக்கம் போல தாத்தாவை எதிர் பார்த்துக் கொண்டு வாசலில் நின்றிருந்த கறுப்பாயி, பொன்னம்பலத்தைக் கண்டதும் பின்வாங்கி உள்ளே போக முயற்சித்தாள். காரணம் பொன்னம்பலத்தின் பின்னால் ஒரு வாலிபன் வந்து கொண்டிருந்தான்.

உள்ளே போக முயன்ற தன் பேத்தியைத் தடுத்து பொன்னம்பலம், "இந்தா, எங்கே ஓடறே. நம்ம வீட்டுக்கு ஒரு விருந்தாடி வந்திருக்குது பார்'' என்றான்

கறுப்பாயி ஒன்றும் பேசாமல் தலையைக் குனிந்துகொண்டு நின்றிருந்தாள். கிழவனுடன் வந்த வாலிபன் அந்த வீட்டையும், தோட்டத்தையும் ஒரு முறை சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

பொன்னம்பலம், "பொண்ணு, இந்தப் பிள்ளையாண்டான் நம்ம தோட்டத்திலெ வேலை செய்ய வந்திருக்கான். எனக்கும் வயசாயிடுச்சி, தள்ளலை. தோட்ட வேலையை அறியாப் பொண்ணு நீ செய்யறதும் நல்லாயில்லை. அதுனாலேதான் இவனைக் கூட்டியாந்தேன். யதேச்சையா இன்னிக்கிப் பாத்துக்கிட்டோம் ரெண்டுபேரும் டவுன்லே. நம் தோட்டத்திலெ வேலை செய்யறியாண்ணு கேட்டேன். சரிண்ணு சொன்னான். நல்ல பிள்ளையாண்டான், என் மனசுக்குப் பிடிச்சிருக்கு'' என்றான்.

கறுப்பாயி அப்போதும் ஒன்றும் அதிகமாகப் பேசவில்லை. "சரி தான்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

"மாரி, உன்னை நான் பெத்த மகனாட்டம் வச்சுகிணும்னுதான் ஆசைப்படறேன். ஏதோ தோட்டத்திலெ அதை .இதை செஞ்சிக்கிட்டு கெடந்தா ஒத்தாசையாயிருக்கும், நம்ம வூட்லே இந்தக் குட்டியின் அதிர்ஷ்டம் அரைவ்வுறு சாப்பாட்டுக்குப் பஞ்ச

மில்லை. நடக்கிறவரைக்கும் பார்த்துக்குவோம்'' என்ருன்.

மாரியும் சரி சரியென்று தலையை ஆட்டினுன். அவன் பார்ப்பதற்கு நல்ல கம்பீர தோற்றம் கொண்டிருந்தான். அவனுடைய உடலும் உழைத்து உரம் பெற்றிருந்த உடல்தான். வசிகரமான அழகு படைத்திருந்த வாலிபனும்கூட.

* * * * *

மாரி அந்த வீட்டிற்கு வந்த சிறிது நாட்கள் வரைதான் வேற்று மனிதன் என்று சொல்லும்படி நடந்து கொண்டிருந்தான். அதன் பிறகு அந்த வீட்டு நபர்களுள் ஒருவனுகவே ஆகிவிட்டான். அப்படி ஒன்றிக்கொண்டு கிடந்தான்.

உற்சாகத்துடன் தோட்டத்து வேலைகள் ஒன்றுவிடாமல் செய்து முடிப்பான். தண்ணீர் இறைத்து, மடைபாய்ச்சி, களை பிடுங்கி, காய்கறிகள் பறித்து எல்லாம் செய்வான். கிழவன் மேற்கொண்டிருந்த காய்கறி விற்கும் வேலையையும்கூடச் சில சமயம் செய்து வந்தான்.

மாரிக்கு இப்போதைய வாழ்க்கை நிரம்பப் பிடித்திருந்தது போலும். எப்போது பார்த்தாலும் சிரித்த முகத்துடன் குறுக்கும் நெறுக்குமாகப் போய்க்கொண்டிருந்தான். இதற்கு மூல காரணம் கறுப்பாயி என்று சொல்ல வேண்டியதில்லை. பொன்னம்பலத்துடன் வந்த அன்று முதன் முதல் அவளைப் பார்த்தபோது மாரி ஏதோ ஒரு விசித்திரமான பொருளைப் பார்ப்பதுபோன்ற உணர்ச்சிகொண்டிருந்தான். அதன் பிறகு அந்த வீட்டில் நிலைத்துவிட்ட பிறகு அந்த அனுபவம் நிறைய கிடைக்கவே அவனுக்குச் சர்வ சாதாரணமாகிவிட்டது. கறுப்பாயியுடன் நெருங்கிப் பழகவும், பேசவும் சந்தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்பட்டன. கறுப்பாயியும் மாரியை ஒரு பெரிய லட்சியமாகக் கருதியிருந்தாள். வேண்டிய அளவு மரியாதையுடன் நடந்து கொண்டாள். அவளையறியாமலேயே அவன்மீது தன் மனதில் ஒரு பய பக்தி குடிகொண்டிருந்ததை அவள் அறிந்திருந்தாள். அதன் காரணம் என்னவென்று அவளுக்குத் தெரியவில்லை. அதை அப்போதே அறிந்துகொள்ள அவள் அவசரப்படவும் இல்லை.

வெளியில்சென்றிருக்கும் சமயங்களில் மாரியின் நினைவு பூராவும் ஒருமித்து கறுப்பாயியைப்பற்றியதாகத்தான் இருந்தது. தனக்கு ஏதோ கிடைத்தற்கரிய பாக்கியம் கிடைத்திருப்பதாகத்தான் நினைத்தான். உண்மைதான். இல்லாவிடில் எங்கேயோ கிடந்த அவனுக்குப் பேரழகியான கறுப்பாயியுடன் நெருங்கிப் பழகிப் பேச சந்தர்ப்பம் கிடைப்பதென்ருல்?

பொன்னம்பலத்திற்கு இப்போதுசிறிது பொறுப்பு கழிந்தது என்று சொல்ல வேண்டும். குறை? எல்லா வேலைகளையும் சட சடவென்று செய்துகொண்டிருந்தான் மாரி. எனவே உண்மையில் இனி கிழவன் பொறுப்பற்றவன் தான். ஆனுல் கறுப்பாயியைப் பொறுத்தவரை அவன்பொறுப்பு நீங்கியபாடில்லை. அவளை நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்துவிடவேண்டியது ஒன்று தான் பாக்கி. மற்றப் பொறுப்புகளைச் சுமத்தின மாரியின் மீது இந்தப் பொறுப்பையும் சுமத்தலாமா என்று ஒவ்வொரு சமயம் நினைத்துப் பார்த்தான் கிழவன். அதாவது தன்பேத்தியை மாரிக்குக் கட்டிக்கொடுத்து விடலாமா என்று நினைத்தான். அதைப்பற்றி உடனடியாக ஒன்றும் தீர்மானம் பண்ண முடியவில்லை அவனுல். மாரியின் பூர்வாசிரமம் ஒன்றும் தெரியாது அவனுக்கு. அவன் நடத்தையை இன்னும் சிறிது காலம் கவனித்து வரவேண்டும் என்று எண்ணினுன். இந்த சிந்தனைக்குப் பின் வழக்கம்போல அவன் எண்ணங்களில் மாறுதல் உண்டாகி முகத்தில் சோகத்தின் ரேகை படர்ந்து நின்றது.

மாலை நேரம். சூரியன் மறைந்துகொண்டிருந்தான். மாரி தண்ணீர் பாய்ச்சின பிறகு பாத்திகளுக்குத் தண்ணீர் மாற்றிச்



கொண்டிருந்தான். கறுப்பாயி ஒரு ஓரமாக இருந்த மல்லிகைச் செடியில் பூப்பறித்துக்கொண்டிருந்தாள். நடு நடுவே மாரியுடன் ஏதோ பேசிக்கொண்டிருந்தாள். அவனும் பதில் சொல்லிக்கொண்டிருந்தான். மாரியின் குடும்ப வரலாற்றைப்பற்றி ஏதோ கேட்டுக் கொண்டிருந்தாள் அவள். எல்லாவற்றிற்கும் பதில் சொன்னபிறகு திடீரென்று, கறுப்பாயி உன் அம்மா அப்பா எல்லாம் இருக்கார்களா?'' என்று கேட்டான்.

அவள் முகம் மாறுதலடைந்தது. சற்றுமுன் காணப்பட்ட சோபை அவள் முகத்தை விட்டகன்றுவிட்டது.

"இருக்காங்க. ஆனா எங்கேண்ணுதான் தெரியலே'' என்றாள். அவள் குரலில் தொனித்த சோகத்தின் அளவு அதிகமாயிருந்தது. இதை ஏன் கேட்டோம் என்று கூட ஆகி விட்டது மாரிக்கு.

"ஏன் அப்படிச் சொல்றே?'' என்று கேட்டான்.

"அது ஒரு பெரிய கதை......... என்று ஆரம்பித்து சில விஷயங்களை மாரியிடம் சொன்னாள் கறுப்பாயி.

கறுப்பாயியின் தாயார் கண்ணம்மாவுக்குக் கல்யாணமான பிறகு அவளும் அவள் புருஷனும் பொன்னம்பலத்துடன்தான் இருந்தனர். அவள் புருஷன் ஒரு நாடகக் கம்பெனியில் ஏதோ ஒரு சின்ன உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது அவர்கள் எல்லோரும் தஞ்சையில் இருந்தனர். அந்த நாடகக் கம்பெனியை எதிர்பாராவிதமாக ஒரு நாள் மூடி விட்டனர். அதன் பிறகு வேலையற்று திரிந்துகொண்டிருந்த கண்ணம்மாவின் புருஷனின் வாழ்க்கை வீணாகி விட்டது. பழைய நாடக நண்பர்களுடன் சேர்ந்துகொண்டு குடித்துக் கொண்டு ஊர்சுற்றிக் கொண்டு கிடந்தான். பொன்னம்பலம் கொஞ்சம் முன் கோபக்காரன். அவனைக் கண்டிக்க நினைத்துப் பேசினபோது அவன் பொன்னம்பலத்தைக் குடி மயக்கத்தில் அடித்துப் போட்டுவிட்டுக் கண்ணம்மாவுடன் ஓடி விட்டான். குழந்தையாயிருந்த கறுப்பாயியைக் கூட அவர்கள் எடுத்துக் கொண்டுபோகவில்லை. அந்த மட்டில் நல்லதென்றுகூட எண்ணி சந்தோஷப்பட்டான் பொன்னம்பலம். அதன் பிறகு பொன்னம்பலம் எத்தனையோ விதங்களில் பாடுபட்டு கறுப்பாயியை வளர்த்து வந்தான். தனக்கு மூன்று வயதாயிருந்தபோது தன் தாய் தந்தையரைப் பிரிந்து கறுப்பாயி அதுவரை அவர்களை மீண்டும் பார்க்கவில்லை.........

இந்த வரலாற்றைக் கேட்டுக் கொண்டேவந்த மாரி திடீரென்று எழுந்தான். "கறுப்பாயி....... கொஞ்சம் இரு. நீ அதிர்ஷ்டக்காரியாயிருப்பேன்னுதான் நினைக்கிறேன்.......'' என்று சொல்லிக் கொண்டே "பாட்டா'' என்று இரைந்து கூப்பிட்டான் பொன்னம்பலத்தை. அவன் முகத்தில் காணப்பட்ட பரபரப்பையும், பேச்சையும் கண்ட கறுப்பாயி ஒன்றும் புரியாமல் விழித்தாள். அவள் உள்ளத்தில் சொல்ல முடியாத மகிழ்ச்சி உண்டாயிற்று.

பொன்னம்பலத்திடம் வந்து மாரி "பாட்டா, நான் டவுன் வரைக்கும் போறேன். ராத்திரியே வந்தா வரேன். இல்லைன்னு காலையிலே வந்துப்புடறேன்'' என்று சொல்லி விட்டுத் தாம்பரம் வந்து வண்டியேறி டவுனுக்குச் சென்றான்.

பொன்னம்பலமும், கறுப்பாயியும் மாரியின் நடத்தையைக் கண்டு வியந்தனர்.

* * * *

பொன்னம்பலத்தின் பின் முதல் வந்த மாரியைப் போலவே, இன்று மாரியின் பின் இரண்டு புதிய மனிதர்கள் பொன்னம்பலத்தின் வீட்டிற்கு வந்தனர். அவர்கள் ஒரு ஆணும், பெண்ணும்தான்.

உள்ளத்தில் சந்தோஷம் பொங்க மாரி "பாட்டா, இந்த வீட்டுக்கு நான் முதல் முதலே

வந்ததுபோல உங்க மகளையும், மருமகப் பிள்ளையையும் கூட்டியாந்திருக்கேன், பாருங்க'' என்றான்.

அந்த நிகழ்ச்சிகளைப்பற்றி ஒன்றும் விவரித்துக் கூறவேண்டிய அவசியமில்லை. சொப்பனத்தில் நடப்பதுபோல இருந்தன எல்லாம். மகளைக் கட்டிக்கொண்டு ஹோவென்று அழுதனர் கறுப்பாயியின் பெற்றோர்.

பொன்னம்பலம் மாரியைக் கூப்பிட்டுக் கேட்டான். "மாரி' இதென்னா, இந்திரஜாலவித்தைக் காரனா நீ? எப்படி எங்கே கண்டுபுடிச்சே இவங்களை?'' என்று கேட்டான்.

மாரி கறுப்பாயி கதை சொன்னது போலவே பொன்னம்பலத்துக்குச் சொன்னான்.

அந்தக் கதை :

கறுப்பாயி மாரிக்குச் சொன்ன கதையில் கண்ணம்மா என்று குறிப்பிட்டவுடனே அவனுக்கு ஒரு விஷயம் பளிச்சென்று ஞாபகம் வந்தது நாடக கம்பெனியில் ஒருவர் இருந்தாரென்றும், அவர் மனைவி தான் கண்ணம்மா என்று சொன்னதும் அவன் சந்தேகம் அநேகமாக நிவர்த்தியாகி விட்டது. அவன் ஏற்கனவே வேலை பார்த்துக்கொண்டிருந்த ஒரு இஞ்ஜினீர் வீட்டில் டிரைவராக இருந்தான் ஒருவன். அவனும் அவன் மனைவியான கண்ணம்மாவும் இஞ்ஜினீர்பங்களாவின் முகப்பில் இருந்த சிறு வீட்டில் தான் குடியிருந்தனர். அந்த டிரைவர் மாரியுடன் சிநேகம் கொண்டிருந்தான். அவனும் ஒரு சமயம் தஞ்சாவூரில் நாடகக் கம்பெனியில் இருந்ததையெல்லாம்பற்றிச் சொல்லியிருக்கிறான். இந்த விஷயம் நினைவுக்கு வரவே கறுப்பாயி சொல்லி முடித்ததும் குறிப்பாக அந்த இஞ்ஜினீரின் பங்களாவுக்குச் சென்றான். அங்கே அதே கண்ணம்மாவும், டிரைவரும் பழையபடியே வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தனர். மாரி சொன்ன விவரங்களைக் கேட்டவுடன் அவர்கள் திகைத்துப்போய் விட்டனர். தன் அருமைப் புதல்வி செல்லாயியையும், பொன்னம்பலத்தையும் காண விரைந்தோடி வந்தனர்......

இந்த விவரங்களைக் கேட்ட பொன்னம்பலம் மாரியைப் புகழ்ந்தான். பிரிந்தவர் கூடினர்; பேசுவதைப்பற்றிச் சொல்ல வேண்டுமா?

பொன்னம்பலத்தின் இன்பகரமான வாழ்க்கையில் முன்பெல்லாம் நடு நடுவே ஏதோ துன்பகரமான நினைவுகள் கலந்து வந்தன என்று சொன்னோம் அல்லவா? அந்த நினைவுகளுக்கு இனி இடமில்லை.

* * * *

அந்தவிடுக்கில் ஏதோ ஓசையைக் கேட்டுத் திரும்பினான் மாரி. அதுகாறும் மறைந்து நின்றுகொண்டிருந்த கறுப்பாயி தோட்டத்துப்பக்கம் சென்றாள். அதைக் குறிப்பாக உணர்ந்த மாரி, எல்லோரிடமும் பேசிக்கொண்டிருந்தபோதே இடையில் எழுந்து தோட்டத்துப் பக்கம் நழுவினான்.

"அடேயப்பா, நீ ஆளிலேயும் ஆளு ஐயம்பேட்டை ஆளாயிருக்கயே மாமா; ஒரு நிமிசமாக் கொண்டாந்துட்டயே எங்க அப்பா, அம்மாவை? உனக்கு மந்திரம் மாயம் எல்லாம் தெரியுமா?'' என்றாள் கறுப்பாயி.

பின்னெ இல்லாட்டி உன்னை எப்படி உரிமையோடெ கட்டிக்கிறதாம்? இப்போ உன்னைக் கட்டிக்கிட்டா எனக்கு எவ்வளவு பெருமையாயும் மதிப்பாயும் இருக்கும்? நீயே சொல்லு'' என்றான்.

"ஓஹோ! நான் இப்ப என்னைக் கட்டிக்க மாட்டேன்னு அப்பொ எங்கே போவும் பெருமையும் மதிப்பும்'' என்று குறும்பாகக் கேட்டாள் கறுப்பாயி.

"வேண்டாம்; வேண்டாம் பரதேவதை, உன் வாயைக் கிண்டலை நான்'' என்றான்.

அவள் இடி இடியென்று சிரித்தாள். மாரியும் சேர்ந்து சிரித்தான்.

உதகையில் நடந்த நேச நாடுகளின் பொருளாதார மகாநாட்டில் டாக்டர் லோகநாதன் நேச தேசங்களின் கொடியைப் பறக்கவிட்டார்.

வீணை கானம்

★

சென்னை நகரில் உள்ள ஸங்கீத சபைகளையும் அவற்றில் நடைபெறும் கச்சேரி நிகழ்ச்சிகளையும் கணக்கிட்டுப் பார்த்தால் வாய்ப்பாட்டுத்தான் முதலிடம் பெற்று நிற்கும். அடுத்தபடியாக பரத நாட்டியம். இசைக் கருவி வித்வான்களுக்கென்று பிரத்யேகமாக எந்த நிகழ்ச்சியும் கிடையாது. இது வீணை, பிடில், கோட்டுவாத்தியம், புல்லாங்குழல் போன்ற வாத்தியங்களில் பாண்டித்தியம் பெற்ற முதிய வித்வான்களுக்கு உற்சாகம் குறைந்துபோகும்படி செய்வதுடன், எதிர்காலத்தில் மேற்சொன்ன கருவிகளில் பயிற்சிபெற எண்ணுபவர்களுக்கும் அதைர்யத்தை உண்டுபண்ணும். எனவே மயிலை ரஸிக ரஞ்சனி சபையார் இத்துறையில் கவனத்தோடு சிரத்தை காட்டியிருப்பது பாராட்டத்தக்கது. சென்றவாரம் தேவகோட்டை வித்வான் ஸ்ரீ நாராயணய்யங்காரை அவர்கள் வீணைக் கச்சேரியை நடத்தும்படி செய்தார்கள். சாதாரணமாக ஒரு மிருதங்கத்தோடு நடந்த வீணைக் கச்சேரியல்ல அது. பிடிலுண்டு; மிருதங்கம் உண்டு; கடம் உண்டு; தம்புரா சுருதியும்கூட உண்டு! கச்சேரி அயர்ச்சியில்லாமல் களையோடு முன்னேறும் பொருட்டு இத்தகைய ஏற்பாடு.

ஸ்ரீமான் நாராயணய்யங்கார் இசைக் கருவி வித்வத் மண்டலத்தில் வெகுநாளாக ஒளிரும் உன்னத வித்வான்களில் ஒருவர். தலைசிறந்த பாரம்பர்ய பயிற்சியை சீரிய முறையில் அடையப் பெற்றவர். தெளிந்த ஞானமும் நிறைந்த அனுபவமும் கொண்டவர்.

மயிலை ரஸிக ரஞ்சனி சபைக் கச்சேரியில் ஸ்ரீமான் நாராயணய்யங்காரின் ஞானச் சிறப்பை நன்கு கண்டோம். முதலில் வர்ணத்துடன் அவர் துவக்கிய கச்சேரி பல்லவி (தோடி) வரையில் போய் முடிந்தது. நாட, காபிநாராயணி, கல்யாணி, பேகடா, பைரவி, அடாணா, தர்பார் ஆகிய ராகங்களையும், கீர்த்தனைகளையும் அவர் வாசித்தார். இவற்றில் பெரும்பான்மையும் மத்தியம கால உருப்படிகள்தாம். சாஸ்திரீய தர்மத்தையனுஷ்டித்து கல்யாணி ராகத்தையும், கீர்த்தனையையும் அவர் வாசித்த கையோடு விளம்ப காலத்தில் ஸ்ரீ தீட்சதர் கிருதிகளில் எதையேனும் வாசித்திருந்தால் மிக்க விசேஷமாக இருந்திருக்கும். ஆனால் வாய்ப்பாட்டில் காணப்படும் விருவிருப்புக்கு மத்தியம கால உருப்படிகள் விசேஷமாக உதவுகின்றனவென்பதாலோ என்னவோ அதே முறை இக்கச்சேரியிலும் கையாளப்பட்டதாகத் தோன்றிற்று. பாவப் பூரிப்போடு வாத்யத்தின் துல்லிய சூட்சமங்கள் துலங்குவதற்கு விச்ராந்தியாக விளம்பகால உருப்படிகள் ஒன்றிரண்டை அவ்வப்போது இடை இடையே சேர்த்துக் கொள்வதுதான் விரும்பத்தக்கது. வாசித்தவரையில் ஸ்ரீமான் நாரயணய்யங்கார் தமது முழுத்திறமையையும் பிரயோகித்தார். முக்கியமாக அடாணா, தர்பார், பைரவி, தோடி இவையெல்லாம் களை கொண்டு விளங்கின.



பக்கவாத்தியமாக பிடில் வாசித்த திருவாலங்காடு ஸ்ரீ சுந்தரேசண்ணா, ஸ்ரீ நாராயணங்காரைப்போல ஞானத் திறம் கொண்டவர். எந்த ராகமானாலும்சரி இரண்டே விநாடிக்குள் அதன் முழு ஸ்வரூபமும் பொங்கிவழியும்படி உருக்கமாக வாசிக்கும் இயல்பு அவருக்கிருப்பது தெரிந்த விஷயம். இந்தக்கச்சேரியிலும் வீணைக்கு அனுசரணையாக அடக்கமாகவும் அற்புதமாகவும் அவர் வாசித்தார்.

கச்சேரியின் முதல் பகுதியில் வீணைத் தந்தியிலிருந்து எழுந்து வந்த நாதத்தைச் செவியுறக் கூடவில்லை. காரணம் சபையில் மலிந்த பேச்சு. வீணைகானத்தைச் சுவைக்க வேண்டினால் ரஸிகர்களிடையே கட்டுப்பாடான அமைதியும், நிசப்தமும் அவசியம். இல்லையானால் வீணை கானம் வீணான கானமாகப் போய்விடும்.



இதுவரையில் ...

[எட்டாம் நூற்றாண்டிலே ராஜஸிம்ம பாண்டியன் ஒரு சக்கிரவர்த்தியாக ஆட்சி செலுத்தி வந்தான். இவன் கங்கராஜனை வென்று அவனுடைய மகளான பூசுந்தரியை மணந்து பட்டமகிஷியாக்கிக் கொண்டிருந்தான். தெற்கே சேரனையும் வென்று தயாள குணத்துடன் அவனுக்கு வேண்டிய உதவிகளும் செய்திருந்தான். எனினும், சேரன் பாண்டிய சக்கிரவர்த்திக்கு விரோதமாய்க் கலகம் செய்து கன்னியாகுமரியை ஒட்டியிருக்கும் நாஞ்சில் நாட்டைத் தனதாக்கிக் கொண்டான். பாண்டியன் மீண்டும் படையெடுத்துப் போய்ச் சேரனை அடக்கி, அவனிடம் மறுபடியும் தயாளமாக நடந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்து அவனைத் தனக்கு ஒரு சேனாபதியாகவும், மந்திரியாகவும் ஆக்கிக் கொண்டான். சேரனோ கெட்ட எண்ணத்தை விட்டுவிடவில்லை: ஒரு பௌத்த பிட்சுவுடன் சூழ்ச்சி செய்து, பாண்டிய வீர மன்னனுக்கு அஹிம்ஸா தர்மப் பிரசாரம் செய்யும் வியாஜத்தால், பாண்டி நாட்டில் குழப்பம் உண்டாக்கவும், பாண்டியனுள்ளத்தைக் கெடுக்கவும் முயல்கிறான். இந்நிலையில் இராஜபுரோகிதரான செல்வநம்பி ஒரு பண்டித சபைகூட்டி மன்னனுக்கு ஆறுதல் அளிக்க எத்தனிக்கிறார். இச் சபைக்கு எப்படியாவது ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து விஷ்ணு சித்தரை அழைத்து வரவேண்டுமென்று அரசனும், அரசியும், ஒருவருக்கொருவர் தெரியாத நிலையில் மாறுவேடம் பூண்டு போய்க் காரியசித்தி பெறுகிறார்கள். இது பௌத்த பிட்சு முதலானவர்களுக்குப் பொறாமையுண்டாக்குகிறது.]

மூவர் சதி

10

ஜனங்களின் சந்தோஷ ஆரவாரங்களுக்கிடையே தங்கப்பல்லக்கில் விஷ்ணுசித்தர் மதுரைக்குப் பிரயாணமான செய்தி, ஸ்ரீ வில்லிபுத்தூரிலும், அருகேயுள்ள ஊர்களிலும் குதூகலத்தை உண்டாக்கிவிட்டது. ஆனால் மூன்று ஹிருதயங்களில் மட்டும் ஒரு துளிகூட மகிழ்ச்சி இல்லை, கவலை அதிகப்பட்டது.

வடபத்திரசாயி கோவில்—பட்டரான ஞானப்பிரானுக்கு உள்ளத்திலே ஏககாலத்தில் பல தேள்கள் கொட்டியதுபோல் அவ்வளவு வேதனையும், பொறாமையும் ஏற்பட்டன. 'அரசன்தான் அசட்டுத்தனமாக அழைத்தானென்றால், இவருக்குத்தான் இவ்வளவு நெஞ்சுத் துணிவு இருக்கவேணுமா? மண்வெட்டியால் கிழியறுக்க முடியாதென்று தீர்மானித்தவர் ஏன் தமது தீர்மானத்தை மாற்றிக்கொண்டார்? தமக்கு வந்த காணிக்கைகளுக்கே தாம் தகுதியில்லாதவர் என்பதை அறிந்துகொண்டவர், தங்கப்பல்லக்கில் ஏறிப்போக எப்படித்தான் தகுதி கண்டாரோ?' என்றெல்லாம் அலைபாய்ந்த எண்ணங்களுடன், கோவில்—காரியத்தை முடித்துக்கொண்டு வெளியே வந்தார் பட்டாசாரியார்.

நல்ல நிலவு வீசியது. குளிர்ந்த காற்றும் ஜில்லென்று வீசிக்கொண்டிருந்தது. எனினும் ஞானப்பிரானுக்கு மனப்புழுக்கம் அதிகமாகவே இருந்தது. இந்த நிலையில் ஞானப்பிரான் தம்மைத் தொடர்ந்து வந்தவரை எப்படிக் கவனித்திருப்பார்?

'காணிக்கையை என்னிடம் கொடுத்தவர் பல்லக்கிலும் பண்டித சிரேஷ்டராகிய

என்னையல்லவா ஏற்றி அனுப்பியிருக்க வேண்டும்?' என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார்; தமக்குள்ளே சொல்லிக்கொள்ளாமல் வாய்விட்டே சொல்லிவிட்டார்.

'அப்படித்தானே செய்திருக்க வேண்டும்' என்று, தமக்குப் பரிச்சயமான குரல் ஒன்று சொன்னதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தார் ஞானப்பிரான். பௌத்த பிட்சுவைக் கண்டதும், 'இந்தத் துஷ்டன் நம்முடைய இரகசியத்தைத் தெரிந்துகொண்டானே!' என்று திடுக்கிட்டார்.

பிட்சுவோ அமைதியாக ஞானப்பிரானின் இதயம் முழுமையும் தெரிந்துகொண்டவர் போல் சிரித்துக்கொண்டே, 'தாங்கள் பண்டித சிரேஷ்டர் என்பதை அறியாதார் யார்? சித்தன்ன வாசலில் உள்ள எங்கள் பண்டித கோஷ்டி முழுமையும் தங்கள் புலமைத் திறனையும் தர்க்க வாதத் திறனையும் தெரிந்துகொண்டிருக்கிறது. ஏன், தாங்கள் விஜயம் செய்யாத சபையில் "எங்களுக்குத்தானே வெற்றி?" என்று இறுமாந்திருக்கிறது என்றார்.

இது கேட்ட ஞானப்பிரானுக்குச்சோர்வு நீங்கிச் சிறிது உத்ஸாகம் பிறந்தது. 'ஆம், அரசன் உங்கள் வெற்றிக்கே வழி தேடிக் கொண்டான். அது பற்றி எனக்குத் தான் இப்போது என்ன கவலை? பௌத்தராலும், பச்சை நாஸ்திகராலும் பண்டிதர் வெற்றி பெறுவதே பண்டித சமூகத்திற்கு வெற்றி என்று பௌத்த பிட்சுவை நோக்கிக் கூறினார்.

அதற்குப் பிட்சு, 'அந்தப் பண்டித மகா சபையில் விஷ்ணு சித்தருக்கு தோல்வி நிச்சயம். அங்கே ஜைன பௌத்தர்களோடு, மாயாவாதிகளும், லோகாயதர்களும், நாஸ்திகர்களும் வந்திருப்பார்கள்.

ஊன்வாட உண்ணு(து) உயிர்காவல் இட்டு
உடலில் பிரியாப் புலன் ஐந்தும் நொந்து
தாம்வாட வாடத் தவஞ்செய்ய வேண்டா!

என்று பாடி பஜனை செய்து விரதங்களைக் கண்டித்து வெற்றிபெற முடியுமா? என்றார்.

'சரி' நாட்டுக்கு க்ஷேமமில்லை. அஹிம்ஸா தர்மப் போர்வை போர்த்து இனி நீங்கள் நாடெல்லாம் திரியலாம். சரி, சரி; இனி எனக்கு என்ன கவலை? இதில் ஏதோ சேரன் சூழ்ச்சி இருக்கிறதென்று ஊரில் ஒரு பிரஸ்தாபம் இருக்கிறதே, உண்மைதானா?

'சூழ்ச்சி என்ன இருக்கமுடியும்? அறிவுக் கூர்மையில்லாதவர்கள் அறிவு நுட்பத்தையே சூழ்ச்சி, சூழ்ச்சியென்றுதான் இகழ்ந்து பேசுவார்கள். உண்மையில் அதுவே ஒரு சூழ்ச்சிதான்! மேலும் நான் காயக்கிலேசமும் கடுநோன்புகளும் அனுஷ்டிக்கும் கடுந்துறவி. அரசர்களின் சூழ்ச்சிகளைப் பற்றி எனக்கென்ன தெரியும்?'

'தோற்றுப்போன சேரன் நமது பாண்டிய ராஜாவுக்கு விரோதமாக ஏதேதோ சூழ்ச்சி செய்துகொண்டிருக்கிறானாம். அவன் செய்கிறானோ இல்லையோ, மந்திரி மாறங்காரியும், அவருடைய நம்பிக்கைக்கு உரிய ஒற்றனான நரஸிம்மனும்

அந்தச் சூழ்ச்சியை முறியடிக்க வேணுமென்று முயன்றுகொண்டிருக்கிறார்களாம். அதில் பௌத்த சந்நியாசிகள்கூடச் சம்பந்தப்பட்டிருப்பதாய்த் திருக்கோஷ்டியூரில் ஒரு வதந்தி இருக்கிறதாம்.'

'அப்படியா செய்தி? தங்கள் மனைவி கோஷ்டியூரிலிருந்து வந்திருக்கிறாளே, அவள் சொன்னாளோ? துஷ்டர்கள் பொய்ச்சானறு தேடி எங்களுக்குக் கேடுசெய்ய விரும்புகிறார்கள். சூழ்ச்சி ஏதாவது இருந்தால், அதுவாகத்தான் இருக்கவேணும்!'

இப்படி இவர்கள் பேசிக்கொண்டே பட்டாசாரியரின் வீட்டுக்கு வந்துவிட்டார்கள். ஞானப்பிரான் ஏதோ பதில் சொல்ல வாயெடுத்தவர், தம் மனைவியின் குரல் கேட்டு மௌனமாகி விட்டார்.

ஹரிலட்சுமி அண்டை வீட்டுக்காரியுடன் பேசிக்கொண்டிருந்தாள். 'என்ன அநியாயம்! தங்கப் பல்லக்கில் பாகவதர் போயிருக்கிறார்; பண்டிதர் இங்கே பல்லைக் கடித்துக்கொண்டு திண்டாடுகிறார்! காலம் கெட்டுப்போய் விட்டது; கலி முற்றிப்போய் விட்டது!' என்று வீட்டுத் திண்ணையிலிருந்து ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்த அம்மாள், தன் கணவரையும் பிட்சுவையும் கண்டதும் பேச்சை நிறுத்திவிட்டாள். அண்டை வீட்டுக்காரி உடனே விடைபெற்றுக் கொண்டு போய்விட்டாள்.

பிறகு, ஞானப்பிரான் பிட்சுவிடம் விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்குள்ளே போக எத்தனித்தார். ஆனால் அந்த அம்மாள் 'அந்தப் பெரியவரையும் அழைத்து வரலாமே' என்று மெல்லச் சொன்னதும், ஞானப்பிரான் பிட்சுவை நோக்கி, 'அப்படி அவசரம் ஒன்றும் இல்லையே?' என்று கேட்டார்.

அந்தக் குறிப்பை அறிந்துகொண்ட பிட்சுவும் ஞானப்பிரானைத் தொடர்ந்து உள்ளே சென்றார். மூவரும் நிலாமுற்றத்தில் சம்பாஷிக்கத் தொடங்கினார்கள். ஹரிலட்சுமியும் அவர்களுடன் தாராளமாய்ப் பேசிக்கொண்டிருந்தாள். அதிலிருந்து, அந்தத் துறவி அடிக்கடி அந்த வீட்டுக்கு வந்து போவது வழக்கம் என்று ஊகித்துக்கொள்ளலாம்.

'எவ்வளவு படிப்பு இருந்தாலும், அதிர்ஷ்டம் தான் முக்கியம்' என்று மெல்லச் சம்பாஷணையை ஆரம்பித்து வைத்தாள் ஹரிலட்சுமி.

'எனக்கா அதிர்ஷ்டமில்லை? அந்தச் சபைக்கு அதிர்ஷ்டம் இல்லை; அரசனுக்கு அதிர்ஷ்டம் இல்லை!' என்றார் ஞானப்பிரான், ஆத்திரமாக.



'அரசனுக்கும் அதிர்ஷ்டம் இல்லை; அவன் கூட்டும் சபைக்கும் அதிர்ஷ்டம் இல்லை; உங்களுக்கும் அதிர்ஷ்டம் இல்லை; உங்கள் வெற்றியைக் கண்டு களிக்க எனக்கும் அதிர்ஷ்டம் இல்லை;' என்றார் பிட்சு ஆனந்த தீர்த்தர். அப்படிச் சொல்லி விட்டு ஒரு சிரிப்புச் சிரித்தார்.



ஹரிலட்சுமி பிட்சுவை நோக்கி, 'அப்படி ஒரேயடியாகச் சொல்லிவிடாதீர்கள், ஒருவருக்கும் அதிர்ஷ்டம் இல்லையென்று விஷ்ணு சித்தருக்கு வந்த காணிக்கை—பொன்னும் மணியும்—இவருக்குக் கிடைத்ததே, அதற்கு அதிர்ஷ்டம்தானே காரணம்? ஆம். என் அதிர்ஷ்டம் தான் காரணம். ஒரு குறத்திகூட அப்படித் தான் குறி சொல்லிப்போனாள்' என்றாள்.

பட்டாசாரியரின் தேவி கேவலம் ஒரு மலைக் குறத்தியிடம் குறி கேட்டதாகப் பிட்சு முன்னிலையில் ஒப்புக்கொண்டது ஞானப்பிரானுக்கு வருத்தமாகவே இருந்தது. அவர் உடனே பிட்சுவை நோக்கி, 'எனக்கு ஞானபக்திதான் பிரதானம்; குறிமுதலியவற்றில் நம்பிகைக்கிடையாது;' என்றார். மேலும் குறத்தி ஆராதிக்கும் சில்லரைத் தெய்வங்களை ஞானப்பிரானும் அவரது ஞானப்பட்டமகிஷியும் ஒப்புக்கொண்டதாகப் பிட்சு பிரசாரம் செய்தால் என்ன செய்வது? இந்த வெட்கமும் ஞானப்பிரானுடைய மனவருத்தத்தோடு கலந்து ஒரு குழப்பத்தை விளைவித்துவிட்டது.

அவர் மறுபடியும் பிட்சுவை நோக்கி, 'ஆனந்தரே! அதிர்ஷ்டத்திலேயே எனக்கு நம்பிக்கை கிடையாது. திருஷ்டிக்குத் தெரியாததைத் தானே "அதிர்ஷ்டம்" என்கிறோம்? அதிர்ஷடம் என்றால், காரணம் புலனாகவில்லை என்றுதானே ஐயா, அர்த்தம்?' என்றார்.

பிட்சு உடனே தமக்குத்தாமே சொல்லிக் கொள்வதுபோல், 'என்ன அருமையான வாக்கு ஜாலம்! எவ்வளவு எளிதாக வெற்றிகிடைத்திருக்கும் இந்த வாக்கு ஜாலத்திற்கு! அதிர்ஷ்டம் என்பது இருந்தாலும் இல்லாவிட்டாலும், "அதிர்ஷ்டம் இல்லை" என்பது நிச்சயமாக இருக்கத்தான் செய்கிறது! அதிர்ஷ்டம் இல்லாதவன்தானே அரசன்?' என்று சொன்னார்.

அதற்கு ஹரிலட்சுமி, 'எனக்கு உங்களைப் போல் தர்க்கமும், குதர்க்கமும் செய்யத் தெரியாது. ஆனால், அதிர்ஷ்டத்திற்கு விஷ்ணு சித்தரே ஒரு நல்ல சாட்சி—இல்லையா? அவருடைய அதிர்ஷ்டத்திற்கும் எனக்குக் காரணம் தெரியும். உங்கள் திருஷ்டிக்குத் தெரியாவிட்டாலும் என் திருஷ்டிக்கு அந்தக்காரணம் தெரியத்தான் செய்கிறது!' என்றாள்.

'அது என்ன காரணமோ?' என்று கேட்டார் பிட்சு.

'காரணம் என்ன இருக்கமுடியும்? அந்த ஆனந்தப் பூந்தோட்டம்தான் அவருடைய புகழை எங்கும் பரப்பியிருக்கவேண்டும். அவ்வளவு வசிகரமாய்த் தோட்டம் போட்டிருக்கிறார்' என்றார் ஞானப்பிரான்.

'அப்படியானால் அவர் சிறந்த தோட்டக் கலைஞராவர். அந்தக் கலைக்கு அவர் பரிசு பெற்றால் அதிசயம் ஒன்றும் இல்லை. கலைஞர்களுக்கும் மதவாத நிபுணர்களுக்கும் அளிக்க வேண்டிய காணிக்கைகளையும், செய்ய வேண்டிய மரியாதைகளையும் ஒரு தோட்டக் கலைஞருக்கு அளிப்பதுதான் எனக்கு ஒரே வயிற்றெரிச்சலாக இருக்கிறது' என்றார் பௌத்த பிட்சு.

அதற்கு ஹரிலட்சுமி, 'வயிற்றெரிச்சல் பட்டு என்ன பிரயோஜனம்? ஏதாவது ஒரு வழியில் அந்த அதிர்ஷ்டம் அவருக்கு இல்லாமல் செய்துவிடவேணும்' என்றாள்.

'அது எப்படி முடியும்? அதிர்ஷ்டம் உண்டென்று வைத்துக்கொண்டால், அதுதான் அவரை ஏற்கெனவே தேடி வந்து பல்லக்கில் தூக்கி வைத்துக்கொண்டு போய்விட்டதே! அந்த அதிர்ஷ்டத்திற்கு இனி நாம் எப்படித் தடையுத்தரவு போடமுடியும்?' என்று கேட்டார் ஞானப்பிரான்.

அதுகேட்ட ஹரிலட்சுமி சிறிது கோபத்துடன், 'நான் சொல்வதை முழுதும் கேட்பதற்கு முன் ஏன் இந்த ஆத்திரம்? அந்த அதிர்ஷ்டத்திற்குக்காரணமே இன்னதென்று உங்களுக்குத் தெரியாமலிருக்கும்போது, அதை எப்படி நீங்கள் தடை செய்யமுடியும்? வீணான விவகாரங்களால் பயனில்லை; விரைவில் காரியத்திலே இறங்க வேணும்' என்றாள்.

அவள் இப்படிச்சொன்னதும், ஏதோ பதில் சொல்ல எத்தனித்த ஞானப்பிரானின் கையைக் கிள்ளி ஜாடை காட்டி நிறுத்திவிட்டுப் பௌத்த பிட்சு, 'இந்த அம்மாள் சொல்லுகிறாளே விஷ்ணுசித்தரின் அதிர்ஷ்டத்திற்குக் காரணம் தனக்குத் தெரியுமென்று, அதை முதலில் தெரிந்துகொள்வோம்' என்றார்.

தம் மனைவி என்ன காரணம் சொல்லப் போகிறாளோ என்று ஞானப்பிரான் அதிசயித்துக்கொண்டிருக்கும்போதே, 'அந்தப் படம்' என்றாள் ஹரிலட்சுமி.

படத்திற்கும், அதிர்ஷ்டத்திற்கும் என்ன தொடர்பு இருக்கமுடியும் என்று இரண்டு தர்க்க நிபுணர்களும் தங்கள் மூளையைக் குழப்பிக்கொண்டிருக்கும்போதே, அந்த அம்மாள் கணவரை நோக்கி, 'அந்தக் கிருஷ்ண படத்தை நீங்கள் பார்த்ததில்லையா?' என்று கேட்டாள்.

ஞானப்பிரானுக்கு விஷயம் விளங்கிவிட்டது. அவர் பிட்சுவை நோக்கி, 'விஷ்ணுசித்தரின் இல்லத்தில் பல கிருஷ்ண—படங்கள் இருக்கின்றன. அழகான படங்கள்; கண்ணபிரானுடைய லீலைகளை அப்படி அப்படி எடுத்துக்காட்டும் சித்திரங்கள். அவற்றில் ஒன்றைத்தான் இவள் குறிப்பிடுகிறாள். அந்தப் படம் விஷ்ணுசித்தருக்கு மிகவும் உகப்பானது. அதுதான், விஷ்ணுசித்தர் மண்ணைத் தொட்டுப் பூவும் தருவும் ஆக்கிவிடுகிறாரே, அந்த அதிர்ஷ்டத்திற்கெல்லாம் காரணம்என்கிறார்கள் ஜனங்கள். அதே படத்தைத்தான் இப்போது இவருக்கு வந்திருக்கும் அதிர்ஷ்டத்திற்கும் காரணம் என்கிறாள் இவள் என்றார்.

நான் மட்டும் சொல்லவில்லை; ஊரெல்லாம் அப்படித்தான் சொல்லுகிறது, காளியன் என்ற அஞ்சு தலை நாகத்தின் படத்தின்மேல் ஸ்ரீ கிருஷ்ணன் கூத்தாடுகிற அந்தச் சித்திரம் சித்திரமாகவா தோன்றுகிறது? அப்படியே அந்த நிகழ்ச்சி கண்முன் நடப்பதுபோலவே இருக்கிறது. அந்தச் சித்திரத்தில் கண்ணன் மட்டும் கூத்தாடவில்லையானால், காளியன் என்ற அந்தக்கொடிய சர்ப்பம் அப்படியேவந்து குத்தி விடுமோ என்று பயப்படும்படி அமைந்திருக்கிறது. அந்தப்படத்தினால்தான் அவர் மண்ணையும் பொன்னாக விளைவிக்கிறார்; தொட்டதையெல்லாம் வெற்றியாக்கிவிடுகிறார் என்றாள் ஹரிலட்சுமி.

அதற்கு ஞானப்பிரான், 'அந்தச் சித்திரத்தால் அவருக்கு அதிர்ஷ்டம் வருகிறதென்றால் நாம் எப்படித் தடுக்கமுடியும்?' என்று கேட்டார்.

அப்போது பௌத்தபிட்சு சொன்னார்: 'அந்த அதிசயமான சித்திரங்களைக் குறித்து நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அழகான சித்திரங்களால் அதிர்ஷ்டம் வந்து விடுகிறதென்று என்னால் நம்பமுடிகிறதில்லை. அதே சித்திரக் கலைஞரைக்கொண்டு நாங்களும் சித்தன்ன வாசலில் பல வர்ணச் சித்திரங்கள் எழுதி வைத்திருக்கிறோம். விஷ்ணுசித்தரின் பஜனைக் கூடத்திலுள்ள சித்திரங்களாவது நாளடைவில் அழிந்து போகக்கூடும். ஆனால் எங்கள் சித்திரங்கள் எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் அழிந்துபோகாத சித்திரங்கள்! அதெல்லாம் இருக்கட்டும். இனி நாம் என்ன செய்யலாம் என்பதை ஆலோசிக்கவேண்டும்!.

ஹரிலட்சுமி கணவரை நோக்கி, 'அந்தப்படம் அவர் பஜனைக் கூடத்தில் இல்லாவிட்டால் அவருக்கு இனி வெற்றி இல்லைதான்'.

கால்நடையாய்ச் சென்றவர்கள்
கனகதண்டி ஏறுவரே !

என்று சொல்லுகிறார்களே, அப்படிப்பட்ட அதிர்ஷ்டத்தை உண்டாக்கக்கூடியது அந்தக் காளியநர்த்தனம். அதுமட்டும் இனி பஜனைக் கூடத்தில் இல்லாமற்போனால் கனகப்பல்லக்கில் போனவரும் கால்நடையாகத் திரும்பவேண்டியதுதான்' என்றாள்.

அதுகேட்ட ஞானப்பிரான், 'அது எப்படி இல்லாமல் போகும்? இருக்கிறது இல்லாமல் போகுமா? இருக்கிறதை இல்லை என்பது நாஸ்திக சம்பிரதாயமல்லவா?' என்றார்.

ஹரிலட்சுமிக்கு கோபம் வந்துவிட்டது. 'இவ்வளவு அசட்டுத்தனம் இருந்தால், அதிர்ஷ்டமாவது, ஆட்டுக்குட்டியாவது!' என்று சீறியவள்போல் பெருமூச்சு விட்டாள். அசடு வழிந்த முகத்துடன் அரைக்கண்மூடியிருந்த ஞானப்பிரானுக்கு, அந்தப் பெருமூச்சு ஏதோ ஒரு பாம்பு சீறுவதுபோலத் தோன்றியது. அவர் திடுக்கிட்டார்.

அப்போது சந்திரன் ஒரு மேகத்தில் மறைந்திருந்தது. இருள் கலந்த அந்த மங்கிய ஒளியில் பௌத்தபிட்சு எழுந்து நின்றார். அருகேயுள்ள மரங்களின் இலைகள் சலசலவென்று சப்தித்தன, அப்போது வீசிய காற்றில்.

பௌத்தபிட்சு சிரித்துக்கொண்டே 'நாம் செய்யவேண்டிய காரியம் இப்போது எனக்குத் தெளிவாகிவிட்டது. அந்தச் சர்ப்ப நடனப் படம் அங்கே இருந்து இங்கே வந்துவிட வேண்டும். விஷ்ணுசித்தரின் பஜனைக் கூடத்தைக்காட்டிலும் ஞான ஒளி வீசும் பட்டாசாரியாரின் இல்லம்தான் அந்த விசித்திர நடனத்திற்கு மிகவும் பொருத்தமான இடம்!' என்றார்.

ஞானப்பிரானுக்குத் திகைப்பும் அச்சமும் அதிகரித்தன. சந்திரனும் அந்தச் சதியாலோசனைக்கு அஞ்சியதுபோல் இருண்ட மேகத்திற்குள் நன்றாக மறைந்துவிட்டான் அப்போது 'ஏன இந்தத் திகைப்பு? அந்தச் சித்திரத்தை இங்கே வருவிக்க வேண்டியதுதான். அப்போது தான் தங்கள் தேவியாரின் கவலை போகும்' என்ற பிட்சுவின் குரல் நாராசம்போல் ஞானப்பிரான் செவியில் விழுந்தது.

'அது எப்படி முடியும்? தாங்கள் மந்திரம் போட்டு அந்தச் சித்திரத்தை இங்கே வரவழைத்துவிடமுடியுமா?' என்று துயரமும் வெறுப்பும் கலந்த குரலில் ஞானப்பிரான் பிட்சுவை நோக்கிக் கேட்டார்.

'மந்திரமோ, தந்திரமோ, அந்தப்படம் இங்கே வந்துவிடவேண்டும். அதற்கு நானும் இயன்ற உதவி செய்வேன்' என்றார் பிட்சு.

'இன்றிரவே இந்தக் காரியத்தில் நீங்கள் வெற்றிபெறவேண்டும். இனி இங்கே வீண் பொழுது போக்கிக்கொண்டிருப்பதில் பயனில்லை' என்று கணவரைத் துரிதப்படுத்தினாள் ஹரிலட்சுமி.

'என்ன? என்னைப் போய்த் திருடவா சொல்லுகிறீர்கள்?' என்று நடுங்கிய குரலில் கேட்டார் ஞானப்பிரான். அம்மாள் மறுபடியும் சீறினாள்.

பௌத்த பிட்சுவோ, 'இழிவான இதய துர்ப்பலத்தை உதறித்தள்ளு. பேடியர்களின் ஞானப் பிதற்றல் வேண்டாம், அர்ச்சுனா!' என்று பொருள்படும் பகவத் கீதையின் வாக்கியங்களைச் சொன்னார்.

தாம் ஏதோ ஒரு பயங்கரமான வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டதுபோலவும், எப்படித்தான் நீந்திக் கரையேற முயன்றாலும் அது சாத்தியப்படாதபடி, அந்த வெள்ளம் தம்மை ஒரு பெருஞ்சுழியை நோக்கித் தள்ளிக்கொண்டு போவதுபோலவும் தோன்றியது ஞானப்பிரானுக்கு.

* * * *

அதேசமயம் விஷ்ணுசித்தரின் பல்லக்கு மதுரையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. பல்லக்குப் போகிகள் மதுரையின் வளங்களையும், அழகுகளையும் பாடிக்கொண்டே போனார்கள். அவர்களில் ஒருவன்,

தேன்பெருகும் சோலைத்
 தென்னன் வளநாடு

என்று பாட, மற்றவர்கள் அதைத் திருப்பிச் சொன்னார்கள்.

அப்படியே அவர்கள் பாடிக்கொண்டு போனார்கள் :

கனிஉதிரும் சோலைக்
 கனமதுரை நன்னாடு;
வாழை வடக்கினும்
 வான்கமுகு மேற்கினும்;
கரும்பும் இளநீரும்
 கண்திறந்து படைபாயும்;
கட்டுக் கலங்காணும்
 கதிருழக்கு நெல்காணும்;
அரிதாள் அறுத்துவர
 மறுதாள் பயிராகும்;
அரிதாவின் கீழாக
 ஐங்கலத்தேன் கூடுகட்டும்;
மாடுகட்டிப் போரடித்தால்
 மாளாது செந்நெலென்று
ஆனைகட்டிப் போரடிக்கும்
 அழகான தென்மதுரை!

விஷ்ணுசித்தருக்கோ 'மதுரை' என்றதும் கண்ணன் பிறந்த வடமதுரை ஞாபகம் வந்துவிட்டது. அந்த மதுரையிலும், கண்ணன் வளர்ந்த கோகுலத்திலும் அவருள்ளம் சஞ்சரிக்கலாயிற்று. அசுரர்களை ஒழித்துச் சாதுக்களுக்கு நலம் புரிந்த கிருஷ்ண லீலைகளை உடனிருந்து அனுபவிப்பதுபோல் அனுபவித்தது விஷ்ணுசித்தரின் உள்ளம்.

அந்த லீலைகளுக்கிடையே காளிய நடனமும் இவர் கண்முன் வந்தது. 'ஆஹா, அந்த ஐந்து தலை நாகத்தின்மீது செய்யும் அந்த நடன அற்புதத்தை என்னென்பது!' என்று அந்தக் கூத்தின் உட்பொருளிலே ஈடுபட்டது உள்ளம். பல்லக்கு மெள்ளப்போய்க்கொண்டிருந்தது.

(தொடரும்)



மெய் விளங்கிய அன்பர்கள்

பெரிய புராணப் பூங்கோயிலில்

6

சேக்கிழார் பிறந்த நாடு

பி. ஸ்ரீ.

குன்றத்தூரிலே குடியேறியிருந்த முதன்மையான குடும்பங்களில் சேக்கிழார் குடும்பமும் ஒன்று. இம்முதன்மைக் குடும்பங்களைக் 'கிழார்' என்று குறிப்பிட்டார்கள். சேக்கிழார் மரபைச் சேர்ந்தவர்கள், குன்றத்தூரில் மட்டுமல்ல, வேறு ஊர்களிலும் குடியேறி வாழ்ந்து வந்திருக்கிறார்கள். வேளாளப் பிரபுக்களான அவர்கள் விவசாயத் துறையில் மேம்பட்டு விளங்கியது போல், கல்வித் துறையிலும், ஒழுக்கத்திலும், சிவ பக்தியிலும் ஒருங்கே சிறந்து வாழ்ந்தார்கள் என்று ஊகிக்கலாம்.

சரிதக் குறிப்புகள்

சேக்கிழார் என்பது ஒரு குலப் பெயர். சேக்கிழார் சுவாமிகளின் உண்மைப்பெயர் அருள்மொழி. அருள்மொழி அருள்மொழித் தேவரென்று பேரும் புகழும் பெற்றுச் சேக்கிழார் குடிக்குக் குலவிளக்காக விளங்கினர். இக்குல விளக்கைச் சேக்கிழார் என்றே சிறப்பித்துப் பேசுகிறார்கள்.

சேக்கிழாருக்குப் பாலறுவாயர் என்ற சகோதரரும் உண்டு. சேக்கிழார் இளமையிலேயே சிவபக்தியும், அடியார் பக்தியும் உள்ளவராய். அன்பு கனிந்த தேவாரத் தோத்திரப் பாடல்களுக்கு உள்ளம் திறை கொடுத்திருந்தார்.

சேக்கிழாரின் சரிதம், உமாபதி சிவாசாரியர் இயற்றிய 'திருத்தொண்டர் புராண வரலாற்'றில் சுருக்கமாய்க் கூறப்பட்டிருக்கிறது. சேக்கிழார் சிதம்பரத்தில் பெரிய புராணம் பாடிய பிறகு அத்தில்லையிலேயே தங்கிவிட்டார் என்றும், பிறகு சோழ மன்னன் இவர் தம்பியான பாலறுவாயரை வரவழைத்துத் தமது அமைச்சனாக்கிக் கொண்டானென்றும், உமாபதி சிவம் தெரிவிக்கிறார்.

உமாபதி சிவம் சேக்கிழார் காலத்திற்குச் சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்குப்பின் — அதாவது கி. பி. 14-வது நூற்றாண்டில்—வாழ்ந்தவர் என்று தெரிகிறது. உமாபதி சிவம் கூறுவதைத் தவிரச் சேக்கிழார் பெருமானைப் பற்றி வேறு சரிதக்குறிப்புகள் ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை.

பக்திச் சரடு உணர்ச்சி வெள்ளம்

இரண்டாவது குலோத்துங்கனை அநபாயசக்கிரவர்த்தியின் காலத்திலே (1123—1148) வாழ்ந்த சேக்கிழாரை 14-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த உமாபதிசிவம் தமது 'திருதொண்டர் புராண வரலாறு' என்ற இலக்கியச் சிறு கோயிலில் பிரதிஷ்டை செய்து வைத்திருப்பதால், நாம் இன்றும் அந்தச்சரிதப்பின்னணியில் சேக்கிழார் பெருமானைத் தரிசிக்கும் பேறு பெறுகின்றோம். இதே சேக்கிழாரை இலக்கியப் பெருங்கோயிலான பெரிய புராணத்திலும் மற்ற நாயன்மார்களுடன் தரிசிக்கிறோம். அவர்களுடைய பக்திக் கதைகளிலெல்லாம் ஊடுருவிக் கிடக்கிறது சேக்கிழாரின் பக்திப் பொற்சரடு.

திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணத்தையும், உமாபதி சிவம் பாடியிருக்கும் இப்புராண வரலாற்றையும் உள்ளபடி ஓதியுணர்ந்து, தமிழ்ச் சைவத்திற்குச் சேக்கிழார் பெருமான் ஆற்றியுள்ள பெருந்தொண்டையும், சைவசமய சரித்திரப் பின்னணியில் வைத்துப் பார்க்கிறவர்களுக்கு, குன்றத்தூர்ச் சேக்கிழார் கோயிலில் மூலஸ்தானத்திலே உள்ள திருவுருவத்தைத் தரிசிக்கும்போது, எத்தகைய உணர்ச்சி வெள்ளம் பொங்கிப் பெருகும் உள்ளத்தினூடே!

உலவா(து) அமைந்த
சிவபோகம்
கொள்ளும் சைவப்
பயிர்வளர்க்கும்
கொண்டல் வருக
வருகவே!

[உலவாது—அழியாது. கொண்டல்—மேகம்.]

என்ற 'சேக்கிழார் பிள்ளைத் தமிழில்' பெருகியோடும் உணர்ச்சி, புலமை நிறைந்த பக்தியுள்ளத்தில் இயற்கையாகப் பொங்கக்கூடியதுதானே? சேக்

கிழார் பிறந்த தமிழ் நாட்டிலே பிறந்தவர்களுக்கு இந்த அனுபவம் ஏற்படக்கூடியதுதான், ஏற்படவேண்டியதுதான்.

சேக்கிழாரும், தமிழும்

பெரியபுராணம் 63 நாயன்மார்களுக்குமட்டுமா ஓர் அழியாத ஞானப் பூங்கோயில்? சேக்கிழாரின் ஆத்ம சரிதமும், நாயன்மார்களின் சரிதங்களுடன் இரண்டறக் கலந்து கிடப்பதால், சேக்கிழாரை உள்ளபடி தரிசிக்கக் கூடிய ஞானப் பூங்கோயிலும் பெரியபுராணம்தான். மேலும் இப்புராணத்திலே சேக்கிழாரின் தமிழகத்தையும் காண்கிறோம். ஆம், சேக்கிழார் பிறந்து வளர்ந்த தமிழகத்தை, சிவம் பெருகத் தமிழ் வளர்ந்த தமிழகத்தை.

சேக்கிழார் சமய அறிவுடன் உலக அறிவும், சரித்திர அறிவும் வாய்ந்தவராய், அமைச்சராகவும் அமைந்து, ஒரு பெருந் தமிழ்ச் சக்கிரவர்த்தியின் செங்கோலை நடத்திப் பார்த்தவரல்லவா? பெரிய புராணம் சிவபக்தர் சரிதங்களை வெளியிடத் தோன்றியதால் அரசர்களின் வரலாறுகளையும், வீரச் செயல்களையும் அதிகமாய்ச் சொல்லவில்லை. எனினும் வீரச் சுவையை எவ்வளவு பொருத்தமாக வெளியிடுகிறது. மற்றப்படி, இப்பெரியார் நமது உலக அறிவையும் சரித்திர அறிவையும் கொண்டு, தாம் தம் காலத்திலே கண்ணாரக்கண்ட தமிழ் நாட்டையும். தாம் கேள்விப்பட்டிருந்த தமிழ் நாட்டையும் பெரிய புராணத்திலே பிரதி பலிக்கச் செய்திருக்கிறார் என்பதில் ஐயமில்லை.

சமண ஆதிக்கம்

சேக்கிழார் காலத் தமிழ் நாட்டிலே, வைணவப் பெரியாரான இராமானுஜர் காலமான பின் பராசரபட்டர் ஸ்ரீரங்கத்திலிருந்து வைணவ பக்திப் பிரசாரம் செய்துவந்தாரென்று கருதலாம். வீர சைவம் வசவேசரால் பிரசாரம் செய்யப்பட்டு வந்தது. சமணசமய ஆதிக்கம் குன்றிப் போய்விட்டபோதிலும், இலக்கியத் துறையில் சமண ஆதிக்கம் இல்லையென்று சொல்லமுடியாது.

ஒன்பதாவது நூற்றாண்டிலே தோன்றிய சீவகசிந்தாமணி தமிழிலக்கியத்திலே செல்வச் சிந்தாமணியாகத் திகழ்ந்தது, பன்னிரண்டாம் நூற்றாண்டிலே. இக்காலத்தில் வாழ்ந்த கம்பனும் சிந்தாமணியில் ஊறித் திளைத்த கவியுள்ளம்தான். அக்காலத்திலே சமண இலக்கிய ஆதிக்கம் தமிழ் நாட்டைச் சுற்றியிருந்த கன்னடம்,தெலுங்கு நாடுகளிலும் காணப்பட்டது. இலக்கிய ஆதிக்கத்தைத் தொடர்ந்து சமண சமயமும் பரவி வந்ததென்றே கருதலாம்.

ரஸிக அநபாயன்

சேக்கிழாரின் சக்கிரவர்த்தியான இரண்டாம் குலோத்துங்கனுக்குத்தான் அநபாயன் என்ற பெயர் பெரும்பான்மையாக வழங்கிவந்தது. இந்த அநபாய சக்கிரவர்த்தி சிதம்பரத்தலத்தை விசேஷமாய் அபிமானித்தான். முதலாவது குலோத்துங்கன் சிதம்பரம் கோயிலில் சிற்றம்பலம் என்ற உள்ளிடத்தைப் பொன்வேய்ந்து அழகு செய்தான். இரண்டாவது குலோத்துங்கனே பேரம்பலத்தைப் பொன்வேய்ந்து அழகு செய்தான். அதாவது, அன்புமிகுதியால் வெளியிடத்தையும் பொன்னாக்கி, வீதிகளிலும் தில்லையின் எல்லைகளிலும் பொற்பணிகள் செய்துவைத்தான். இக்குறிப்புகள் பெரியபுராணத்தில் காணப்படுகின்றன.

இத்தகைய சக்கிரவர்த்தி கலா ரஸிகனாகவும் விளங்கியதால்தான் சிந்தாமணியில் ஈடுபட்டிருக்க வேண்டும். இவனைத் தூய அழகிய மனம் வாய்ந்தவன் என்று பெரிய புராணம் பாராட்டுகிறது.





கள்ளங்கபடற்ற தூய மனத்தை "வெள்ளை மனம்' என்று சொல்லுகிறோமல்லவா? 'வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை' என்கிறோம். சேக்கிழார்பெருமான் சிவபெருமானின் வெள்ளிமலைக்கு உபமானமாக்குகிறார் அநபாயனின் மனமாட்சியையும், தூய்மையையும்.

பேராசரும் சிற்றரசரும்

பெரிய புராணத்தில் வேறு பேரரசர்களையும் சந்திக்கிறோம். சோழமன்னர்களை மட்டுமல்ல, பாண்டியப் பேரரசியான மங்கையர்க்கரசியையும், அவள் கணவரையும் சந்திக்கிறோம். சேரர் பெருமானைச் சந்திக்கிறோம்.

பேரரசரர்களோடு சிற்றரசர்களையும் சந்திக்கிறோம். வேறு வம்சத்தைச் சார்ந்த அரசர்களும் வந்து போகிறார்கள்.

படையெடுப்புகள்

படையெடுப்புகளையும் பெரிய புராணத்தில் பார்க்கிறோம்.

திக்கனைத்தும் தனிச்செங்கோல்
முறைநிறுத்தித் தேர்வேந்தர்

என்று கோச்செங்கட் சோழனது திக்விஜயத்தைப் பேசுகிறது பெரிய புராணம். இச்சோழன் பாண்டிய நாட்டை வென்று 'தென்னவனாய் உலகாண்ட'தாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கூறியுள்ளார்.

மூர்த்தி நாயனார் 63 நாயன்மார்களில் ஒருவர். அவர் காலத்திலே தெலுங்க நாட்டிலிருந்து 'வடுகக் கருநாட மன்னன்' ஒருவன் பாண்டி நாட்டுக்கு வந்து அந்த அரசனை வென்று மதுரையில் அரசு புரிந்ததாகப் பெரிய புராணம் தெரிவிக்கிறது.

அந்த அன்னியனுக்கும் மாறாகக் குடிகள் கிளம்பிக் கலகம் செய்யவில்லை. அவன் கொடுங்கோல் செலுத்திப் பொதுஜனத் துரோகம் செய்து வந்தபோதிலும், தமிழ்க்குடிகள் 'இராஜத் துரோகம்' செய்யத் துணியவில்லையாம்: சும்மா சகித்துக்கொண்டுதான் இருந்தார்கள். அவன் இறந்த பின்புதான், வேறொரு அரசன் வேண்டும் என்று குடிகளும், அமைச்சரும் தீர்மானித்தார்கள்.

அதற்காக ஒரு யானையைக் கண் கட்டிவிட்டு, அது எவனைப் பிடரிமேல் ஏந்திக்கொண்டு வருகிறதோ அவனை அரசனாக்கிக் கொள்ளவும் துணிந்தார்கள். இதனால், அந்நாளில் நம்மவர்களுக்கிடையே அரசியல்-முற்போக்குக் கொள்கைகள் விசேஷமாக இல்லையென்றுதான் சொல்ல வேண்டும்.

எனினும் அறங்காப்பவனே அரசன் என்ற கொள்கை மக்களுக்கிடையே—அரசர்களுக்கிடையே-வேரூன்றியிருந்தது. நீதி முறையில் தவறுவது பெரும் பாவம் என்று அரசர்கள் நம்பியதால், அரசு பெரும்பாலும் நல்லரசாகவே அமைந்திருந்தது. நல்ல அமைச்சர்களும்—சேக்கிழாரைப்போல் இருந்திராவிட்டாலும்—அரசனுக்கு அஞ்சாமல் அறத்திற்கே அஞ்சித் தரும பரிபாலனமும், நீதி பரிபாலனமும் தக்க வழியில் நடைபெறுவதற்குப் பெருங்காரணமாயிருந்தார்கள்.

மேலும், குடிகள் அநீதியும், கொடுமையும் செய்து அறத்தைச் சிதைக்க முயன்றாலும், அத்தீங்குக்கும் ஆட்சிமுறையே பொறுப்பானது என்ற உயர்ந்த லட்சியம் திருஞானசம்பந்தர் வரலாற்றில் காணப்படுவதால், சேக்கிழார் பிறந்த தமிழ்நாட்டிலே பொதுவாக ஆட்சிமுறை அறவழியில் நடைபெற்றிருக்கவேண்டும்.

இராமானுச நூற்றந்தாதி

கானசிகாமணி-அரியக்குடி
ராமானுஜய்யங்கார
ஸ்வரப்படுத்தியது

சீரிய நான் மறைச் செம்பொருள்
செந்தமி ழால் அளித்த
பாரிய லும்புகழ்ப் பாண் பெரு-
மாள்சர ணாம் பதுமத்
தாரியல் சென்னி இராமா-
நுசன்தனைச் சார்ந்த வர்தம்
காரிய வண்மை,என் னால் சொல்-
லொணா(து) இக் கட லிடத்தே

அரும்பதவுரை

சீரிய — சிறந்த
நான்மறைச் செம்பொருள் — நாலு வேதத்தின் செம்மையான பொருள்
பார் இயலும் — பூமியில் பரவிய
பாண் பெருமாள் — திருப்பாணாழ்வார்
சரணாம் பதுமத்தார் இயல் சென்னி — பாததாமரை சூட்டிய தலை
சொல்லொணாது – சொல்ல முடியாது
கடலிடம் — பூமி.

விளக்கம்

நான்மறைச் செம்பொருளையும் செந்தமிழால் சுருக்கமாக அளித்த பெரும்புகழ் வாய்ந்தவர் திருப்பாணாழ்வார். அவருடைய பாத தாமரையை முடி மலராகக் கொண்டு மகிழும் இராமானுஜரைச் சார்ந்தவர்களின் தயாளகுணத்தை என்னால் சொல்லி முடியாது.

இடங்கொண்ட கீர்த்தி மழிசைக்(கு)
இறைவன் இணை அடிப்போ(து)
அடங்கும் இதயத் (து) இராமா-
நுசன் அம்பொற் பாதம் என்றும்
கடங்கொண் (டு) இறைஞ்சும் திருமுனி-
வர்க்கன்றிக் காதல் செய்யாத்
திடங்கொண்ட ஞானியர்க் கே அடி-
யேன் அன்பு செய்வ துவே.

அரும்பதவுரை

மழிசைக்கு இறைவன் — திருமழிசை ஆழ்வார்
இணை அடிப்போது — இரண்டு பாத தாமரைகளும்
கடம் கொண்டு — கடமையாகக் கொண்டு
இறைஞ்சும் — வழிபடும்.

விளக்கம்

பிரசித்திபெற்ற திருமழிசையாழ்வாரின் திருவடிகளைத் தம் இதயத்திலே வைத்திருக்கும் இராமானுஜருடைய அழகிய திருவடிகளில் வழிபடுவதைக் கடமையாகக் கொண்டிருப்பவர்களை முனிவர்களென்கிறார். அம் முனிவர்களுக்கே நட்புக்காதல் பூண்டிருக்கும் மனோதிடத்தை ஞானம் என்கிறார். அத்தகைய ஞானிகளுக்கே இந்த நூலாசிரியர் அன்பு பூண்டிருக்கிறாராம்.

ராகம் : ஸஹானா   தாளம் : சாபு

(பாட்டு—11ம்—12ம்)

; ஸ நி ஸ ரி கா ரி ரி | ரி ரி ரீ ரீ | , ரி க ம ப பா த ப ம | ம க க மா ரி ரி ரி ரீ ம க கரி ||
ஓ . ரி . . . ய | நான் மறைச்செம் | . பொருள் செந் . த . . . . | மி . மூர். . லளித் த . . . . ||

ஸா — ஸ ந் நி ரி ஸ ஸ ரி | ஸ ந் நி நி ஸா த ·தா ந் நி த பா | ; ·த நி ஸ ரி ரி ரி | ரி க ம பா ம க ம க ம ரி ம க ரி ||
. — பா . ரி ய லும். | பு . கழ் . . ப்பாண். . . . | . பெரு மாள். ச ர | ணும். . . . ப . து . மத் . . . ||

ஸா — பா, த ம ப மா தா | நீ, ஸ்ா, ஸ் நி ரி ஸ்ா | . நி ரி ஸ்ா ஸ்ரி | ஸ் நீ நி ஸ் த தா நி த பா ||
. — தா . ரி . யல் சென் | னி யி ரா . . மா | . னுசன் தன்னை. | சார்ந் . த . . வர் தம். . ||

— நி ரி ஸ் ஸ் ரி | ஸ் நி நி ஸ்ா த தா நி த பா | , ரி க ம ப பா . த ப ம | ம க க மா ரி ரி ரி ரி ம க ரி ||
கா ரி ய வண். | மை. . . . . என்னுல். . | . சொல்லொணு . இ. . . | க . ட . . விடத் தே. . . ||

ஸா — நி ஸ ரி க ரி ரி | ரீ ரி ரி ரி ரீ | , ரி க ம ப பா த ப ம | க க மா ரி ரீ ரீ ம க கரி ||
. — இ ட ங் கொண் . ட | கீர்த்தி மழிசை | க் . கிறைவன் . இ . . . | ணை ய . . டிப் போ. . . . ||

ஸ — ந் நி ரி ஸ ஸ ஸ ரி | நி நி ஸா த ·தா ந் நி த பா | , த நி ஸா ரீ ரீ ரி க ம பா ம க ம ரி க ரி ||
து — அடங்கு மி த . | ய த் தி . . ரா மா . . | . னு . சன் அம்பொற் பா. த . . . மென் . றும் . . ||

ஸ — ப த ப த ம பா ம த நி | ஸ்ா, ஸ்ா, ஸ்ா ஸ்ா | , நி ரி ஸ் ஸ்ா ரி | ஸ் நி நி ஸ்ா த தா நி த பா ||
. — க . டங் . கொண் . . டி . | றை ஞ் சு ம் தி ரு | மு னி வ . ர் க் க ன் றி | கா . தல் . . செய் யா . . ||

; — நி ரி ஸ்ா ஸ்ரி | ஸ்நி நி ஸ்ா த தா நி த பா | . ரி க ம ப பா த ப ம க க மா ரி ரி ரி ரி ம க ரி ||
. — திடங் கொண்ட. | ஞா. னி . . யர்க் கே. . | அ டி யேன் . அன் . . . பு செய் . . வ து வே. . . ||

கரி ஸ்நி —
. . . . — (சீரிய நான்மறை)



‘வரலாம் வா, ருக்கு வந்தாச்சு’ என்று தெருவில் நின்று எட்டிப்பார்த்த சரோஜாவை வரவேற்றாள் பானு.

சரோஜாவும் உள்ளே வந்து சேர்ந்தாள்.

‘நேற்று, நீ இல்லாமல் போய் விட்டது சரோஜாவுக்கு ‘வெறிச்சென்ற’ மாதிரி இருந்தது’ என்று பானு, ருக்குவைப் பார்த்துச் சொல்லிவிட்டு, ‘என்ன மாமி, நான் சொல்கிறது சரி தானே?’ என்று ருக்குவின் மாமியாரைப்பார்த்துக் கேட்டாள்.

‘நான் இராமலிருந்தது சரோஜாவுக்கு வெறிச்சென்றிருந்ததோ, இல்லையோ, எங்கள் மன்னியை விட்டுப் பிரிந்திருப்பது அவ்வளவு கஷ்டமாக இருக்கிறதாம் அவர்களுடைய குடித்தனக்கார மாமிக்கு’ என்றாள் ருக்கு.

‘நீ சொல்லித்தான் கேட்டேன். ஒரு குடித்தனக்கார மாமி மற்றொரு குடித்தனக்கார ‘மாமி’யின் ‘பிரிவை’த் தாங்கமுடியாமல் கஷ்டப்படுகிறாள் என்று. அநேகமாக ஒரு குடித்தனக்காரி மற்றொரு குடித்தனக்காரியின் சண்டைச் சச்சரவு இல்லாமல் நிச்சிந்தையாக கொஞ்ச நாட்களுக்கு இருக்க மாட்டோமா என்றுதான் நினைப்பாள். இங்கே என்னமோ வழக்கத்துக்கு நேர் விரோதமாக இருக்கிறது’ என்றாள் சாந்தா.

‘சண்டைக்காரிகளாக இருந்தால் நீ சொல்கிறது சரிதான். அந்தக் குடித்தனக்கார மாமியைப்பற்றித் தெரிந்திருந்தால் இப்படியெல்லாம் சந்தேகம் ஏற்படுவதற்கு நியாயமே இல்லை’ என்றாள் ருக்கு.

‘ஆமாம். அன்றைக்கே நீ அந்தக் குடித்தனக்கார மாமியைப்பற்றிச் சொல்வதாகச் சொன்னாய். என்ன எல்லோரிடமும் இல்லாத அப்படிப்பட்ட ஒரு விசேஷ குணம் அவளிடம் மாத்திரம்?’ என்றாள் விமலா.

‘உலகத்திலேயே ஒருவரிடமும் இல்லாத ஆச்சரியமான குணம் என்று நான் சொல்லவில்லை. மனிதர்களுக்கு ஸகஜமாய் இருக்க வேண்டியது குணம்தான். அந்த ஸகஜமான குணம் இருப்பது தானே அருமையாக இருக்கிறது’ என்றாள் ருக்கு.

‘அதாவது அவனவனுக்கு ஏற்பட்ட கடமை. ஏதோ ஒரு சிறிய காரியத்தை அவனவன் செய்துவிட்டால் அதுவே இந்தக் காலத்தில் பெரிய ஆச்சரியம் தான்’ என்றாள் பானு.

(ருக்கு சொல்லுகிறாள்)

★

‘நான் எது செய்துகொண்டாலும் ருக்குவுக்குக் குறை கூற வேண்டியதுதான் வேலை’ என்று மனம் நொந்து கூறுகிறாள் நீலாமணி.

நான் வேண்டுமென்று கூறுகிறேன்? தொட்டால் ஒட்டிக் கொள்ளுகிறமாதிரி கறுப்பு. குச்சிகளை ஒட்டவைத்தமாதிரி கையும் கால்களும் ஒட்டகம் மாதிரி நீண்ட கழுத்து! இத்தனை வைபவத்தில் கழுத்தில் ‘உசசிருக்குப் போடுகிற மாதிரி’ ஒரு மணி சரத்தையும் கட்டிக்கொண்டு வந்து நின்றாளானால், மனிதர்கள் பார்த்துச கிப்பது இருக்கட்டும். அவளைப் பிறப்பித்த தெய்வம் பார்த்துச் சகிக்குமோ, நீங்களே யோசித்துப்பாருங்கள்.

அதென்னமோ பாவா, கழுத்தைச்சுற்றி மணி கட்டிக் கொள்ளும் வழக்கம் கொஞ்ச நாட்களாய் மும்முரமாகிக் கொண்டு வருகிறது.

இந்த மணிகளை மாட்டின் தலையில் கட்டிததான் பார்த்திருக்கிறேன். அது ஏனோ மனிதர்களிடையேயும் [illegible] விட்டது! அது யாருக்கு நன்றாகயிருக்கிறதோ? நீலாமணிக்கு அடியோடு நன்றாக இல்லை. உள்ளதைசசொன்னால் அறுவயமாக எண்ணி நொந்துகொள்ளுகிறாள். எபபடியிருக்கிறது நாகரிகத்தின் லட்சணம்!

‘எங்கள் மன்னி அங்கே குடி போன நாளாக இதுவரையில் ஒரு சண்டையா, சச்சரவா, ஒன்றும் கிடையாது அது மாத்திரமில்லை. அவர்களால் இவளுக்கு எவ்வளவோ ஒத்தாசை. அவர்களுடைய பசங்களும் தங்கமான பசங்கள். மன்னியிடம் அப்படிப்பட்ட ஆசை அதுகளுக்கு. எங்கள் அண்ணா ஒரு நாள்கூட ஸ்டோருக்குப் போனதே கிடையாதாம். நான், நீ என்று போட்டி போட்டுக்கொண்டு அந்தப் பசங்கள் வாங்கிக்கொண்டு வந்துவிடுவார்களாம், எங்கள் அண்ணா ஒரு பத்திரிகை ஆபீஸில் இருக்கிறான். அவனுக்கு மாதத்தில் பாதி நாட்கள் நைட் ட்யூடி. எங்கள அண்ணா, மன்னி, இரண்டுபேர் மாத்திரம் தான் இருக்கிறார்கள். அண்ணா ராத்திரிவேளையில் ஆபீஸுக்குப்போய்விட்டால் இந்தப் பசங்கள்தான் அவளுக்குத் துணையாம்’ என்றாள் ருக்கு.

‘உங்கள் மன்னியும் நல்லவள் என்று சொல்’ என்றாள் சரோஜா.

‘தங்கமான பெண். தன்னுடைய மனுஷ்யாள், பிறத்தியார் என்று வித்தியாசமில்லாமல் எல்லாருடனும் ஒட்டி ஒட்டிப் பழகுவாள். நல்லவள் என்பதோடு மாத்திரமில்லை. துளியாவது கர்வம் கிடையாது. மறந்துபோய்கூட வாயில் ஒரு கெட்ட வார்த்தை வராது. அத்துடன் தெரியாத வேலை கிடையாது. சோம்பலும் இல்லை சமையல் அவ்வளவு நன்றாகச் செய்வாள். என்று ருக்கு சொல்லிக்கொண்டிருக்கையில் அப்படியானால் விருந்தாளிகளுக்குக் குறைவில்லை என்று சொல்’ என்றாள் வசந்தா.

‘ஏன், எதற்காகச் சொல்லுகிறாய்?’ என்று கேட்டாள் ருக்கு.

‘நேற்று எங்கள் மாமா வந்திருந்தார். சாப்பிடச்சொன்னேன். அதற்கு அவர், ‘இனி நீ சொல்லாமலே இங்குதான் சாப்பாடு. வருகிறபோதெல்லாம் எங்களகத்தில் ஒருவேளை சாப்பிடக்கூடாதா என்று நச்சரித்துக்கொண்டிருந்தான் மனுஷன். சரி, இப்படித் தொந்திரவு பண்ணுகிறானே என்று போனால் அவர்கள் எப்படித்தான் சாப்பிடுகிறார்களோ, எல்லாம் ஒரே விஷம். வாயில் வைக்க வழங்கவில்லை. மோரிலாவது சாப்பிடுவோமென்றால் மோர் ஒரே துர்நாற்றம். பாத்திரத்தைச் சரியாகத் தேய்த்து அலம்பாமல் அப்படியே பாலைத் தோய்த்துவிடுகிறதுகளாக்கும். அப்பப்ப! அவர்கள் எப்படித்தான் சாபபிடுகிறார்களோ? தின்றுவிட்டுத் தூஷிக்கக் கூடாது என்று சொல்வார்கள். என்ன செய்கிறது இப்படி இருந்தால்?’ என்றார் மாமா. அப்படிப்பட்ட இடத்தில் வருந்தி வருந்தி அழைத்தாலும் யார் சாப்பிடுகிறது அந்த சமையலை?’ என்றாள் வசந்தா.

‘யாரடி அது அந்த நளபாகக்காரி?’ என்றாள் சரோஜா.

‘அன்று என்னைத் தேடிக்கொண்டு சுந்தரவல்லி என்று ஒரு பெண் வந்ததே ஞாபகம் இருக்கறதா?’ என்றாள் வசந்தா.

‘கொஞ்சம் கறுப்பாக அம்மை புள்ளி மூஞ்சி.........’ என்றாள் ருக்கு.

‘அதுதான்’ என்றாள் வசந்தா.

‘விஜய குட்டியின் அகமுடையானைச் சொல்கிறாயா, என்ன?’ என்றாள் பானு.

‘அதுவேதான்’ என்றாள் வசந்தா.

‘அது, பாவம், ஒன்றுமே தெரியாது. அதைப்போய் ஒரு ஜந்துவாகச் சொல்லுகிறாயே? ஏதோ கையில் ஆயிரமோ இரண்டாயிரமோ கொடுத்தார்களென்று கல்யாணம் பண்ணிக்கொண்டு விட்டார்கள். விஜயகுட்டி மூக்கும், முழியும், எடுப்பாக, சிவப்பாய் ராஜாமாதிரி லக்ஷணமாக இருக்கிறான். அவனுக்குப் போய்இந்த அவலட்சணத்தைச் செய்து வைத்தார்களே என்று பானு சொல்லிமுடிப்பதற்குள் அவனும் சம்மதித்துப் பண்ணிக்கொண்டானே அதைச் சொல்லு’ என்றாள் சாந்தா.

‘எல்லாம் பணம் பண்ணுகிற வேலை’ என்றாள் வசந்தா.

‘அந்தமாதிரியெல்லாம் இல்லை. எங்கள் மன்னிக்குத் தெரியாத வேலை கிடையாது. குழந்தையிலிருந்தே நல்ல பழக்க வழக்கங்கள்; பெரியோர்களிடம் மட்டுமரியாதை, அடக்க ஒடுக்கம், ரொம்ப நல்ல பெண். வெளியில் எங்கெங்கோ இரண்டா



‘...சமையல் செய்வதில் கஷ்டமே இராதாம்...’

யிரம், மூவாயிரம் 'கையில்' கொடுப்பதாக எத்தனையோ வரன்கள் வந்தன. பணம் பெரிதல்ல. குணம்தான் பெரிது என்று இவனையே பண்ணிக்கொண்டுவிட்டான் அண்ணு' என்ருள் ருக்கு.

'பணத்துக்கென்னடி பிரமாதம். நாளைக்கே சம்பாதித்துக் கொள்ளலாம். குணம்தான் முக்கியம். அழகுகூட அடுத்த படிதான்' என்ருள் ருக்குவின் மாமியார்.

'நீங்கள் எந்தக் காலத்துக் கதையையோ சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுதெல்லாம் கலியாணப் பேச்சை எடுத்தால் 'கையில்' எவ்வளவு கொடுப்பார்கள் என்ற பேச்சுதான் ஆரம்பமே. பணம் இருந்துவிட்டால் போதும், அழகு வேண்டாம், குணம் வேண்டாம். ஜாதகம் ஒத்து வராவிட்டால்கூடப் பரவாயில்லை' என்ருள் பானு.

'அதன் பலனைத்தான் பின்னிட்டுப் பல குடும்பங்கள் அனுபவிக்கிறதுகள்' என்ருள் ருக்குவின் மாமியார்.

அன்று போயிருந்தபோதுகூட குடித்தனக்கார மாமி சொன்னுள். உங்கள் மன்னி மகா கெட்டிக்காரி. இத்தனை வயசாயிற்று; ஆவக்காய் ஊறுகாய் போடத் தெரியாது. எங்காத்துக்காருக்கு ஆவக்காய் ஊறுகாய் என்ருல் அசாத்திய ஆசை. உங்கள் மன்னியைக்கேட்டேன், ஆவக்காய் ஊறுகாய் போடுவது ரொம்ப சுலபமாயிற்றே. சிறிய ரகம் 100 மாங்காய் இருந்தால், ஒருபடி உப்பு, ஒருபடி மிளகாய்ப்பொடி, கடுகும் மஞ்சளும் (சமமான அளவு) இடித்தது $\frac{1}{4}$ படி. காயம் $2\frac{1}{2}$ பலம், நல்லெண்ணெய் ஒரு வீசை. மாங்காயை பருப்பை எடுத்துவிட்டு, நாலாகவோ எட்டாகவோ நறுக்கிக் கொண்டு ஒரு ஜாடியில் உப்பு, மஞ்சள்பொடி, மிளகாய்ப் பொடி, காயம், நல்லெண்ணெய் எல்லாவற்றையும் மாங்காயுடன் சேர்த்து மூடிவைத்துவிட வேண்டும். வேண்டுமானுல் ஒரு கால்படி கடலை போட்டுவைக்கலாம் என்ருள். அதேமாதிரி செய்தேன், ஊறுகாய் அமிர்தம் மாதிரி இருக்கிறது. 'உனக்கும் ஆயிற்றே



''..................இந்தா மாமி உங்கள் திருகு..................''

''......ஒன்று ஜலம் தூக்கிக் கொடுக்குமாம்......''

குட்டிச்சுவருக்கு ஆகிறமாதிரி வயது. அத்துனுடைய சாமர்த்தியத்தைப்பாரு' என்று உங்கள் மன்னியின் கெட்டிக்காரத்தனத்தை ஸ்தோத்திரம் பண்ணி மாளவில்லை அவருக்கு. இதுதான் தெரியும், இது தெரியாது என்பது கிடையாது. எல்லாம் தெரியும். நல்ல கெட்டிக்காரி. எங்காத்துப்பசங்கள் அவளுடன் இரண்டு வருஷ காலம் இருந்தால் போதும், குடும்பத்துக்கு வேண்டியதெல்லாம் தெரிந்துகொண்டு விடுங்கள்' என்ருள் குடித்தனக்கார மாமி. எங்கள மன்னி வீட்டு விலக்காகப்போய் விட்டால் ஒன்று பாத்திரத்தைத் தேய்த்துக் கொடுக்குமாம். ஒன்று காய்கறி நறுக்கிக் கொடுக்குமாம். ஒன்று ஜலம் தூக்கிக் கொடுக்குமாம். ஒன்று அடுப்பை மூட்டுமாம். அண்ணுவுக்குச் சமையல் செய்வதில் கஷ்டமே இராதாம். அது மாத்திரமில்லை. வைத்தது வைத்த இடத்தில் அப்படியே இருக்குமாம். இன்னமும் எங்கள் மன்னி சொல்லிச் சொல்லி ஆச்சரியப்படுகிருளே. ஒருநாள் மன்னியின் வைர மூக்குத்



கொரியாமீது இரு தேசங்கள் தற்சமயம் ஆதிக்கம் செலுத்துவது அனைவருக்கும் தெரிந்த விஷயம். வடக்கு கொரியா ரஷ்யர் வசமும் தென் கொரியா அமெரிக்கர் வசமும் இருக்கிறது. வடக்கு கொரியாவிலிருந்துதான் மின்சாரம் உற்பத்தியாகிறது. சென்ற வாரம் ரஷ்ய—அமெரிக்க கசகசப்பு அதிகமாகவே ரஷ்யர் மின்சார லயனை துண்டித்துவிட்டனர். படத்தில் மின்சார உற்பத்திசாலையையும், அமெரிக்க—ரஷ்ய பிரதேசங்களைப் பிரிக்கும் நீர்ப்பரப்பையும் காணலாம்.

திருகு கீழே விழுந்துவிட்டதாம். இவள் கவனிக்கவில்லையாம். குடித்தனக்கார மாமியின் இரண்டாவது பெண் கையில் அது அகப்பட்டதாம். 'இந்தா மாமி' உங்கள் திருகு போயிருக்கிறதே, கீழே விழுந்திருந்தது' என்று சொல்லிக் கொடுத்துவிட்டுப் போயிற்றாம். ஒரு திருட்டு, 'தண்டா' ஒன்றும் கிடையாதாம். சொந்த மனுஷ்யாள்மாதிரியே பழகுகிறார்களாம்' என்றாள் ருக்கு.

'ஆனால் கூடவே அதையும் சொல்ல வேண்டுமோவியோ' உங்கள் மன்னியும் தங்கமான பெண். ஒரு தப்பு தண்டா தெரியாது. எங்கிருந்து சண்டை இருக்கப்போகிறது?' என்றாள் பானு.

'அதெல்லாம் ஒன்றுமில்லை. சில்லரை விஷயங்களைப் பெரிதுபடுத்தாமல் ஒருவர்கொருவர் ஒத்தாசையாய் இருந்தால் எதற்காகச்சண்டை இருக்கப் போகிறது? எல்லாம் நாம் இருக்கிறமாதிரியில் இருக்கிறது' என்றாள் ருக்குவின் மாமியார்.

'நன்றாகச் சொன்னீர்கள் மாமி. அது தெரிந்துவிட்டால் அப்புறம் உலகத்திலே சண்டை சச்சரவு ஏது? படித்தது, படிக்காதது, எல்லாம் இது தெரியாமல்தானே அல்லாடுகிறதுகள் என்றாள் பானு.

'எதற்காகச் சொல்ல வந்தேனென்றால் சரோஜாவின் வீட்டில் அப்படிப்பட்ட திருட்டும் வீண் சண்டைகளும் இருக்கிறதாகச் சொன்னாளே. அதற்கு நேர் விரோதமாக இங்கே எப்படி இருக்கிறது பாருங்கள் என்பதற்காகத்தான்' என்றாள் ருக்கு.

'இதுதாண்டியம்மா உலகம் என்றாள் ருக்குவின் மாமியார்.



நாமொன்று நினைக்க—.

ய. மஹாலிங்க சாஸ்திரிகள் எம்.ஏ.பி.எல்.

மறுநாள் காலையில் மணி, சேஷு சாஸ்திரிகளின் நிரூபத்தை வேறு கவரில் அட்ரஸ் எழுதி ஸீதாராமனுக்கு அனுப்பிவிட்டார்.

அன்று தபாலிலேயே வேறு இரண்டு கடிதங்களும் ஸீதாராமனுக்கே அட்ரஸ் எழுதிச் சேர்க்கப்பட்டன. ஆனால் இக்கடிதங்கள் பட்டணத்தில் ஸீதாராமன் கைக்குப் போய்ச் சேருமுன், நாம் சிறிது பின் நோக்கிச் சென்று அதுவரையில் நடந்திருந்த சில வர்த்தமானங்களை ஆராய்வது அவசியமாயிருக்கிறது.

ஸீதாராமனும், ராமநாதனும் காலேஜில் சேர்ந்து படிக்கத் துவக்கியதாய்ச் சொன்னோமல்லவா? அந்த வருஷத்தில் காந்திமதி ஹைஸ்கூலில் நாலாவது பாரத்தில் படிக்கலானாள். அவளுக்கு வயதினாலும் படிப்பினாலும் ஜோடியான செல்லம் (ராமநாதனின் மாமாபெண்) சியாமளாப்புரத்திலிருந்து மதராஸ் வந்து படிக்கத் தொடங்கினாள். வெங்கிட சுப்பையர் காந்திமதியையும், செல்லத்தையும் தன் "காரில்" பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவும் அழைத்து வரவும் ஏற்பாடு செய்தார். இரு பெண்களும் வெகு உற்சாகமாய்ப் படித்து வந்தார்கள். கவலை என்பதையே அவர்கள் அறியாமல் தங்கள் மன உல்லாசத்திற்கே உலகம் படைக்கப்பட்டிருக்கிறதென்று எண்ணியவாறு இனிது காலம் கடத்தி வந்தார்கள். வாழ்க்கை என்பது என்ன? என்று அச்சிறுமிகளைக் கேட்டால் "காலைக் காப்பி ஸோப்பு. தைலம் பௌடர், கண்ணாடி முன் ஆடை அலங்காரம், ஒன்பது மணிக்குச் சூடான போஜனம், பின்பு டிபன் ஸெட் புஸ்தக முஸ்திப்புடன் மோட்டாரில் பள்ளிக்குப் பிரயாணம், பள்ளியில் உபாத்தியாயர்களின் சலுகையுடன் அழகற்ற அசட்டுப் பிள்ளைகளின் மத்தியில் தோழிக் கூட்டங்களினிடையே மயில்பேடுகள்போல் சிலமணி நேரம் நடமாட்டம், நடுவே சிரிப்புக்களிப்புகள், சுவையுடைய சிற்றுண்டி, மாலை மோட்டாரில் சாவகாசமாய்க் காற்று வாங்கிக்கொண்டு வீடு திரும்புதல், பின்பு பாட்டுக் கூத்து, படம் முதலிய காலக்ஷேபங்கள், உயர்தர உண்டிக்குப்பின் மெத்தென மெத்தையில் அயர்ந்த நித்திரை, இதுதான் வாழ்க்கை" என்று தயங்காமல் தெரிவிப்பார்கள். சமயலுக்கு மதுப் பாட்டியும், துணி துவைக்க அக்காயியும், கட்டளைகளை நிறைவேற்றப் பொக்கயனும் டிரைவர் குமாஸ்தா முதலியவர்களும்—(ஸ்ரீமான் வெங்கிட சுப்பையரின் வீட்டு சிப்பந்திகள்) அப்பெண்களின் நோக்கமறிந்து அன்புடனே சேவை புரிந்து வந்தார்கள். இந்தச் சுகச்சூழலில் சுழன்று வந்தார்கள். இணைபிரியா நட்புகொண்டு எழில்கழலின் புதிய கதிர்கள் போல் வளம்பெற வளர்ந்து வந்த காந்திமதியும் செல்லமும்.

பெண் குழந்தைகள் இருக்கும் தனவந்தர் குடும்பங்களில் புருஷப் பிள்ளைகளுக்குச் சற்றுச் சலுகைக் குறைவுதான். "புத்ராத ஷீடகுணம் புத்ரீ" என்றதோர் ஆன்றோர் வாக்கியமிருப்பதாகவும் ஞாபகம் வருகிறது. பணச் செலவைப் பொருத்தது சலுகை என்றால் ஒவ்வொரு குடும்பத்திலும் பெண்கள் விஷயமாகத்தான் பணச்செலவு அதிகம் என்பது அனுபவத்தில் தெரிந்தது தான். ஆடை ஆபரணங்கள் விஷயமாய்ப் புருஷப்பிள்ளைகளைவிடப் பெண்களுக்கு எட்டு மடங்கு அதிகச்சலுகை என்று சொல்வதை பதினெட்டு மடங்கு என்றும் எண்பது மடங்கு என்றும் கூடக் கூறுவது பொய்யாகாது. வர்ணம், வாசனை, வினோதம், விம்பு, வெற்றி, வேஷம், வைபோகம், என்ற ஏழு வகை "வகார"ங்களில் உள்ளடங்கியது இன்பவாழ்க்கை என்ற இயற்கைச் சித்தாந்தத்தை மேற்கொண்ட பெண்ணினம் பிரபஞ்ச சக்தியின் பிரபாவத்தால் அன்றும் இன்றும் அரசுரிமை செலுத்தி வருகிறது. இத்தகைய இன்பவாழ்க்கைக்காக அவ்வப் போதைய நாகரீகத்தை அனுசரித்து எவ்வளவு அவர்கள் சலுகை பெறுகிறார்கள் என்பது குடும்பக்கணக்கைப் பரிசீலனை செய்தால் விளங்கும். பண வீக்கமுடைய இந்நாளில் மேற்கூறிய "வகார" வர்க்கத்திற்குச் சுக்கிர

தசை அடித்து வருகிறது. வர்ணம், வாசனை, விநோதம், வேஷம் என்ற நான்கு "ஐட்டங்"களுக்கான சாமக்கிரிகள் கணக்கிட முடியாதவை. விரிக்கின் பெருகும். அவைகளின் அனுபோகமறியாத ஆடவர்கள இருந்தால் அவர்கள் பத்திரிகைகளின் விளம்பரங்களின் பேரில் சிறிது பார்வையைச் செலுத்தினால் போதும். ஆங்கில சமூகக் கொள்கைகளைப் பின்பற்றும் நவீனக் கொள்கைகளில் பெண்களின் வெற்றி, வைபோகங்கள் தழைத்தோங்கி வருகின்றன. நாகரீகமே, சமூகம் கண்பார்க்கப் பெண்மையைப் போற்றுவதும் முன்னணியில்விட்டுப் பின் செல்வதும் ஆகிய இரு தத்துவங்களில் அடங்கிவிட்டது. சலுகைக்கும் விம்புக்கும் தொடர்பு உண்டு. ஆகையால் அதைத் தனியே உதாகரிக்கத் தேவையில்லை.

இந்த ஏழு "வகார"ங்களும் இயற்கையை ஒட்டினவையாகையால் பழமையிலும், புதுமையிலும் பொருந்தியவைதான். ஆனால் அவைகளின் நவநாகரீக அவதாரங்கள் முன்னவர்களைப் பழிப்பவைகளால் உருவாகியிருக்கின்றன. முன்னவர்கள் மடமையால் இருள் சூழ்ந்த இரவில் பதுங்கிப் பயனற்ற ஜீவனம் செய்து வந்தமையால் இவ்வரிய சூரிய வெளியை அறியாத பேதைகளாயிருந்தார்கள் என்பது வருந்தத்தக்கதே!

காந்திமதியும், செல்லமும் நவநாகரீகப் பிரகடனங்களைப் புதிய "பிளாட்டிங்" இதழ்கள்போல் முகத்திலும், அகத்திலும் நடையிலும், உடையிலும் வாரி அப்பிக் கொண்டனர். அவர்கள் பேசும் மொழிகள்கூட இவ் விரட்டைப் பிறவிக்கு ருசுவாயின. இந்தப் பெண்ணுடகச் சூரியோதயத்தில் தீபவொளிபோல் மங்கினார்கள் ஸீதாராமனும், ராமநாதனும்.

பிள்ளைகளுக்கே பதினெண் பிராயம் என்பது ஒரு மஹத்தான மாறுதலைத் தருவிக்கும் பக்குவ காலம். கௌமாரத்திற்குப் பின் யுவதசையில் பிரவேசிக்கும் ஆண்பிள்ளை தன் பூர்ண திட்டத்திற்கு உயர்வதுடன் குரல் உடைந்து, உணர்ச்சி மிகுந்து ஒரு சங்கோசப் பிராணியாகிறான். மொட்டு மலராமல் காய் ஆவதுபோல் ஆடவர் வளர்ச்சி. இதே வயது பெண்களுக்கு மலர்ச்சியை வருவிக்கிறது. அந்த வயதில் அழகில்லாப் பெண்கள் இல்லை என்று சொல்லுவதுபோல், ஆண்பிள்ளைகள் விஷயத்தில் சொல்லுவதற்கில்லை. பெண்கள் தங்கள் வடிவழகை உணரும் பிராயத்தில் பிள்ளைகள் தங்கள் தோற்ற வேறுபாடுகளால் குழப்பமடைகின்றனர். ஸீதாராமன் தன் வயதிற்குரிய வளர்ச்சியைச் சற்றுப் பருமனிலும், உயரத்திலும் அறிவித்தான். ராமநாதன் நல்ல உயரம், நிதானமான பருமன். ஸீதாராமனின் முகக்களை பிரஸன்னமானது. சாந்தம் நிறைந்தது. கண்கள் தெளிந்து அகத்தை, ஆழ்ந்தும் புறத்தை உதாரித்தனமாயும் நோக்கும் இயல்புடையவை. எடுப்பான நாசி—உயர்ந்த லக்ஷ்யத்தையும் பெருந்தன்மையையும் எடுத்துக் காட்டக்கூடியது. உதடுகளின் வடிவழகுள்ள திட்டமான ரேகைகள் ரஸிகத் தன்மையையும் மன உறுதியையும் விளக்கின. தலைவட்டமாயும் காதுகள் முழு வீச்சுடன் குவிந்து தொங்குபவையாயும் அமைந்

திருந்தமையால் பாக்யமும் பூர்ணவயதும் அனுமானிக்கப்பட்டன. நிறம் நிலவு போன்ற ஒளி மலிந்தது. அவனைக் கண்டவர் அவனுக்கு அன்பையும், மதிப்பையும் காணிக்கையாகக் கொண்டவராவர், அப்படியிருந்தும் உணர்ச்சி தரும் வயதாலும் பிறரிடம் அண்டிக்காலம் கடத்தும் எளியதனத்தாலும், அவன் தன்னகமற்று ஒதுங்கித் தாழ்ந்து நிழல்போல் நடமாடி வந்தான். ராமநாதனோ தன் இனத்தவருடன் தன் வீட்டில் இருக்கும் சுவாதந்திரியத்தால் பெருமையுடன் வாழ்ந்து வந்தான் என்றாலும் வயதைப் பற்றிய உணர்ச்சிகளாலும், பெண்களின் ஆக்கிரமிப்பினாலும், பெற்றோர்களின் கண்டிப்புகளினாலும் அட்டகாசமடங்கித் தணிந்து ஸீதாராமனின் தோழமையில் அதிகம் ஆச்வாசத்தை அடைந்து வந்தான். ராமநாதன், வாளிப்பும் உயரமும் உடைய வெளிர் மாநிறத் தேகமுடையவன். கண்களின் பரபரப்பும், கூரிய வளைந்த நாசியும், தளர்ந்த உதடுகளும் ஒட்டிய கன்னங்களும் நீண்ட முகமும், முன்வந்த திடமான தாவாக்கட்டையும், அகண்ட நெற்றியும், சிறிய வளையமிட்ட காதுகளும் அவனைச் சீதா

ராமனுக்கு மாறான புருஷ லக்ஷணமுடையவனாய் எடுத்துக் காட்டின. ராமநாதன் நாளுக்குநாள் தன் மாமாவின் குணாதிசயங்களுக்கு வாரிசு பாத்தியம் கொண்டாடுவது தெளிவாயிற்று. சுருக்கமாய்ச் சொன்னால் மாமா சிவராமன் அழியாச் சொத்தை அழிப்பதிலும், ஊரைப் பிடுங்கி உலையில் போடுவதிலும், கறட்டு வாதங்களில் தலைமை வகிப்பதிலும், ஆடம்பரமான ஊதாரித்தனத்திலும், அத்துமீறின ஹடச் செயல்களிலும் பெயர்பெற்றவன். ராமநாதனின் புதிய அபிருசிகள் படிப்புக்கு எதிரிடையாயிருந்தன. ராமநாதனின் படிப்பு மங்குவதும், பெண்களின் படிப்பு சோபிப்பதும் வீட்டில் உள்ளவர்கள் கவனத்தைக் கவர்ந்தது பேச்சும், பரிகாசமும் மலிந்து கிடந்தன. அதனாலும் ராமநாதன் வீட்டில் அதிகம் தங்காமல் வெளி வியாபாரங்களை வைத்துக்கொண்டான்.

ஸீதாராமனோ மேலே மேலே போகப் போகப் படிப்பில் அபிவிருத்தியடைந்து வந்தான். ஓடத்தில் ஏறினவன் சமுத்திரத்தை எங்ஙனம் தாண்டுவது என்று எண்ணி அவன் படிப்பில் நம்பிக்கையிழந்து ஏக்கமுற்றிருந்தகாலம் போய்விட்டது. வெங்கிடசுப்பையரின் உள்ளன்பை அவன் கண்டறிந்தது முதல் புது உற்சாகம் பிறந்து ஊக்கத்துடன் படிப்பைக் கவனிக்கலானான் மேலும் ஸீதாராமன் இளம்பிராயம் முதலே நன்றாய் ஸம்ஸ்கிருதம் பயின்றவன் வால்மீகி, காளிதாஸர், பாணர், பவபூதி முதலிய மஹா கவிகளின் காவ்ய நாடகங்களின் சுவையை ஏகாந்தமாய் ரஸித்தவன். கானப்ரியன். மெல்லிய இனிய குரலில் உள்ளப் பூரிப்புடன் ஆத்மார்த்தமாய் ஆலாபனை செய்து இன்புறும் இயல்புடையவன் அவன் ஸுஸ்வரத்துடன் படிக்கும் கவிதைகளுக்கு தனிமாதுர்யம்பெருகு பண்டித வம்சத்திலுதித்த அவனுக்கு முயற்சியில்லாமலே விற்பத்தியும் ரஸிகத் தன்மையும் ஏற்பட்டுவிட்டன. அவனுடைய மாதுல குலமும் விற்பத்திக்கும் ஸங்கீதப் பயிற்சிக்கும் உறைவிடமானது. அவன் மாமாவான மணி ஸகல கலா வல்லவர். ஸீதாராமனுக்கு மணி மாமாவிடம் அதிகப்பழக்கம். சிஷ்யத் தன்மையும் உண்டு. நைடதம் அவன் கொஞ்சம் மாமாவிடத்தில் படித்தான். அப்போதே ஸரஸுவும் காவ்யபாடம் கேட்டு வந்தாள். ஸீதாராமன் ஆங்கிலப் படிப்பைச் சிறிது பிற்காலத்தில்தான் ஆரம்பித்தான். ராமநாதன் நட்புமூலம் வெங்கிடசுப்பையரின் ஆதரவு அவனுக்குக் கிடைத்திராவிடில அவன் ஆங்கிலப்பள்ளியில் மேல் படிப்புப் படிக்க நினைத்தேயிருக்கமாட்டான். ஆனால், தெய்வ சங்கற்பம் அவனைப் பெரிய ஆதரவில் பட்டணம் காலேஜில் மேல் படிப்புப் படிக்க வசதி செய்து கொடுத்தது. நிலைமை இவ்விதம் மேன்மையடைந்தபோதும் ஸீதாராமன் தன் தாழ்மையை மறக்கவில்லை. தன் அருகதைக்கு அதிகமாக அவனுக்குக் கிட்டிய சௌக்கியங்களை எல்லாம் அவன் பற்றில்லாமல் அனுபவித்தான். எந்த நிமிஷத்திலும் தனக்கு உரியதான பூர்வ ஸ்திதியை அந்தரங்க திருப்தியுடன் ஏற்க அவன் தயாராகவிருந்தான். ஸீதாராமனின் மமதையற்ற மனோபாவமும், சேவைபுரியும் தணிவும், ரஸிகத்தன்மையுமே ராமநாதனை அவனிடம் நட்பு கொள்ளும்படி செய்தது. நாளுக்குநாள் ராமநாதனுக்குச் சீதாராமனிடம் நன்மதிப்பு வளர்ந்து வந்தது. வெங்கிட சுப்பையர் பல புத்தி



மான்களான ஏழைப் பையன்களுக்கு காலேஜ், ஹைஸ்கூல் சம்பளங்களைக் கட்டி உதவி வந்தார். ஆனால் ஸீதாராமனுக்கு அவ்விதம் உபகரிப்பதோடு நிற்காமல் அவனை வீட்டிலேயே இருக்கச் செய்து போஷித்துவந்தது ராமநாதனின் இஷ்டத்திற்காகத்தான் என்றாலும் நாளடைவில் அவருக்கே அவனிடம் பூர்ணமான அபிமானம் ஏற்பட்டுவிட்டது. சில வருஷங்கள் குடும்பத்தில் உதித்த குழந்தைபோல் பழகிவிட்டதால் மானியும், ஸங்கோசியுமான ஸீதாராமனுக்கே அந்த வீட்டில் எல்லாம் ஸ்வாதீனமாகி விட்டது.

ஆனாலும், காலம் சுழல்கிறதல்லவா? வாழ்க்கையை ஒரு சக்கிரத்திற்கு ஒப்பிடுகிறார்கள். பாலகாளிதாஸாதி கவிகள். குழந்தைப் பருவம் கடந்த அறிவு வளர்ச்சி அடைந்து வரும் தன் குலத்தவர்களல்லாத இரு பெண்களுடன் வாழ்க்கையில் கலந்து ஒரே ஆதரவின் கீழ் வசிக்கும் நிலைமை அவனை மிக்கச் சங்கோசியாக்கியது. அந்நிலைமையின் நீடிப்பில் அவன் அதைரியமுற்றவனானான். அன்றியும் ராமநாதன் இளம் வயது மாறியவுடன் சுதந்திரமான சுகவாழ்க்கைக்கு வார்சாகப் பிறந்தவர்களின் சில தன்னடக்கமற்ற போக்குகளை அனுசரிக்கலானான். படிப்பில் அவனுக்கு அலக்ஷியம் தோன்ற வாரம்பித்தது. பள்ளியில் உபாத்தியாயர்களை எதிர்க்கவும் கக்ஷிகள் சேர்க்கவும் முற்பட்டான். அவன் செலவுகள் அடிக்கடி அவனுக்குப் பணத்தட்டு ஏற்படச் செய்தது. ஸீதாராமன் அவனைச் சீர்திருத்தம் செய்யும் பொறுப்பை ஏற்பது அசம்பாவிதம் என்று எண்ணினான். ஆனால் எப்போதும்போல் அவனுக்கு உடந்தையாயிருந்து உதவும் கைக்கருவியாகவும், ஆமோதிக்கும் ஆச்ரிதனாயும் ஆவது எப்படி என்பது அவனுக்குக் குழப்பத்தைக் கொடுக்கலாயிற்று. ராமநாதனைத் தன்னுடன் பிணைத்து நேர்வழியில் நடக்கச் செய்யும் நம்பிக்கை கொண்டிருந்த வெங்கிட சுப்பையரிடம்தான் இந்தச் சூதையை மறவாதிருக்க என்ன செய்வது என்ற ஐயமும், அச்சமும் அவன் மனதைப் பற்றிக் கொண்டன.

(தொடரும்)



எம். எஸ். எம். ரயில்வேயில் சிற்றுண்டிசாலை இன்ஸ்பெக்டராயிருந்து ரிடையரான பள்ளிவாரமங்கலம் ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாஸ ரங்கய்யங்கார் பெண் சௌ. கல்யாணிக்கும், "மித்திரன்" மானேஜராயிருந்த ஸ்ரீ வீரராகவ ஐயங்கார் குமாரன் சி. சுந்தரராஜனுக்கும் சமீபத்தில் விவாஹம் நடந்தது.

எழுத்தாளர் பூவை-ஸ்ரீ எஸ். ஆறுமுகத்திற்கும், சௌ. அமிர்தத்திற்கும் சமீபத்தில் திருமணம் நடந்தேறியது.

அட்டைப்படம்

எல்லா ஜீவராசிகளிடமும் அன்புடன் இருக்கவேண்டுமென்ற தத்துவத்தைக் குழந்தை உள்ளத்தில் பதியும்படி பாரதியார் 'பாப்பா' பாட்டைப் பாடினார்.

"......வாலைக்குழைத்துவரும்
நாய்தான்—அது
மனிதற்குத் தோழனடி
பாப்பா!......"

என்ற பாட்டின் பொருளை உணர்ந்த பாப்பா, நாயும் சிறிதுமின்றி நாயைப் பிடித்துக் கட்டிக்கொண்டு ஆனந்தப்படுகிறது.

தேவை

கீழ்க்குறிப்பிட்ட இடங்களுக்கும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களுக்கும் எமது தினசரி. வாரப்பதிப்புகளை பட்டுவாடா செய்யவும் விற்பனை செய்யவும் ஊக்கமுள்ள ஏஜண்டுகள் தேவை. விண்ணப்பதார் உள்ளூர் வாசியாக இருக்கவேண்டும். விவரங்களுக்கு எழுதவும்:

1. கள்ளிக்கோட்டை:-
2. பொன்னேரி:-

சர்க்குலேஷன் மானேஜர்,
சுதேசமித்திரன் 'விக்டரி ஹவுஸ்,'
மவுண்ட்ரோட், சென்னை.

கேச விருத்திக்கு சிக்கன சுலப சாதனம்

காஷ்மீர்-குஸும்

வேண்டிய எண்ணெயில் கலந்து கொள்க

குடும்ப சரும-சஞ்சீவி
ஸான்டலக்ஸ்
நறுமண சந்தனக்கழிம்பு

மைசூர் M.R. ஜெட்டப்பாவின்
பிரேமலீலா
உயர்தர ஊதுவத்திகள்

ஸோல் ஏஜண்ட்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.1

டிப்போக்கள்:—மதுரை, கோயம்புத்தூர், கும்பகோணம், பம்பாய்.

விடிவு

ரகுபதிராவ்

அன்று தபாலில் வந்த கடிதத்தை சந்தோஷத்தோடு பிரித்தான், சந்துரு. கவரின் மேல் விலாசம் எழுதிய கை எழுத்து கடிதம் எங்கிருந்து வந்திருக்கிறது என்பதை அறிவித்தது. பல மைல்களுக்கு அப்பால் வசிக்கும் அவனுக்கு தன் அன்புக்குப் பாத்திரமான தங்கை பாமா கடிதம் எழுதி இருந்தாள்.

வீட்டில், பாமா சந்துருவின் வாயைக் கிளறி ஏதாவது வம்பு செய்துகொண்டிருப்பாள். அவள் கேலிப் பேச்சும், கலாட்டாவும், வரம்பு மீறிச் சென்று வீடு அமர்க்களப்படும். அந்தப் பழைய தோரணை வீட்டில் நடக்கும் நையாண்டிப்பேச்சுகள், அந்தக் கடிதத்தில் பாமா எழுதியிருந்தாள். "குறும்புக்காரி அவள், சுபாவம் அவளை விடவில்லை" என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டான். அத்துடன் அம்மா எழுதிய கடிதம் இருந்தது. ஒரு பெரிய டாக்டர் நோயாளிக்குக் கொடுக்கும் உத்தரவுபோல "இத்தனை மணிக்கு எழுந்திரு, வெந்நீரில் குளி, குளிர்ந்த ஜலத்தை சாப்பிடாதே, கண்டபடி அலையாதே" இது போன்ற உத்தரவுகள் காணப்பட்டன. பெற்ற மனம் பித்து–தன்னைப் பச்சைக் குழந்தையாய் பாவித்து எழுதியதைக் கண்டும், அதில் பரிமளித்த தாயின் ஆழ்ந்த அன்பையும் வாஞ்சையையும் எண்ணி சந்தோஷப்பட்டான். கடிதத்தின் கடைசியில் அவள் எழுதிய விஷயம் அவனுக்கு வேதனையை அளித்தன. அவனுக்குக் கல்யாணம் ஆகாமல் இருந்தது அவன் தாய்க்கு வேதனை அளித்தது. அதைப்பற்றி கடிதத்தில் பிரஸ்தாபித்திருந்தாள். அன்று சந்துரு ஊரை விட்டுக் கிளம்பும் போதும் அதையே எவ்வளவு வேதனையுடன் அம்மா சொன்னது அவனுக்கு நினைவிற்கு வந்தது.

'கில்டன்' கம்பெனியில், சந்துரு ஒரு குமாஸ்தாவாக வேலை செய்துகொண்டிருந்தான். ஒரு நாள் துரை கம்பெனி அலுவலுக்காக யாராவது பம்பாய் ஆபீஸில் ஒரு உதவி மானேஜர் பதவியில் செல்ல விருப்பம் இருக்கிறதா" என்று கேட்டபோது, சந்துரு முன் வந்தான். கம்பெனியில் சந்துரு கெட்டிக்காரன், யோக்கியமானவன், என்று பெயர் எடுத்திருந்தான். துரை மறுவார்த்தை இன்றி, பம்பாய் காரியாலயத்திற்கு அனுப்பினார்.

சந்துரு பம்பாய்க்குச் செல்வது முதலில் அவன் அம்மாவுக்கும் பாமாவுக்கும் பிடிக்கவில்லை. தன் எதிர்காலத்தை உத்தேசித்து வெகுதூரம் அண்ணா பணம் சம்பாதிக்க செல்வது பாமாவுக்கு வருத்தத்தை அளித்தது. பிள்ளையைப் பிரிந்து இருக்க தாய் உள்ளம் இடம்தரவில்லை. பல சமாதானம் சொல்லியபிறகே அவன் கிளம்ப முடிந்தது. பம்பாயில் வீடு கிடைத்தவுடன் அவர்களை அழைத்துச் செல்வதாகவும் கூறி தேற்றுவித்தான்.

எடுத்துச்செல்லவேண்டியவற்றை பெட்டியில் பாக் செய்து கொண்டிருந்தான் சந்துரு. அப்போது அங்குவந்த பாமா அண்ணா வெகு சிரமத்துடன் மூட்டைகளை கட்டுவதைப்பார்த்து, "அண்ணாவுக்கு ரொம்ப சிரமம் இந்த மூட்டையைக் கட்டுவதற்கு" என்றாள். கூடத்தில் படுத்திருந்த அவன் அம்மா காதில் விழவே "ஏண்டி பாமா, நீதான் கொஞ்சம் உதவி செய்யக்கூடாதோ" என்றாள். "நான் எத்தனை நாளைக்கு உதவி செய்ய முடியும் அம்மா, நாளைக்கு வீட்டைவிட்டுப் போகிறவள்தானே" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே அம்மா இடைமறித்து "நான் இருக்கவே இருக்கிறேன் சாகும் வரை அவனுக்கு உழைத்துக்கொட்ட, அவனுக்கென்ன கவலை என்று வேதனையுடன் கூறிய சொற்கள் அவன் உள்ளத்தைக் கலக்கின.

சந்துருவுக்கு இன்னும் விவாகம் ஆகவில்லை. இது அவன் தாயாருக்கு மிக்க கவலையை அளித்தது. நிச்சயம் செய்த கல்யாணம் நின்ற பிறகு அவன் வந்த வரன்களை தட்டிக்கழித்து வந்தான். தாயின் உள்ளம் அவன் காலில் ஒரு கட்டை கட்டிவிட்டு, குடும்பப் பொறுப்பிலிருந்து விலக தவித்தது. ஆனால் சந்துரு உள்ளம் இழந்த இன்பத்திற்கு ஓலமிட்டது. தாய் படும் துன்பம், தன் அபிலாஷை இரண்டிற்கும் அவன் உள்ளத்தில் போராட்டம் புயல் தணியவில்லை: அமைதி கிட்டவில்லை. ஒரு முடிவான தீர்மானத்திற்கு வராமல் காலத்தைக் கழித்து வந்தான்.

பம்பாயில் ஓட்டலில் வசித்த சந்துரு பொழுது போக்க ஒரு கிளப்பில் சேர்ந்தான். அங்கு, அவனுக்கு சேகர் என்பவர் பழக்கமானவர். அவர் தென் தேசத்தைச் சேர்ந்தவர். சொந்த ஊரை விட்டு வெகு தொலைவில் இருப்பவர்கள் தங்கள் ஊர்க்காரர்களை கண்டால் ஒரு தனியான வாஞ்சையும், அன்பும் கொள்வது

இயற்கைதானே. இதற்கு விலக்காகாமல் சந்துரு சேகர் நண்பர்கள் ஆனார்கள்.

ஒருநாள் கிளப்பில் ஒரு விசேஷக்கூட்டம் நடைபெற்றது கூட்டம் ஆரம்பிக்குமுன் வெளியில் நின்று தனக்குப் பழக்கமான நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்த சந்துருவை ஒரு காட்சி திடுக்கிடச் செய்தது. சேகரின் கார் வந்து நின்றது. முதலில் இறங்கிய சேகரை பின் தொடர்ந்து ஒரு பெண் இறங்கினாள். அவளைக் கண்டதும் அவன் திடுக்கிட்டு பிரமிக்க வேண்டியதாயிற்று. காரிலிருந்து இறங்கிய சேகரை நண்பர்கள் சூழ்ந்துகொண்டு பேச ஆரம்பித்தனர். அவர் கண்ணில் படாமல் அங்கிருந்து அகன்றான். சஞ்சலம் அடைந்த சந்துரு. அவன் உள்ளத்தை கசக்கி பிழிவதுபோலிருந்தது நிலைமை.

கூட்டம் ஆரம்பிக்கவே, வேண்டா வெறுப்பாக ஒரு இடத்தில் உட்கார்ந்தான். அவன் கண்கள் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தவர்களை சுழன்று நோக்கின. சேகரும் பக்கத்தில் அமர்ந்திருந்த மங்கையையும் உற்று நோக்கின அவன் கண்கள். அவன் உள்ளத்தில் பெருக்கெடுத்த சஞ்சலம், பெருமூச்சாக வெளிவந்தது. அங்கு உட்கார்ந்திருப்பது கோடையின் கனல் வீசும் பாதையில் செல்வதுபோலிருந்தது. கூட்டத்தைவிட்டு வெளியே நடந்தான். அவன் சிந்தனை கடந்து சென்ற சமபவங்களில் ஓடியது.

அன்று, கடைக்குச் சென்றுகொண்டிருந்த சந்துருவை 'சார்' என்று யாரோ அழைக்கவே திரும்பி பார்த்தான். ஒரு சிறுமி தன்னை கூப்பிடுவதைக்கண்டு ஆச்சர்யப்பட்டான்.

“சார் இந்தக் கணக்கை கொஞ்சம் போட்டுக்கொடுங்களேன், போடத்தெரியவில்லை” என்று அழாதகுறையாய் முன்பின் தெரியாத அவள் கூறினாள். அவள் நிலைமையை உணர்ந்த சந்துரு வீட்டு வாசல் திண்ணையில் உட்கார்ந்து கணக்கைப் போடும் வழியை அவளுக்கு சொல்லிக்கொடுத்தான். இன்னும் அவளுக்குப் பாடத்தில் ஏற்பட்ட சந்தேகங்களைக் கேட்டு நிவர்த்தி செய்துகொண்டாள். தினம் தனக்குப் பாடம் சொல்லித்தரும்படி கெஞ்சினாள். அவள் பேச்சும் அவள்குணமும் கவர்ந்தன அவனை. அவள் விருப்பப்படியே இந்தக் கௌரவ வாத்தியார் உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டான். தெருத்திண்ணையில் இந்தப பள்ளிக்கூடம் நடப்பதை அவள் தந்தை தடுக்கவில்லை.

மாலை நேரம். சுமதிக்கு (அச்சிறுமியின் பெயர்) பாடம் சொல்லித்தரச் சென்றான். ஆவலுடன் அவனை வரவேற்கும் அவள் தோழியை அன்று காணவில்லை. கதவைத் தட்டினான். 'யாரது' என்று ஒரு குரல் கேட்டது. மறுநிமிடம் வாசற்பக்கம் காலடிச் சப்தம் கேட்டது. ஒரு ஆடவன் வாசற்படியில் நிற்பதைக் கண்டவுடன் கதவுப்புறமாக ஒதுங்கி நின்று, சற்று தலையை நீட்டி “யார் வேண்டும்' என்று தேன் சொற்களில் கேட்டது அந்த மதுர குரல். வஸந்த காலத்தில், இலைகளிடையே மனமறந்தும் மறையாமலும் இருக்கும் மலர்ந்த மலரின் மோகனப்புன்னகைபோலிருந்தது அவள் தோற்றம். அந்த சௌந்தரியத்தில் லயித்த சந்துரு சற்று நேரம் தன்னை மறந்தான். பிறகு நிலைமையைச் சமாளித்துக்கொண்டு “சுமதி இல்லையா” என்றான், மென்று விழுங்கிக்கொண்டே. பள்ளிக்கூடத்திலிருந்து வரவில்லை, சற்று உட்காருங்கள் என்றாள் அந்த கனிமொழியாள். திண்ணையில் உட்காரப்போன சந்துருவை உள்ளே வந்து உட்காரும்படி அவள் உபசரிக்கவே, உள்ளே ஹாலில்போய் உட்கார்ந்தான்.

அவள் முகஜாடையிலிருந்து அவள் சுமதியின் சகோதரி என்று தீர்மானித்தான். மேஜையின் மேலிருந்த பத்திரிகையைப புரட்டிக்கொண்டிருந்தான். அவன் கண்கள் எங்கேயோ வட்டமிட்டன.

சற்றுநேரங்கழித்து ஆவிபரக்கும் காப்பியை மேஜையின்மீது கொண்டுவந்து வைத்தாள். உள்ளத்திற்கு விருந்தளிக்கும்போது, வயிற்றுக்கு ஏதற்கு விருந்து என்று அவள் உள்ளம் முணுமுணுத்தது. அவள் அங்கிருந்து செல்லும்போது, அவள் விழிக்கோணங்களிலிருந்து எழுந்த மின்னல் வீச்சு—அவள் அதரங்களில் மிளிர்ந்த அந்த மோகனப் புன்னகை—அவன் உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. அவன் இருதயம் அந்தசௌந்தர்யத்தால் கட்டுண்டு போயிற்று.

சுமதிக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க சென்ற இடத்தில் சந்துரு உள்ளத்தைகொள்ளை அடிக்க சுந்தரி ஒருவள் தோன்றினாள். சுமதியின் சகோதரி கோமதி. பேசிய அவர்கள் கண்கள், நாளடைவில் கூடிப்பழகின. இதயங்கள் இன்ப வீணையை மீட்டின.

இணைந்த இதயங்கள் எதிர்காலத்தை திட்டமிட்டன. அள்ளிப்பருகிய இன்பத்தை வாழ்நாளெல்லாம் பருக இசைந்தன களித்த உள்ளங்கள். விஷயமறிந்த கோமதியின் தந்தை ஜாதகம் பொருந்தி கல்யாணம் நிச்சயமாகிவிட்டால் வரன் தேடும் தொல்லை விட்டது என்று சந்தோஷப்பட்டார். ஜாதகங்கள் பொருந்தியிருக்கவே, கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்தன. மணநாளும் குறிக்கப்பட்டது.

சந்துருவின் தந்தை கோமதியை நாட்டுப்பெண்ணாக அடைவதில் சந்தோஷம் கொண்டார். பாடம் சொல்லிக்கொடுக்க சென்ற இடத்தில் ஒரு அழகான மன்னியை தேடிப்பிடித்ததைப் பற்றி பாமா, சந்துருவை கலாட்டா பண்ணிக்கொண்டிருந்தாள். ஆனால் அவன் தாய்க்கு இந்த வரன் விஷயம் பிடிக்கவில்லை. அப்பாவும், மகனுமாக கூத்தடிக்கும்போது அவளால் ஒன்றும் பேச முடியவில்லை.

மணநாள் நெருங்கிற்று. குதூகலித்த சந்துருவின் தலையில் பேரிடி ஒன்று விழுந்தது. அவன் தந்தை மாரடைப்பால் இறந்துபோனார். சாதாரண நிலைமையில் வாழ்ந்த சந்துருவின் குடும்ப பொறுப்பு அவன் தலையில் வீழ்ந்தது. தன் தாய், தங்கையைக் காப்பாற்றும் பொறுப்பு, தந்தை இழந்த சோகம் அவன் உள்ளத்தை வாட்டிற்று. தன் காதலியையும் மறந்தான். தன் படிப்பை பாதியிலே நிறுத்திவிட்டு யாரிடமும் சொல்லிக்கொள்ளாமலே ஊரை விட்டு, தாய், தங்கையுடன் சென்றான்.

சென்னையில் கில்டன் கம்பெனியில் குமாஸ்தா வேலை கிடைக்கவே, சந்துரு ஆறுதலுடன் வாழ்க்கையை நடத்தினான். நாட்கள் செல்லச் செல்ல அவன் உள்ளத்தில் ஓலமிட்ட சோகம் மறையத் தொடங்கிற்று. மீண்டும் பழய சிந்தனை. கோமதியின் சௌந்தரியம் அவன் உள்ளத்தில் ஊசலாடியது. அவளுடன் மகிழ்ந்திருந்த நாட்கள், அந்த இன்ப நாட்கள் அவன் இதயத்தில் உணர்ச்சிகளைக் கிளறின. அவளைப் பார்க்க ஆவலுடன் ஊருக்குச் சென்றான்.

களித்த அவன் உள்ளத்திற்கு மீண்டும் கவலை காத்திருந்தது. தேடிச்சென்ற வசந்த மாளிகை இடிந்து சிதைந்தது. அழிந்துவிட்டதைக்கண்டான், அவன் உள்ளம் நொறுங்கி பொடியாக்க அச்செய்தி காத்திருந்தது. சந்துருவின் தந்தை இறந்தது கோமதி வீட்டிற்கு ஏற்பட்டிருக்கும் தெய்வ சாபத்தால் என்று கதை கட்டிய விஷமிகள், அவளுக்கு நிச்சயமான வரன்களை கலைத்தனர். இந்தப் பழியால் மனமுடைந்த அவள் தந்தை இறக்கவே, அவர்கள் குடும்பம் நிர்கதியான நிலையை அடைந்தது. அப்போது யாரோ, வடக்கே இருந்துவந்த ஆசாமி அவளை மணந்து சென்று விட்டதாகச் செய்தி கிடைத்தது. இதைக் கேட்டு மனமுடைந்து சந்துரு ஊர் திரும்பினான்.

இழந்த இன்பத்திற்கு அவன் உள்ளம் ஏங்கிறது. தன் வாழ்க்கை தன் தாய்க்காகவும், தங்கைக்காகவும் கடத்தினான். மணம் புரிந்துகொள்ள வற்புறுத்தும் தாயின் அலறலுக்கு அவன் செவி சாய்க்கவில்லை.

கடந்து சென்றவை சந்துருவின் நினைவுத்திரையில் காட்சி அளித்தன. அவன் உள்ளம் யாருக்காக அல்லும் பகலும் நினைந்து ஏங்கிறதோ அவள் இன்று, அவன் முன் காட்சி அளித்தாள். சென்ற இன்ப நாட்களை நினைவுபடுத்தி மகிழ்ந்து கொஞ்சத் தாவிய அவன் உள்ளம் தணலை மிதித்து தவிக்கும் நிலைமையை அடைந்தது. இன்று அவள்—சமூக பாதையில் அயலான் மனைவி. இதை எண்ணும்போது அவன் உள்ளம் கொந்தளித்தது. புயலின் ஓலம் கிளம்பியது. அவன் சிந்தனையில் ஒரு போர்.

அன்று தன்னுடன் குலாவிய நாட்களில் "உங்களைத் தவிர யாரையும் மணக்கமாட்டேன்" என்று அவள் கூறியவை? அவள் புரிந்த நாடகங்கள்: கொஞ்சிய கொஞ்சல்—குழைந்த குழைவு—நடித்தவை வெறும் பாசாங்கா? அவள் கூறியவை வெறும் சொற்களா—கவிதை பேசிய அவள் உள்ளத்தில் நஞ்சா. பெண் உள்ளம் சபலம் உடையதா—இழிந்த தன்மைஉடையவளா—சீச்சீ! பெண்கள் உள்ளத்தை அளவிட முடியாது என்பது உண்மையா? அப்படியானால் அவன் உள்ளத்தை அறிய முடியாத ஒருவனுடன் கூடி மகிழ்ந்து வேறு ஒருவனுடன் கூடி வாழ்வதைக் கண்ணால் கண்ட பின் அறிவது என்ன இருக்கிறது-ஒரு வேளை......

தந்தையை இழந்த அவள் நிலைமை-காப்பாற்ற யாருமில்லாத நிலைமையில்—அவள் சமூகத்தின் முன் எவ்வாறு இருந்திருப்பாள்? உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூடமுடியாதே. அந்த சமூக பேய்களின் தாண்டவத்தின் இடையில் சமூக சூறாவளியில் அவள் கதி கனலின் ஜ்வாலையுடன் எத்தனை நாளைக்கு உறவாடமுடியும்? ஒரு ஏழைப் பெண்ணின் கதி—கடைசியில் மணம். தன் சுகங்களை இன்பங்களை அர்ப்பணித்து வாழ வேண்டியதுதான். அவன் இந்தப் போராட்டத்தில் இரவெல்லாம் கழித்தான்.

மறுநாள் காலை யாரோ கதவை தட்டும் சப்தம் கேட்கவே, கதவை திறந்த சந்துரு அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டான். அவன் முன் சேகர் காட்சி அளித்தார். திடுக்கிட்டு நின்ற சந்துருவின் தோளட்டையை அமுக்கியவாறே சேகர் "கோமதி விஷயத்தைச் சொன்னாள்" என்று சேகர் கூற ஆரம்பித்த சொற்களால் அவன் மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. கலவரமடைந்தான். அவன் நிலைமையைக் கவனித்த சேகர் சிரித்துக்கொண்டே "மாப்பிள்ளைவாள்! கல்லசமாச்சாரத்தைக்கொண்டு வந்திருக்கிறேன். ஏன் இப்படிக் கலவரப்படவேண்டும்?" என்று சேகர் கூறியது அவனுக்கு விளங்கவில்லை. சேகரின் சொற்களும், சிரிப்பும் அவன் கோபத்தைக் கிளறின. சுற்றிவளைக்காமல் விஷயத்தைச் சொல்லுங்கள்" என்று அதட்டினான்.

"மாப்பிள்ளைவாள் மன்னியுங்கள். இதோ விஷயத்தை சொல்லிவிடுகிறேன். உங்களுக்கும் கோமதிக்கு நிச்சயமான கல்யாணம் உங்கள் தகப்பனார் இறந்ததால் நின்று விட்டதாம். அந்தக்கவலையால் ஊரை விட்டுச்சென்ற உங்களை பிறகு சந்திக்க முடியவில்லையாம். அவள் தந்தை ஊரார் சுமத்திய பழியால் இறக்கவே குடும்பத்தின் நிலைமை தவிக்கும்படி ஆயிற்று. சிறு வயதிலேயே, வீட்டை விட்டு ஓடிப்போன அவள் சகோதரன் நான். தெய்வசங்கல்பத்தால் அங்கு செல்லவே, நிலைமையை உணர்ந்து இங்கு அழைத்து வந்துவிட்டேன். நின்று போன அவள் கல்யாணம் நின்றே விட்டது. உங்களைத் தவிர யாரையும் மணக்க விரும்பவில்லை. அவள் இஷ்டப்படியே விட்டுவிட்டேன். உங்களைத் தேடி அலைந்தது வீணாயிற்று. நேற்றுதான் அதற்கு விடிவு ஏற்பட்டது. கூட்டத்தில் உட்கார்ந்திருந்த உங்களை பார்த்த அவள் விசாரித்தாள். விஷயங்கள் வெளியாயின" என்று ஒரே மூச்சில் கூறி முடித்தார் சேகர். சந்துருவுக்கு ஏற்பட்ட சந்தோஷத்திற்கு அளவில்லை.

"அண்ணா. இன்னும் ஏன் அவருடன் பேசவில்லை' என்று எண்ணமிட்டுக்கொண்டே வாசலுக்கும், உள்ளுக்கும் நடை போட்டுக் கொண்டிருந்த கோமதி, சந்துரு சேகர் வருவதைப் பார்த்ததும் வெட்கம் அவளைப் பிடுங்கவே விழுந்தடித்துக்கொண்டு உள்ளே ஓடினாள். இதைப்பார்த்த இருவரும் நகைத்தனர். 'குட்மார்னிங் ஸார்!" என்று கூறிக்கொண்டே சுமதி தோன்றினாள்.

★

சக்தி ஆரூடம்!

ரேடியோ புகழ் ஸ்ரீமதி திருக்கோவிலூர் S. அலமேலு எழுதுகிறார்:—

"தாங்கள் எனக்கு மேமீ 27-ந் தேதியிலிருந்து ஜூன்மீ 3-க் தேதிக்குள் ரூ. 1000 கிடைக்குமென்று கூறியபடியே ரூ. 1000 கிடைத்தது."

1 முதல் 3 கேள்விகள் ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசர் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம். விருத்தாசலம், P. O. (S. I)

இனும் ரூ. 100

அற்புத சக்திபெற்ற சித்த கவசம்

இந்த "குப்த பஷிகரன் யந்திரம்" வைத்திருந்தால் ஆண், பெண் யாராயினும் வசீகரிக்கப்படுவர். நக்ஷத்திர கெட்ட பலன்களை நீக்கிவிடும் பகைவர்கள் அடங்குவர். பரீட்சையில் தேர்ச்சிபெறலாம். வியாபாரம், வழக்கு, லாட்டரி, பந்தயம், வேலை, புத்திரபாக்கியம், தனலாபம் பெறலாம். கடன், வியாதியிராது. பொய்என்று நிரூபித்தால் ரூ.100 இனும். செப்பு ரூ.2-8 வெள்ளி ரூ. 3. சுத்த தங்கம் ரூ. 10.

பொய் என்று நிரூபித்தால் ரூ. 100 அபராதம்.

நரை மயிர்:-சாயத்தை உபயோகிக்காதீர்கள். 60-வருஷங்களுக்கு நிலைத்திருக்கும் எங்கள் அபூர்வ தைலத்தை உபயோகித்து உங்கள் கேசத்தை கறுப்பாக மாற்றுங்கள். தலைவலி குணமாகும். நேத்திரப் பார்வை சமனாகும். சிறு நரை இருந்தால் 2-8-க்கு ஒரு புட்டி வாங்குங்கள், அதிகமானால் ரூ. 3-8.; ரூ. 5. புட்டிகளை வாங்குங்கள் பயனில்லையெனில், இரட்டிப்பு கிரயத்தை வாபஸ் செய்கிறோம்.

AZAD PHARMACY, No. 225,
P. O. Katrisarai (Gaya.)

S.A.H.
TRADE MARK

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*

சங்கீத வித்வான்

மணக்கால் ஸ்ரீ வரதராஜன்

19-6-48 SATURDAY 5 p. m.

பெரம்பூர் சங்கீத சபாவின் **ஆதரவில்**

R. B. C. C. C's ஹைஸ்கூல் **ஹாலில்**

சங்கீத வித்வான்

மணக்கால வரதராஜன் பாட்டு

வராகூர் முத்துஸ்வாமி ஐயர் பிடில்

ராமனுதபுரம் ராகவன் மிருதங்கம்

அடங்கிய இன்னிசைக் கச்சேரி நடைபெறும்.



ஜாதகம் ! **ஆரூடம் !!**

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு:—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

'மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

A. B. C. Talks	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.

'' சுதேசமித்திரன் '' புத்தகசாலை
மவுண்ட்ரோட், மதராஸ்.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்
(தங்கம் சேர்ந்தது.)

அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30 மாத்திரை சீசா 1-க்கு ரூ. 7.

மஹாபில்வாதி லேகியம்

பித்தம் அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4

ஸ்ரீ தன்வந்திரி கவசம்

வியாதி, மனோவிசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது இதில வசீகரண மூலிகை பிரதி ஸரஸூத்ரம் ஸ்ரீ தன்வந்தரீ யந்திரம், இவைகளை மந்திர பூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி

எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி

(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)

சென்னை ஹைகோர்ட்டில் உரிமை பெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இலவசம்.

ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்

தேவி பிரஸன்ன

ஆருடம்

தாங்கள் சீல் செய்த கவரில் அனுப்பிய ஐந்து கேள்விகளுக்குச் சரியான விடைகளை உபாசனு தேவியின் மகிமையால் தங்கள் கவரைத் திறக்காமலே கண்டு பிடித்து ரூபா 2 க்கு வி. பி. யில் அனுப்பப் படும்.

காயத்ரீ மந்திராலயம்,
13, கொல்லர்பேட்,
பெங்களூர் ஸிடி.

இந்தியாவின் புகழ்

லோத்ரா

காபாசய ரோக நிவாரணி

கேஸரி குடீரம் லிட்., மதராஸ்

EASTERNS 394

ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் ஏஜண்டுகள் :—

ஸீதாராமா
ஜெனரல் ஸ்டோர்ஸ்,
பர்ஹாம்பூர்--செகந்திராபாத்
பெஜவாடா — மதுரை.

மறக்க முடியாத உண்மை!
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.
போன் நெ. 3432.

9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

ஸ்ரீமத் பகவத் கீதை

விலை ரூ. 3—8—0
(தபால் செலவு பிரத்யேகம்)

மானேஜர்: "சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House. Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

ரீடா

அழகிய கேசத்தை வளர்க்கிறது

ரீடா, கூந்தல் ஆரோக்கியத்தில் ஒரு புது முறை. அது கூந்தல் வேர்களுக்குத்தேவையானஇயற்கை போஷாக்குகளை யூட்டி, பொடுகு வழுக்கையைத் தடுத்து அபார வசீகரத் தோற்றமுள்ள பட்டுப்போன்ற மிருதுவான கூந்தலை அடர்த்தியாக வளரச்செய்கிறது. அது பறட்டையான கூந்தலுக்கு பள பளப்பு அளிப்பதுடன் இஷ்டத்திற்குகந்தவாறு கூந்தலை படியவைப்பதற்கும் சிறந்தது. ஒரு புட்டி ரீடா வாங்கி உங்கள் கூந்தலுக்கு புத்துயிரளித்து புது அழகு பெறச் செய்யுங்கள்.

எங்கும் கிடைக்கும், ஒரு புட்டி விலை அணு 15.

ஹிந்தி, ஆந்திரா, தமிழ், கன்னட சினிமா நக்ஷத்திரங்களெல்லோரும் போற்றுகின்றனர்.

லலிதா பவர்:—மிகச்சிறந்த கூந்தல் டானிக், தேவையுள்ளோர் அனைவருக்கும் ரீடாவையே சிபார்சு செய்வேன். நம்தாய் நாட்டில் இவ்வளவு அருமையான சரக்கை தயாரிப்பதுபற்றி பெருமையடைகிறேன்.

சாரதா ஜுனர்கார்:—எனது சமீபத்திய அனுபவம் இது. கூந்தல் உதிர்வதை நிறுத்துவதற்கு ரீடாவைப்போன்ற அற்புத டானிக் வேறு கிடையாது. கேசத்தைப் பட்டுப்போல் மிருதுவாக்கி பளபளப்பூட்டும் அற்புத மூலிகைகள் இந்த தைலத்தில் இருக்கின்றன. கேச டானிக்குகளில் ரீடா மிகச்சிறந்தது என்பது உறுதி.

கே. ஈச்வர்லால்:—நான் ஒருமுறை ரீடா உபயோகித்தேன். அது முதல் என் குடும்பம் முழுவதும் ரீடாவையே உபயோகித்து வருகிறோம். தைலங்களில் ரீடா ஹேர் டானிக் மிகச்சிறந்தது என்பதை நண்பர்கள் அறிவது திண்ணம்,

சுஷில் குமார்:—நான் ரீடா கூந்தல் டானிக்கை உபயோகித்திருக்கிறேன். என் கூந்தல் வளர்ச்சிக்கு அது உதவிபுரிகிறதாகக் கண்டேன். மயிர் உதிர்வதை நிறுத்துவதற்கும், மூளை குளிர்ச்சிக்கும் நான் இதை ய.வர்க்கும் சிபார்சு செய்கிறேன்.

ஜயந்த்:—நான் கடந்த சில மாதங்களாக ரீடா கூந்தல் டானிக்கை உபயோகித்ததில் அது சிறந்த தைலம் என கண்டேன், ஸ்திரீகளின் கூந்தல் வளர்ச்சிக்கு ஏற்ற டானிக். ஆடவர்களின் கூந்தலைப் பாதுகாக்க சிறந்த டானிக்.

கண்ணும்பா:—ரீடா எல்லாவிதத்திலும் சிறந்தது என மகிழ்ச்சியுடன் கூறுகிறேன். அது உண்மையாய் அவ்வளவு பயனுள்ளது.

புஷ்பவல்லி:—ஒரு வருஷ காலமாக என் மயிர் உதிர்ந்துகொண்டே இருந்தது. ரீடா உபயோகித்ததிலிருந்து மயிர் கொட்டுவது நின்றது. ரீடா என் கூந்தல் அழகைப் பாதுகாக்க உதவி புரிந்தது. ரீடா ஒரு சிறந்த கூந்தல் டானிக் என்பதே என் அபிப்பிராயம்.

சூர்ய குமாரி:—ரீடா நறுமணமுள்ளது, அதை தடவிக்கொண்டால் குளிர்ச்சியையூட்டுகிறது. நான் இனி ரீடாவையே உபயோகிக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறேன்.

கிருஷ்ணவேணி:—நான் சிலகாலமாக குளிர்ச்சியாக இருக்கும் நறுமண ரீடாவை உபயோகித்து வந்தேன். மயிர் உதிர்வதை தடுக்கவும் புது கேசத்தை வளர்க்கவும் ரீடா மிகச் சிறந்த டானிக் என்றே கூறுவேன். அந்நியநாடுகளிலிருந்து வரும் கூந்தல் டானிக்குகளைவிட ரீடாசிறந்தது என்பதே என் அபிப்பிராயம்.

வசுந்தரா தேவி:—நான் ரீடா உபயோகித்ததில் அடர்த்தியான கூந்தல் வளர்ச்சிக்கும், பாதுகாப்பும் அது சிறந்த கூந்தல் டானிக் என்று நிரூபித்துவிட்டது.

ஆர். பத்மா:—என்னை அழகூட்டும் என்னுடைய நீண்ட கருத்த கூந்தலுக்கு ரீடாதான் காரணம். அது எவ்வளவு சீக்கிரத்தில் பலனை அளிக்கிறது! அது என் கூந்தலை மிருதுவாக்கியதுடன் அடர்த்தியான வளர்ச்சியையும் அடைந்திருக்கிறது. கூந்தல் அழகுக்கு ரீடாவையேதான் அனைவருக்கும் சிபார்சு செய்வேன்.

ராஜம்மா:—கடந்த இரண்டு மூன்று மாதங்களாக நான் ரீடா உபயோகித்ததில் எவ்வித கூந்தல் சம்பந்த உபத்திரவங்களுக்கும் அது இணையற்றது என்று அறிந்தேன். அதில் கூந்தல் வளர்ச்சிக்குத் தேவையானதும் கேச உபத்திரவங்களைத் தடுப்பதுமான மருந்துகள் இருக்கின்றன. அடர்த்தியாக அழகான கூந்தல் வளர்ச்சி விரும்பும் ஸ்திரீகள் அனைவருக்கும் ரீடா சாலச்சிறந்தது என்றே கூறுவேன்.

லக்ஷிமிபாய்:—சில காலமாக ரீடா நான் உபயோகித்ததில் அது ஈடு இணையற்றது என்று எனக்குத் தோன்றுகிறது.

வி. என். ஜானகி:—நான் வெகு நாட்களாக ரீடா கூந்தல் டானிக்கை உபயோகித்திருக்கிறேன். அது கூந்தல் வளர்ச்சிக்கும் கூந்தல் பாதுகாக்கவும் சிறந்த டானிக்.

எ. ஆர். சகுந்தலா:— நான் அனேக நாட்களாக ரீடா உபயோகிக்கிறேன். அது அளிக்கும் பயன் ஏராளம்.

ரீடா ஹேர் டானிக்

Regd. No 2314.

தரகரை நம்பினல் . . .

நீங்கள் மோசம் அடைவீர்கள்

வைரம் வாங்குவதில் மிதமிஞ்சி ஜாக்கிரதை யுள்ளவர் வியாபாரியின் நாணயத்தை நம்பாமல் மூன்ரும் மனிதரை நம்பினுல் ஏமாற்றமடைவர்.

தரகர் தன்னுடைய நலனுக்கே பாடுபடுவார். சுய நலனுக்காக தனக்கு சகாவான வியாபாரியிடமே விகிதம் நிர்ணயித்துக்கொள்வார்.

அதிகமான வரும்படி கிடைக்கும் இடத்திற்கே அவர் வியாபாரத்துக்கு சிபார்சு செய்வார். அதனுல் உங்களுக்கு சிறந்த ரகம் கிடைக்காது. உங்கள் நலன் பாதிக்கப்படும்.

★ புகழ் பெற்ற வியாபாரிகளிடம் நேருக்கு நேர் வியாபாரம் செய்வதே உங்களுக்கு நலனைத் தரும்.

ஸுராஜ்மல்ஸ்

50 வருஷப் புகழ்பெற்ற வைர வியாபாரிகள்.

313, நேதாஜி ரோட், : : சென்னை.